ஆகஸ்ட் 14 - 20, 2005 August 14 - 20, 2005 28 பக்கங்கள் 16.00

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI
සුඩර් ඔළි
வார மலர்





ஆபத்தான சமிக்ஞை



சந்திரிக்காவின் சதிவலையில் மஹிந்த



வாரிசு ரெடி?



# ஒற்றுமையே எமது பலம்!

# ஆபத்தான சமிக்ஞை



யாழ்ப்பாணத்தின் கள நிலைவரங்கள் அண்மைக்காலமாக தீவிரமாக மாற்றமடைந்து வருகின்றன. சில வாரங்களுள் நடந்த சம்பவங்கள் அதன் உண்மை நிலைமையைக் கோடிட்டுக் காட்டுகின்றன.

இனியொரு யுத்தம் வெடித்தால் அது யாழ்ப்பாணத்தை பிரதானமாக மையப்படுத்தியே நடைபெறும் என்ற கருத்து நிலவிவரும் சூழலில் புலிகளும், படைத்தரப்பும் யாழில் தமது எதிர்கால நடவடிக்கைகளின் நன்மைகருதி தமக்கு ஏற்றமுறையில் ஏற்படுத்தியுள்ள வலைப்பின்னல்கள் மிகவும் இறுக்கமானவையாக இருப்பதாக இருதரப்பும் கருதுகின்றன.

அண்மையில் யாழில் பாதுகாப்பு மிக்க பகுதியில் வைத்து ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார். (14 வயதில் ஈ.பி.டி.பி.யில் இணைந்தவராம்) அடுத்த நாளே அச்சுவேலிப் பகுதியில் புளொட் உறுப்பினர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அவ்வப்போது யாழில் தாக்குதல்கள் குறிப்பாக தமிழ்க் குழுக்கள் மீது நடைபெற்று வருகின்றன. எனினும் அண்மைக் காலங்களில் தொடர்ச்சியாக நடைபெற்று வரும் இச்சம்பவங்கள், புலிகள் இனியொரு யுத்தம் ஏற்பட்டாலும் யாழில் உறுதியாக நிற்கக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளதாகவே கருதப்படுகிறது.

இந்த நிலையில்தான் இணுவில் சம்பவம் நிகழ்ந்தது.

யாழ். காங்கேசன்துறை வீதியில் இணுவில் சந்திக்கு அருகில் உள்ள சிகை அலங்கரிப்பு நிலையம் ஒன்றுக்கு படை அதிகாரி ஒருவரும் அவருக்குப் பாதுகாப்பாக சில சிப்பாய்களும் சென்றனர். படை அதிகாரி உள்ளே சென்று முடிவெட்டிக் கொண்டிருந்த சமயம் சிப்பாய் ஒருவரின் கையிலிருந்த துப்பாக்கி திடீரென குண்டுகளை உமிழ்ந்தது.

இச்சம்பவத்தில் அங்கு பணிபுரிந்த காந்தருபன் (வயது-23), கே.யோகதாஸ் (வயது-24) ஆகியோர் இரத்த வெள்ளத்தில் கிடந்தனர். உடனடியாக அப்பகுதிக்கு விரைந்த பொதுமக்கள் காயமடைந்தவர்களை யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டுசென்ற போதிலும் இடைவழியில் காந்தருபன் உயிரிழந்தார். அவரது வலது கண்ணில் குண்டு பாய்ந்திருந்தது.



இணுவில் சலூனில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி இறந்த இளைஞனின் சடலம்.

மற்றவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

இதனிடையே ஆத்திரமடைந்த பொதுமக்கள் மேற்படி சம்பவத்துடன் தொடர்புடைய படையினரை விரட்டிச் சென்றனர். எனினும் அப்படையினர் இணுவில் படைமுகாமினுள் நுழைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் திரண்ட பல நூற்றுக்கணக்கான பொதுமக்கள் ஆத்திரம் மேலிட்டதால் வீதிகளை மறித்தனர். ரயர்களைப் போட்டு எரித்தனர். அங்கு விரைந்த படையினர் மீதும் படை வாகனங்கள் மீதும் கல் எறிந்தனர். இதனையடுத்து யாழ் நகரிலிருந்து படையினரும், பொலிஸாரும் அனுப்பப்பட்டனர். யாழ். பொலிஸ் அத்தியட்சகர் சார்ள்ஸ் விஜேயவர்தன தலைமையில் பொலிஸ் கலகம் அடக்கும் பொலிஸாரும் வந்திருந்தனர்.

நீதி கேட்ட மக்கள் மீது இணுவில் துரை வீதிப் பகுதியில் வைத்து அத்தியட்சகர் சார்ள்ஸ் விஜேவர்த்தனவின் உத்தரவின்படி கண்ணீர் புகைக் குண்டுகள் வீசித் தாக்குதல் நடத்தப்பட்டது. எனினும், இளைஞர் கூட்டம் கூடியது. மேலும் மக்கள் திரண்டெழும் சாத்தியம் உள்ளதை உணர்ந்த அத்தியட்சகர் தமது தரப்பு தவறை மூடி மறைத்து மக்களை கலைந்து செல்லுமாறு தந்திரமாக பேசவந்தார். கூடவே பாதுகாப்புக்கு இரு பொலிஸாரும் வந்தனர்.

ஆத்திரம் கொப்பளிக்க நின்ற மக்கள் கூட்டம் பொலிஸ் அத்தியட்சகரை குண்டுக்கட்டாக தூக்கிக் கொண்டு சென்றது. மறைவிடம் ஒன்றுக்கு அவர் கொண்டு செல்லப்பட்டார். அவரின் உடைகள் மாற்றப்பட்டு, அவர் மீது கடும் தாக்குதல் நடத்தப்பட்டது. பின்னர் மாலை 6 மணியளவில் இணுவிலுக்கும், சுதுமலைக்கும் இடையில் உள்ள பாலாவோடை என்ற இடத்தில் ஒழுங்கை ஒன்றினுள் வெட்டுக் காயங்களுடன் அவரின் சடலம் மீட்கப்பட்டது.



தாக்கப்பட்டு கொலைசெய்யப்பட்ட யாழ். மாவட்ட பொலிஸ் அத்தியட்சகரின் சடலம்

## ஊரடங்கு

இதையடுத்து இராணுவம் தனது வழமையான பாணியில் ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்தியது. இராணுவத்தினதும், பொலிஸாரினதும் வன்முறைக்கு உடனடியாகவே பொதுமக்கள் பதிலடி கொடுத்திருப்பது வரலாற்றில் இதுவே முதல்முறை. படை வன்முறைகள் எதிர்காலத்தில் நிகழா வண்ணம் பார்த்துக் கொள்வது அரசினதும், படைகளினதும் பொறுப்பாகும்.

படைத்தரப்பு தவறுதலாகவே துப்பாக்கி வெடித்ததாகக் கூறுவது நகைப்புக்கிடமானது. மக்கள் சந்தடிமிக்கப் பகுதியில் படையினர் யுத்தமுனையில் நிற்பதுபோல் துப்பாக்கியைத் தயார் நிலையில் ('லோட்' செய்துகொண்டு) வைத்திருந்த தேவை ஏன் எனவும், படையினருக்கு முடிவெட்ட படை முகாம்களிலேயே ஏற்பாடு உள்ளது, எனவே, வெளியே கடைக்கு வரவேண்டிய தேவை ஏன்? எனவும் மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். படையினர் உண்மையில் தாக்குதல் நடத்தும் நோக்குடனேயே உலாவந்தனர் என மக்கள் அடித்துக் கூறுகின்றனர்.

யாழில் நடக்கும் படையினர் புரியும் இவ்வாறான கொலைகள் புதியதல்ல. அண்மையில் கூட குருநகர் பகுதியில் படையினரின் மின்சாரக் கம்பிகளுக்குள் சிக்குண்டு அப்பாவி மீனவர் ஒருவர் உயிரிழந்திருந்தார். முன்னர் படைத்தரப்பு, வாகன விபத்துகள் மூலம் பல அப்பாவிகளின் உயிரைப் பலி கொண்டிருந்தது.

எதிர்காலத்தில் இம் மக்களின் எதிர்ப்பு படையினருக்கு நிழலாடிக் கொண்டேயிருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

ஜனாதிபதி சந்திரிக்கா இணுவில் சம்பவங்களைக் கண்டிக்கிறார். தனது கடந்த போர் ஆட்சியில் தொகையாக மக்கள் கொல்லப்பட்டபோது கண்மூடியிருந்தார் அவர். மக்களால் ஒரு பதிலடி வழங்கப்பட்டபோதுதான் அவரின் கண் திறந்துகொண்டது.

உண்மையில் இந்தச் சம்பவம் அனைவருக்கும் ஒன்றை எடுத்துச் சொல்லியுள்ளது. மக்கள் சமாதானத்தின் மீது நம்பிக்கை இழந்துவிட்டனர், மக்களின் பொறுமை எல்லை கடந்துவிட்டது என்பதுதான்.

## பின்கலன்

அண்மைக்காலமாக தமிழர் தாயகப் பகுதிகளில் இருந்து தலைவர் பிரபாகரனுக்கு போரைத் தொடங்குமாறு கோரி மகஜர்கள் அனுப்பிவந்த நிலையில்தான் இணுவில் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

'அவலத்தைத் தந்தவனுக்கே அதைத் திருப்பிக் கொடு' என விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் அடிக்கடி சொல்லுவதுண்டு. உண்மையில் அதுதான் இணுவிலிலும் நடந்துள்ளது. இணுவில் சம்பவம் ஓர் ஆபத்தான சமிக்ஞை ஆகும்.

# வாசகர் இதயம் பேசுகிறது

சுடர் ஒளியில் வெளிவந்து கொண்டிருக்கும் ஊர்காவற்றுறை முன்னாள் எம்.பி., வி.நவரத்தினம் அவர்களின் 'தமிழ்த் தேசத்தின் வீழ்ச்சியும் எழுச்சியும்' அரசியல் கட்டுரைத் தொடர் சமீபகாலத்தில் வெளிவந்த மிகச் சிறந்த அரசியல் ஆய்வு கட்டுரையாகத் திகழ்கின்றது.

இந்தக் கட்டுரைத் தொடர் மூலம் ஐ.தே.கவின் ஆரம்பகால நடவடிக்கைகள் அதன் சுயரூபம், இலங்கையின் முதலாவது தேர்தல் வழக்கு (நாலாம் அத்தியாயம்) ஆகிய அரிய சிந்தனைக்குரிய தகவல்களைத் தெரிந்து கொள்ள முடிகின்றது.

'தாழ்ந்த பிரதேச இறப்பர் தோட்டங்களிலேயன்றி உயர்ந்த மலைப்பிரதேச தேயிலைத் தோட்டங்களில் சிங்களம் பேசும் தொழிலாளர்கள் வேலை செய்ய விரும்புவதில்லை என்னும் ஆய்வுத் தகவல் மலையக எழுத்தாளர்களாலுமே இதுவரை குறிப்பிடப்பட்டதாகத் தெரியவில்லை.

தமிழில் தரும் 'பேனா'வின் பிசிறில்லாத நடை, மொழிபெயர்ப்பு என்பதையே மறக்க வைக்கின்றது. வளர்க தங்கள் பணி.

*வி.எஸ்.நவமணி*
*அதியர் டெலா தமிழ் மகா வித்தியாலயம்*

ஜூலை 31 – ஆக. 06, 2005 சுடர்ஒளி வாரமலரில் சக்தி டி.வி.நிகழ்ச்சி நிரல் ஒன்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனது கேள்வி என்னவென்றால் ஆங்கிலத்தில் SHAKTHY T.V என்றும் தமிழில் சக்தி டி.வி. என்றும் உள்ளது. இதில் ஆங்கிலத்தில் SHAKTHY T.V என்ற சொல்லைசக்தி டி.வி என்று குறிப்பிடலாமா என்பதே? T.V க்கும் டி.விக்கும் வேற்றுமை உள்ளதுபோல விளங்குகின்றேன். பத்திரிகையில் சொற்களை சரியாகவே எழுதுவார்கள் என்பது எனது எண்ணம். ஆகவே இதில் எது சரியானது என்பதை அறியத்தரவும்.

இதே நிகழ்ச்சி நிரலில் செய்திகள் (எம்.ரி.வி) என்றும் உள்ளது. தமிழ் நாட்டில் Sun T.Vயை சன் டி.வி என்றும், Tea என்பதை டி என்றும் குறிப்பிடுகிறார்கள். தமிழ் நாடு ஒரு சினிமா நாடு. ஆங்கிலம் தமிழ் கலந்த தமிழ்ச் சொற்கள் அதிகம். நம் நாடு நல்ல தமிழ்ச் சொற்களையே பாவிக்கின்றது. ஆகையால் டி.வி என்பது சரியா ரி.விஎன்பது சரியா?

*மு.ஜெயம், கண்டி.*




ஜனாதிபதி சந்திரிக்காவின் மகன் விமுக்தி அண்மையில் 'நாய்களின் நலன் பேணும்' நம்பிக்கை நிதியத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட ஊடகவியலாளர் மாநாடொன்றில் உரையாற்றி இருப்பது அவர் அரசியல் அரங்கில் காலடி எடுத்து வைப்பதற்கான முன் முயற்சியா என்று அரசியல் வட்டாரங்களில் கிசுகிசுக்கப்படுகிறது.

இந்தியாவின் காங்கிரஸ் கட்சியின் தலைவியும் முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் மனைவியுமான சோனியா காந்தி தனது மகனான ராஹுல் காந்தியை இந்திய நாடாளுமன்ற அங்கத்தவராக்கி அரசியல் பயிற்சி அளித்து வருவதைப் போல ஜனாதிபதி சந்திரிக்காவும் தனது அரசியல் வாரிசை தயார் செய்யும் பணியில் இறங்கி விட்டாரா என்று அரசியல் வட்டாரங்களில் மேலும் கேள்வி எழுப்பப்படுகிறது.

குறிப்பிட்ட நம்பிக்கை நிதியம் ஒழுங்கு செய்திருந்த ஊடகவியலாளர் மாநாட்டில், நாட்டில் கட்டுப்பாடின்றி அலையும் நாய்களையும் பூனைகளையும் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரவேண்டிய அசியம் பற்றி வலியுறுத்தப்பட்டது. இதற்காக அமுல் நடத்த வேண்டிய சட்ட மூலத்தில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டியதனது கருத்துக்களையும் அது அப்போது வெளியிட்டது.

இந்த மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய விமுக்தி, நம்பிக்கை நிதியத்தின் முயற்சியை ஆதரித்து உரையாற்றியதோடு 'பிடித்துக் கொல்லும்' தண்டனை கைவிடப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

இது சம்பந்தமான கூட்டு நடவடிக்கைத் திட்டமொன்றை அமுலாக்க அரசாங்கம் தனியார் துறையுடனும் அரச சார்பற்ற நிறுவனங்களுடனும் பணியாற்ற வேண்டியது அவசியம் எனவும் அவர் அப்போது எடுத்துக் கூறினார்.

மேலும் ஒரு நாடு எவ்வளவு தூரம் நாகரிகமடைந்துள்ளது என்பதை அந்தநாடு எவ்வாறு மிருகங்களைக் கவனித்துக் கொள்கிறது என்பதிலிருந்து அறிந்து கொள்ளலாம் என்று மகாத்மாகாந்தி கூறியதை நினைவுபடுத்திய விமுக்தி, அயல் நாடுகளிலிருந்து இதற்கான பாடத்தைப் படிக்க வேண்டும் என்றும் வகை தொகையின்றி நாய்களையும் பூனைகளையும் கொல்லுவதை நிறுத்த வேண்டும் என்றும் தெரிவித்தார்.

பிரிட்டனில், மிருகவைத்தியத் துறையில் கல்வி பயின்றுவரும் விமுக்தி 'மிருக நலம்' தனக்கு விருப்பமான துறை என்றும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி சந்திரிக்கா தமது பதவியிலிருந்து விலகினாலும் கூட அரசியலில் தாம் நிலைத்து இருப்பதற்கான அத்திவாரத்தைப் போடுவதில் முனைப்புடன் செயற்பட்டுவருகிறார். அவர் அரசியலைத் தொடர்ந்தும் கட்டிப்பிடித்துக் கொண்டு இருக்க விரும்புவது காலத்தை வாங்கி தனது மகனை அரசியல் துறையில் பிரகாசிக்கச் செய்வதற்கான முயற்சியே எனவும் கூறப்படுகிறது.



*மிஷேல் பூக்கோ*

# அதிகாரத்தின்

**02**

# அரூப கரங்கள்



நூலக நிலவறைகளின் இருளுக்குள் நீண்ட காலமாக மறைந்திருந்த பழைய குற்றவியல் ஆவணங்களைத் தோண்டிப் பார்த்தபொழுது அந்தக் கொலைச் சம்பவத்தை அவர் கண்டுபிடித்தார். 1835இல் நோர்மண்டியிலுள்ள ஒரு கிராமத்தில் அந்தக் குடும்பக்கொலை நிகழ்ந்தது. பியர் ரிவியே (Pierre Riviere) என்ற 20 வயது நிரம்பிய ஓர் இளம் விவசாயி, கர்ப்பிணியான தனது தாயாரையும், 18 வயதுடைய தனது சகோதரியையும், 17 வயதுடைய தனது சகோதரனையும் கொலை செய்தான். கைக் கோடரி ஒன்றால் மண்டைகளைப் பிளந்து மிகக் கோரமான முறையில் இந்தக் கொலைகளைப் புரிந்துவிட்டு தலைமறைவாகிய அவனை, சில நாட்களின் பின்னர் காவற்றுறையினர் கைதுசெய்தனர். அன்று, பிரான்ஸ் நாட்டில் இந்தக் கொலைச் சம்பவம் மிகவும் பரபரப்பை ஏற்படுத்தியது. நீதிமன்றத்தில் நீண்ட விசாரணை நடந்தது. அவனைப் பைத்தியக்காரனாக நீதிமன்றம் கண்டது. இறுதியில், பியர் ரிவியேக்கு ஆயுட் தண்டனை விதிக்கப்பட்டது. சிறையில் நான்கு ஆண்டுகளைக் கழித்த பின்னர் அவன் தற்கொலை செய்துகொண்டான்.

இந்தக் கொலை வழக்கில் ஒரு விடயம் பூக்கோவின் கவனத்தை ஈர்த்தது. கொலையாளியான பியர் ரிவியே, வழக்கு விசாரணை நிகழ்ந்துகொண்டிருந்த காலகட்டத்தில் தனது சுயசரிதையைச் சுருக்கமாக எழுதியிருந்தான். கையெழுத்தில் நாற்பது பக்கங்களைக் கொண்ட இந்த ஆவணத்தில், ரிவியே தனது குடும்ப வாழ்வனுபவத்தைத் துல்லியமாக விபரித்திருக்கிறான்.

தனக்கும் தனது பெற்றோருக்கும் மத்தியிலான சிக்கலான உறவு பற்றியும், தனது மனவுலகச் சலனங்கள் பற்றியும், தாய் சகோதரர்கள் மீது தான் கொண்டிருந்த வக்கிர உணர்வுகள் பற்றியும், கொலைகள் செய்வதற்குத் தன்னைத் தூண்டிய காரணிகள் பற்றியும் மிகவும் துலக்கமாக, விளக்கமாக, சித்தத் தெளிவுடன் அவன் எழுதியிருக்கிறான். உண்மை விளக்கமாக, ஒப்புதல் வாக்குமூலமாக அமைந்த இந்த முக்கிய ஆவணம் வழக்கு விசாரணையின்போது இருட்டடிப்புச் செய்யப்பட்டமை பூக்கோவுக்கு வியப்பைக் கொடுத்தது. ரிவியேயின் சொந்தக் கதை கேட்பார் எவருமின்றி சட்டத்தின் இருட்டறைக்குள் புதைக்கப்பட்டது ஏன்? அவனது விபரீத செயலுக்கு அவன் கொடுத்த விளக்கத்தை நீதியுலகம் கருத்தில் எடுக்காதது ஏன்? அவனது ஆன்மாவின் உண்மைக் குரலை மறைத்துவிட்டு, மற்றவர்களின் மதிப்பாய்விலிருந்து அவனுக்குப் பைத்தியப் பட்டம் வழங்கப்பட்டது ஏன்? இவை பற்றி 'அகழாய்வு' செய்த பூக்கோ, இந்தச் சமூக நிகழ்வின் முழுப்பரிமாணத்தையும் விளக்கும் நோக்கில் 1973ஆம் ஆண்டு ஒரு சிறு நூலை வெளியிட்டார். இவ்வழக்குத் தொடர்பான முக்கிய ஆவணங்களை இந்நூல் தொகுத்துத் தருகிறது. இந்தத் தொகுப்பில், அரச தரப்பு வழக்கறிஞரின் குற்றப்பத்திரிகை, சட்டவாளரின் வாதங்கள், சாட்சிகளின் வாக்குமூலங்கள், மருத்துவரின் மதிப்பாய்வுகள், மனவியல் நிபுணரின் கருத்துரைகள், நீதிபதியின் குறிப்புகள், பத்திரிகையின் செய்தி அறிக்கைகள் எனப் பல ஆவணங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. நூலின் மையப்பகுதியில் பியர் ரிவியேயின் சுயசரிதை, அவன் எழுதியபடியே திருத்தமின்றிப் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. நூலின் பிற்பகுதி பூக்கோவினதும் வேறு சிலரதும் கருத்துரைகள் கொண்டதாக அமைகிறது.

நீதிமன்றத் தீர்ப்பு பற்றியோ, குற்றவாளியின் குற்றச்செயல் பற்றியோ இந்த நூலில் எவ்வித விமர்சனங்களோ, வியாக்கியானங்களோ தரப்படவில்லை. அது தமது நோக்கமில்லை என்கிறார் பூக்கோ. ஒரு சம்பவத்தை, ஒரு சமூக நிகழ்வை, ஒரு மனிதன் புரிந்த குரூரச் செயலை, அந்தச் செயலோடு சம்பந்தப்படாத மற்றவர்கள், பல்வேறு துறைசார்ந்த நிபுணர்கள், அறிஞர்கள், அதிகாரிகள் எவ்வாறு அணுகுகிறார்கள், எவ்வாறு பார்க்கிறார்கள், எவ்வாறு மதிப்பாய்வு செய்கிறார்கள் என்பதை இந்நூல் சூசகமாகச் சுட்டிக்காட்ட விழைகிறது. இந்த நிகழ்வில் பல்வேறு அறிவுலகங்கள் சங்கமிக்கின்றன. சட்டம், மருத்துவம், மனவியல், மனநோயியல், குற்றவியல் போன்ற பல்வேறு அறிவுலகங்களின் கருத்தாடல் களமாக இந்த நிகழ்வு அமைகிறது. இந்த அறிவுலகக் கருத்தாடலில் இச்செயலுக்குப் பொறுப்பாளியான, இந்நிகழ்வின் கதாநாயகனான பியர் ரிவியேயின் கருத்தை எவருமே கருத்தில் எடுக்கவில்லை. அவனது கருத்தைக் கருத்தாகவும் கருதவில்லை. அவனது செயலை வைத்தே அவனை ஒரு பித்தனாக, சித்தக் கோளாறு பிடித்தவனாக அறிவுலகங்கள் தீர்மானித்து விடுகின்றன. ஆனால், ரிவியே மௌனியாக நிற்கவில்லை. சாவின் விளிம்பில் நின்றபடி, அவன் தனது சரித்திரத்தை எழுதியிருக்கிறான். தனது எண்ணங்களை எழுத்தில் வார்த்து, தனது செயலுக்குக் காரணம் கற்பித்திருக்கிறான். அந்தச் சுயசரிதையில் தனது தாயை ஒரு கொடியவளாகச் சித்திரித்திருக்கிறான். நல்ல மனிதரான தனது தந்தையை முழுக் குடும்பமும் சேர்ந்து வதைத்து வந்ததாகச் சொல்லியிருக்கிறான். "நான் எனது தந்தையை மிகவும் ஆழமாக நேசித்தேன். அவர் அனுபவித்த துன்பம் எனது மனதை புண்படுத்தியது. கடைசி நாட்களில் அவர் பட்ட துயரமும், சோதனையும் என்னை ஆழமாகப் பாதித்தன. இது பற்றிய எண்ணங்களே என்னை முழுமையாக ஆட்கொண்டன. ஒரு மாதத்திற்கு முன்னரே அந்தப் பயங்கரத்திட்டம் பற்றி நான் எனது மனதில் ஒரு படத்தை வரைந்து கொண்டேன். எனது தாய், சகோதரன், சகோதரி மீது நான் அன்பும் மதிப்பும் கொள்ள வேண்டும் எனக் கூறும் அறப் பண்புகள் எனது மனதிலிருந்து மறைந்து கொண்டன. விசர் நாய்களின், கொடிய விலங்குகளின் அதிகாரப் பிடிக்குள் சிக்கி அலைக்கழிக்கப்பட்டு வரும் எனது தந்தைக்காக ஆயுதம் ஏந்த வேண்டும் என நான் நினைத்தேன். இப்படியான கொடும் செயலை மதமானது தடைசெய்திருக்கிறது என்பதும் எனக்குத் தெரியும். ஆனால், மதத்தின் நெறிகளை நான் கருத்தில் எடுக்கவில்லை. என் மூலமாக தனது தெய்வீக நீதியை நிறைவுசெய்ய இறைவன் விதித்திருக்கலாம் என்றும் கூட எண்ணினேன். மனிதர்களின் தர்மம் பற்றியும், சமூக ஒழுங்கமைப்பின் விதிகள் பற்றியும் நான் அறிவேன். மனிதர்கள் மானம் கெட்டவர்கள்; இழிசனர்கள். இவர்களை விட நான் புத்திசாலி.... நான் மனித சட்டங்களை மறுதலிக்கத் துணிந்தேன். எனது தந்தைக்காக எனது உயிரையும் அர்ப்பணிப்பதில் நான் அழியாப் புகழையும், இறவா நிலையையும் அடையலாமென நினைத்தேன்.... ஒரு அரசனுக்காக, ஒரு நாட்டிற்காக எத்தனையோ போர் வீரர்கள் மடிந்து போகிறார்கள்... மன்னனைத் தெரியாதவர்கள் மன்னனின் இலட்சியத்திற்காக மடியும் பொழுது, நான் நேசித்து வழிபடும் என் தந்தைக்காக, என் தந்தையின் விடிவிற்காக எனது உயிரை மாய்த்துக் கொள்ளக் கூடாதா...? இப்படியான எண்ணங்கள் எனது மனத்திரையில் ஓடி, எனது செயலுக்குத் தூபமிட்டன..." என்று எழுதியிருக்கிறான் ரிவியே.

இது ஒரு பைத்தியக்காரனின் அர்த்தமற்ற பிதற்றலல்ல என்கிறார் பூக்கோ. ரிவியேயின் எழுத்துக்களில் ஒரு தர்க்கீகம் இழையோடுகிறது. காரண காரியத் தொடர்புடையதான ஒரு உள்நோக்கம் இருக்கிறது. அவனது எழுத்துக்களில் ஒரு விபரீதமான ஆசை புதைந்து கிடக்கிறது. அந்த விபரீதமான ஆசைக்கும், எழுத்துக்கும், செயலுக்கும் மத்தியில் பிரிக்கமுடியாத ஒரு தொடர்பு இருக்கிறது. இவற்றிற்கெல்லாம் கதாநாயகன் அவனேதான். அந்தக் கதாநாயகனின் குரலை, தனது செயலுக்கு அர்த்தம் கற்பிக்கும் தர்க்கீகத்தை, சமூக உலகமானது கருத்தில் கொள்ளவில்லை என்கிறார் பூக்கோ. சமூகத்திற்கு ஒரு தர்க்கீகம் இருக்கிறது. நியாயப்பாடு இருக்கிறது. நியமம் இருக்கிறது. அந்தத் தர்க்கீகத்திற்கும், நெறிகளுக்கும் பொருந்தாத குரல்களை, பைத்திய உலகத்தின் இருளறைக்குள் மூடிவிடுகிறது சமூகம். அப்படியான ஒரு மனிதக் குரலையே வரலாற்றின் புதைகுழியிலிருந்து மீட்டெடுக்க முனைந்திருக்கிறார் பூக்கோ.



வழக்காடல் என்ற சமூக நிகழ்வில் சொல்லாடல் நிகழ்கிறது. அறிவுலக நிபுணர்களின் கருத்துப்போர் நிகழ்கிறது. அறிவுலகங்கள் ஒன்றோடு ஒன்று பலப்பரீட்சை நடத்தி அதிகார உலகத்திற்கு சேவையாற்றும் ஒருவிந்தையானநிகழ்வே இங்கு இடம்பெறுகிறது. நீதித்தேவன் குடியிருக்கும் கோவிலல்ல நீதிமன்றம். அது அதிகாரம் கோலோச்சும் நிறுவனம். இங்கு அறிவுலக நிபுணத்துவம் அதிகாரத்தை நியாயப்படுத்தி, அதிகாரத்தின் கரங்களை வலுப்படுத்த முனைகிறது. அறிவும், அதிகாரமும் கூட்டுச் சேர்ந்து அரங்கேற்றும் ஒரு சமூக நாடகமாகவே பியர் ரிவியேயின் கொலை வழக்கை சித்திரிக்கிறார் பூக்கோ. இது கதாநாயகனின் கருத்தாடல் நிகழாத ஊமை நாடகம் என்பது அவரது கருத்து.

நீதிமுறை பற்றியும், குற்றவியல் பற்றியும் தொடர்ந்து ஆய்வுகளை நிகழ்த்திய பூக்கோ, 1975இல் 'ஒழுங்கும் தண்டனையும்: சிறையின் பிறப்பு' (Discipline and Punish: The Birth of the Prison) என்ற நூலை வெளியிட்டார். ஆரம்பத்தில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய இந்த ஆய்வுநூல் ஈற்றில் பூக்கோவுக்கு அனைத்துலகப் புகழை ஈட்டிக் கொடுத்தது.

தண்டனையின் சகல பரிமாணங்களையும் இந்த நூல் அகழாய்வு செய்கிறது. தண்டனை என்பது அதிகார வெளிப்பாட்டின் ஒரு வடிவம். மனிதர்கள் மீது ஆதிக்கம் பிரயோகிக்கும் உத்தி. சமூகத்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஒரு நடைமுறை. தண்டனையானது எல்லாக் காலங்களிலும், எல்லாச் சமூகங்களிலும் இருந்து வருகிறது. அன்றொரு காலம் உடலை வதைக்கும் உத்தியாகக் கையாளப்பட்ட இந்நடைமுறை, இன்று 'ஆன்மாவை' சீர்திருத்தும் ஒழுங்குமுறைகளைக் கொண்டதாக புதிய பரிணாமம் எடுத்திருக்கிறது. இன்று தண்டனையின் முகம் மாறியிருக்கிறது. தண்டிக்கும் உத்திகள் மாறியிருக்கின்றன. தண்டனை என்ற போர்வையில், அதிகார உலகமானது மிகவும் நுட்பமான முறையில் மனிதர்களை நெறிப்படுத்தி, கட்டுப்படுத்தி சமூகப் பொம்மைகளாக மாற்றி வருகிறது. அதிகாரத்தின் இந்தச் செயல்நுட்ப வளர்ச்சிக்கு அறிவுலகங்கள் துணைபோகின்றன. இந்த மையக் கருத்தையே இந்நூல் மிகவும் திறம்பட எடுத்து விளக்குகிறது. இது பற்றி இனி விவரமாகப் பார்ப்போம்.

உடலை வதைசெய்யும் கொடூரத்திலிருந்து, உள்ளத்தை, வனையும், ஒழுங்குமுறை நுட்பமாக தண்டனையின் தந்திரோபாயம் மாற்றம் கண்டிருக்கும் வரலாற்றுக் கதையை 'ஒழுங்கும் தண்டனையும்' எடுத்துரைக்கிறது. அன்றைய காலத்து ஒரு கோரமான மரணதண்டனையை விவரணம்செய்து தனது நூலை ஆரம்பிக்கிறார் பூக்கோ.

1757ஆம் ஆண்டு, மார்ச் மாதம் பிரான்ஸ் நாட்டில் நிகழ்ந்த சம்பவம் அது. லூயி மன்னனைக் கொலை செய்ய முயற்சித்ததாக டேமியன் என்ற பொதுமகன் மீது குற்றம் சுமத்தப்படுகிறது. ஒரு பேனாக் கத்தியால் தாக்கி பிரஞ்சு மன்னனுக்கு சிறிய காயத்தை ஏற்படுத்தியிருந்தான் டேமியன். ஆயினும், அரச கொலை முயற்சி எனக் குற்றம் சுமத்தப்பட்டு அவனுக்குப் பகிரங்க மரண தண்டனை விதிக்கப்பட்டது. இம்மரண தண்டனை எவ்விதமான உடல்வதையுடன் நிறைவு செய்யப்பட வேண்டும் என்பதை அன்றைய அரச கட்டளை கீழ்க்கண்டவாறு விதித்தது.

"வெந்தணலில் வேகிய குறடுகளைக் கொண்டு அவனது மார்பிலிருந்தும், புயத்திலிருந்தும், தொடையிலிருந்தும் தசைகள் பிய்த்து எடுக்கப்பட வேண்டும். தசைகள் கிழிக்கப்பட்ட காயங்கள் மீது உருக்கிய ஈயமும், கொதிக்கும் எண்ணெயும் ஊற்றப்பட வேண்டும். மன்னனை கொலை செய்யும் நோக்குடன் கத்தியேந்திய அவனது வலது கரத்தை கந்தக அமிலத்தால் எரியூட்டிப் பொசுக்க வேண்டும். பின்னர், அவனது கைகளையும், கால்களையும் நாற்கோணமாக, நான்கு குதிரைகளில் கட்டியிழுத்து, நான்கு துண்டங்களாக அவனது உடலைப் பிய்த்தெறிய வேண்டும். ஈற்றில் துண்டாடப்பட்ட சதைப் பிண்டங்களை ஒன்று குவித்து அதனைத் தீமூட்டி எரிக்க வேண்டும்."

இந்தக் கோரமான சித்திரவதை எவ்வாறு நிகழ்த்தப்பட்டது என்ற விவரத்தையும், அந்தக் கொடுமைக்கு ஆளான மனிதன் கூச்சலிட்டுக் குளறி அழுது துடிதுடித்து இறந்த கோரத்தையும் அந்தச் சம்பவத்தை நேரில் கண்டவர்கள் எழுதிய குறிப்புகளிலிருந்து விவரிக்கின்றார் பூக்கோ. உடல் வதையைத் தாங்கமுடியாது "கடவுளே, என் மீது இரக்கம் காட்டும். யேசுவே என்னைக் காப்பாற்றும்" என அவன் வானதிரக் கத்தியபோது, அங்கு நின்ற ஒரு வயோதிபக் குருவானவர் கூட அவனுக்கு ஆறுதல் கூறத் துணியவில்லை. இறுதியில் நான்கு கோணத்திலுமாக நான்கு குதிரைகள் நிறுத்தப்பட்டு, அவன் கைகளிலும், கால்களிலும் கயிற்றினால் கட்டி இழுக்கப்பட்டபோது அவனது கைகால்கள் கிழிபடவில்லை. நீண்ட நேரமாக பல தடவைகள் குதிரைகளைக் கொண்டு முயன்றும் முடியவில்லை. இறுதியில் அவனது கை, கால்களைக் கத்தியால் வெட்டித் துண்டித்து, துண்டாடப்பட்ட சதைப் பிண்டங்கள் மீது விறகுகள் குவித்து தீமூட்டி எரிக்கப்பட்டதாம். இந்தப் பகிரங்க மரண தண்டனையை நிறைவு செய்ய பல மணி நேரம் சென்றதாம்.

உடல் உபாதையின் உச்சமாக இந்த மரண தண்டனை அமைந்தது. குற்றத்தை மிஞ்சியதாக டேமியனுக்கு இக்கொடூர தண்டனை வழங்கப்பட்டதற்குக் காரணம் இல்லாமல் இல்லை.

(தொடரும்)


**தமிழீழ விடுதலைப் புலிகளின்**
**மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தின்**
**மற்றொரு பரிமாணத்தை - பக்கத்தை -**
**அந்த மனிதருள் புதைந்திருக்கும்**
**இன்னொரு அதிசய ஜீவனை -**
**வெளிப்படுத்துகிறது**
**'விடுதலை' கட்டுரைத் தொகுப்பு.**

## விடுதலை

## மதியுரைஞர் பாலாவின் மற்றொரு பரிமாணம்

# தலைநகரை அசத்திவிட்ட மலையக தலைமைகள்

இந்திய வம்சாவளியினரை இழிவு படுத்திப் பேசிய பிரதி அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து முழு மலையகமுமே ஒரு நாள் ஸ்தம்பிதம் அடைந்து விட்டது.

எதிரும் புதிருமான மலையக தலைமைகள் ஒன்றுபட்டுவிட்டன. அரசியல் பேதங்களை மறந்து தலைநகரும், மலையகமும் சங்கமித்துவிட்டன.

இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தாற் போல இந்திய வம்சாவழியினரின் இப் போராட்டத்துக்கு, தமிழ்தேசிய கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளுடன் ஐ.தே.கட்சியும், இடதுசாரிக் கட்சிகளும் பூரண ஆதரவு வழங்கி இருந்தன.

ஒரு சமூகத்தை இழிவு படுத்திப் பேசிய பிரதி அமைச்சருக்கு எதிராகப் போர் கொடி ஏந்தி உள்ள மலையகத் தலைமைகள் எதிர் காலத்திலும் சமுதாய உணர்வுடன் ஒன்று பட்டால் மலையகத் தலைவர்கள் 'கிங்மேக்கர்'களாகி விட முடியும்.

சும்மாகிடந்த சங்கை ஊதிக்கெடுத்தான் ஆண்டி என்பது ஒரு பழமொழி. ஆனால், இன்றும் கூட அந்த ஆண்டியின் நிலையில் இருந்து கூத்தடிக்கின்றார் ஸ்ரீ.ல.சு.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதியின் செல்லப்பிள்ளையுமான தொழில் உறவு, மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா.

நாடாளுமன்றத்திலும் சரி பொது இடங்களிலும்சரி வேஷ்டியை மடித்துக் கட்டிக் கொண்டு முஷ்டியை முறுக்கும் ஒரு சண்டியர் என வர்ணிக்கப்படுபவர்தான் இந்த மேர்வின் சில்வா.

''நான் யாருக்கும் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. பயப்படவும்மாட்டேன். நான் நேர்மையானவன். எனது கைகள் கறைபடியாதவை. சட்ட விரோதமான செயல்களில் ஈடுபடமாட்டேன். சட்டத்தையும் ஒழுங்கையும் மதிப்பவன்'' என்று தனக்குத்தானே சேட்டிபிக்கட் கொடுத்துக் கொள்பவர் தான் இந்த மேர்வின் சில்வா.

இந்த மனிதனுக்கும் — அமைச்சுப் பதவிகளுக்கும் எப்போதுமே ஒத்துப்போவதில்லை. கடந்த வருடம் மேர்வின் சில்வா பிரதி தொழில் அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

### பெயரைக் கெடுக்க ஒரு பிள்ளை

பிரதி அமைச்சராக நியமிக்கப்பட்டு மூன்றே தினங்களில் இரவு களியாட்ட விடுதித் தாக்குதலில் சம்பந்தப்படுத்தப்பட்டார்.

வெளிநாட்டில் இருந்து வந்த தனது மகனை, துப்பாக்கி சகிதம் நண்பர்களுடன் இரவு களியாட்ட விடுதிக்குள் அனுமதிக்க வில்லை என்பதால் காடையர் கூட்டத்துடன் சென்று அந்த களியாட்ட விடுதியையே அடித்து நொறுக்கினார். இந்த காடையர்கள் அங்கிருந்தவர்களின் செல்லிடத் தொலை பேசிகள் பலவற்றை அபகரித்துச் சென்றனர்



எனவும் பொலிஸில் முறைப்பாடு செய்யப் பட்டது.

எனினும், 'ஐயோ கடவுளே! இந்த சம்பவத்துக்கும், எனக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. எனக்கு எதுவுமே தெரியாது' என்று சாதித்தும் விட்டார் மேர்வின் சில்வா.

முழுப்பூசணிக்காயை சோற்றில் மறைத்து விட்டாலும் கூட மனச்சாட்சி அவரை உறுத்தி இருக்குமோ என்னவோ; தனக்கு வழங்கப் பட்ட பிரதி அமைச்சர் பதவியை மட்டும் இராஜினாமாச் செய்துவிட்டார்.

இப்போதும் அவர் அதே தொழில் அமைச்சுக்கு மீண்டும் பிரதி அமைச்சராக நியமிக் கப்பட்டுள்ளார். நேரம் காலம் பார்க்காமல் இவருக்கு வழங்கப்பட்ட பிரதி அமைச்சர் பதவி இப்போதும் அவரை திரும்பவும் வம்பில்மாட்டிவிட்டது.

பெயர் சொல்ல ஒரு பிள்ளை என்பார்கள். ஆனால், மேர்வின் சில்வாவின் பெயரைக் கெடுக்கவே வந்துள்ளான் அவரது மகன் என ஸ்ரீ.ல.சு.கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் திட்டித் தீர்க்கின்றனர்.

விடுமுறையில் வந்த மேர்வின் சில்வாவின் செல்ல மகன் ஐந்து நட்சத்திர ஹோட்டலில் போட்ட ஆட்டம் அப்பன் மேர்வின் சில்வாவையே நிலை குலையச் செய்துவிட்டது.

பிறந்த நாள் விழாவைக் கொண்டாடிய மேர்வினின் புதல்வன், அங்கே கடமைக்கு வந்த போதை தடுப்புப் பிரிவுப் பொலிஸாரைத் தாக்கி காயப்படுத்தியதுடன், அப்பொலிஸாரைகடமையைச் செய்யவிடாமல் தடுத்தும் உள்ளார்.

ஆனால், இந்த பிரதி அமைச்சர் மேர்வின் சில்வாவோ, ''எனது மகன் என்னோடு அல்லவா அன்று நித்திரை செய்து கொண்டிருந்தான். அவன் மீது வீண் பழி சுமத்துகின்றார்கள்'' என்றுகூச்சல்போட்டார்.

அதேவேளை, தாக்குதலுக்கு உள்ளான பொலிஸாரும், காயப் பட்ட பொலிஸ் அதிகாரியும் தம் மீது தாக்குதல் நடத்தியது மேர்வின் சில்வாவின் மகனும், அவரது நண்பர்களும்தான் என திட்டவட்டமாகக் கூறுகின்றனர். கோட்டை பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர்.

### இந்தியத் தமிழர் மீது அவதூறு

ஊடகங்கள் எப்போதும் தமக்கு கிடைக்கும் செய்திகளை போட்டி போட்டுக் கொண்டு வெளியிடுவது சகஜம். அது அவர்களின் கடமையும் கூட.

பிரதி அமைச்சர் மேர்வின் சில்வாவின் மகன் கோட்டை பொலிஸில் சரண் அடைந்து விட்டார். எந்த நேரத்திலும் நீதி மன்றத்தில் ஆஜர் செய்யப்படலாம் என்ற தகவல் கிடைத்தவுடன் கோட்டைப் பிரதம நீதிவான் நீதிமன்றுக்கும், கோட்டை பொலிஸ் நிலையத்துக்கும் கமெராக்களுடன் விரைந்தனர் ஊடகவியலாளர்கள்.

அங்கு பிரசன்னமான பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா ருத்திரதாண்டவம் ஆடிவிட்டார். ஊடகவியலாளர்களை மிகவும் மட்டமாகப் பேசினார். ஜங்கி துவைப்பவர்கள் என்றும், காசுக்கு விலை போகிறவர்கள் என்றும் எழுதமுடியாத வார்த்தைகளால் துஷித்தார். அவருடைய இந்த ஆவேசப் பேச்சை தொலைக்காட்சிகள் அப்படியே நாட்டு மக்களுக்குப் போட்டுக் காட்டிவிட்டன.

அங்கே மேர்வின் சில்வா என்ன கூறினார்.

''இந்த இந்தியப் பறையர்களுக்கு நான் பயம் இல்லை. பாஸ் போட்டை தயாராக வைத்திருக்கச்சொல்லுங்கள். நாட்டை விட்டு விரட்டி அடிப்பேன்'' என்றுசண்டித்தனம்காட்டினார்.

இங்கேதான் மேர்வின் சில்வா வம்பை விலை கொடுத்து வாங்கிக் கொண்டார். இந்தியப் பறையர்கள் என்று கூறிய ஒரு வார்த்தை ஒரு சமூகத்தையே கொதித்து எழ வைத்துவிட்டது.

இந்திய வம்சாவளி மக்கள் அனைவரையும், அரசியல், தொழிற்சங்க, அமைப்பு பேதங்கள் இன்றி பிரதி அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு எதிராகக் கண்டனப் பேரணி ஒன்றையே நடத்த வைத்து விட்டது.

### யார் இந்த மேர்வின் சில்வா

'இந்தியப் பறையர்கள்' என்று பேசும் இந்த மேர்வின் சில்வா யார்? அவர் வழிபடும் புத்த பகவான் எங்கிருந்து வந்தவர். இலங்கையில் புத்த மதத்தைப் பரப்ப இங்கு வந்த சங்கமித்தையும், கவந்தீசனும் எங்கிருந்து வந்தனர்.

விஜயனின் வழித் தோன்றல்கள்தான் சிங்களவர்கள் என்கின்றனர். அவர்களின் வழித் தோன்றல்களான சிங்கபாகுவும் சிங்கவள்ளியும் யார்? இவர்களும்இந்தியாவில் இருந்து வந்தவர்கள்தானே! அப்படியானால் இவர்களையும் இந்திய பறையர்கள் என்று மேர்வின் சில்வா கூறுகின்றாரா?

தனிப்பட்ட முறையில் தறிகெட்டுப் போன தன் மகனைப் பாதுகாப்பதாக நினைத்துக் கொண்டு இந்திய சமுதாயத்தையே இழிவு படுத்திவிட்டார் மேர்வின் சில்வா.

இந்தியத் தமிழர்கள் என்ன துப்பு கெட்டவர்களா? இல்லை மானம் மரியாதை இழந்தவர்களா? உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே என்று கர்ச்சித்த பாரதியின் வழித்தோன்றல்கள் நாம்.

இதனை ஊர்ஜிதப்படுத்தும் வகையில் தலைநகரில் கூடிய கூட்டம் தலையா கடல் அலையா என பிரமிக்க வைத்து விட்டது.

### கட்சி பேதமின்றிஎதிர்ப்பு

கட்சி ரீதியாகவும், தொழிற்சங்க ரீதியாகவும் மலையகத்தில் இரண்டு துருவங்களாக இருந்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் — மலையக மக்கள் முன்னணி என்ற இரு சக்திகளும் ஒன்றிணைந்து விட்டன. இவற்றுடன் தலைநகரில் தனக்கென ஒரு சாம்ராஜ்யத்தைப் படைத்து சிறப்புடன் திகழும் மேல்மாகாண மக்கள் முன்னணியும் சங்கமித்துவிட்டது.

அது மட்டுமல்ல, இந்த நாட்டில் வாழும் தமிழ் பேசும் இனத்தவர் அனைவரும் சிங்கள பேரினவாதத்துக்கு எதிராக ஒரு குடையின் கீழ் அணிதிரள வேண்டும் எனக் கூறும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் சார்பில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தவிசாளர் பஷீர் சேகுதாவூத்தும், மசூர் மௌல்ானாவும், மேலும் பல இடதுசாரி கட்சித் தலைர்களும் இந்தப் பேரணியில் கலந்து கொண்டனர்.

ஐ.தே.க. சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் கலந்து கொண்டார்.

பிரதி அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு எதிராக இந்திய வம்சாவளி மக்கள் தொழிலாளி — முதலாளி, ஏழை—பணக்காரன் என்ற பேதத்தை மறந்து, அரசியல் கட்சி வேறுபாடுகள் இன்றி, தோளோடு தோள் நின்று ஆர்ப்பட்டம் செய்து தலைநகரையே பிரமிக்கச் செய்து விட்டனர்.

**இரா.புத்திரசிகாமணி**

இதுவரை ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள் கூடினோம், கூச்சல் போட்டோம் என்று கூடிக் கலைந்து விட்டனர்.

ஆனால், இந்திய வம்சாவளி அமைப்புகள் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியதோடு, பிரதி அமைச்சர் மேர்வின் சில்வாவை, பிரதி அமைச்சர் பதவியில் இருந்து நீக்க வேண்டும் எனக் கோரும் மகஜரை பிரதமரிடம் கையளித்துள்ளனர்.

இது வெறும் சாதாரணமான காகிதம் அல்ல;



இலங்கையில் வாழும் லட்சோபலட்ச இந்திய வம்சாவளி மக்களின் எண்ணக் குமுறல். பிரதமரும், அரசும் இதற்கு என்ன பதில் சொல்லப் போகின்றனர் என பொறுத்திருந்து பார்ப்போம்.

தமிழ் பேசும் மக்களின் தலைமைகள் ஒன்றிணைந்து நடத்திய போராட்டம் தலைநகரையே அசத்திவிட்டது. இந்த ஒற்றுமையும், புரிந்துணர்வும் நின்று நிலைத்தால் தமிழ் மக்களின் பேரம் பேசும் சக்தி மேலும் வலுவடையும் என்பது உறுதி.


அமெரிக்க Degree இலங்கையில்

BSc in Computer Science with Honours

in 2 Years (Fast Track) @ Low Cost

Degree Certificate awarded by : Trinity University (USA)

வெற்றிகரமாக இவ் Degree ஐ முடித்தவர்களுக்கு தொடர்ந்து UK, USA இல் MSc பயில்வதற்கான சகல ஒழுங்குகளும் செய்து தரப்படும். (Convocation in Sri Lanka) தகுதியானவர்களுக்கு உங்கள் தகுதிகளுக்கேற்ப (Educational / Professional Qualification / Working Experience) பரீட்சை விலக்களிக்கப்படும் (Exemption). எனவே குறுகிய காலத்தில் மிக குறைந்த கட்டணத்தில் ஓர் அமெரிக்க கணனிப்பட்டதாரியாகுங்கள்.

UK Degree - 1st Year in Sri Lanka

100% Gurantee for 2nd & 3rd Year Visa | 2nd & 3rd Year in UK

BSc in Computer Hardware Engineering and Networking

1st Year : Diploma Level : In Sri Lanka

(This Diploma Course you can finish in 06 month as a crush course & can go to UK)

Degree awarded by : University of London (UK) | One of the Top University in UK

Study in UK, LONDON September 2005 Intakes

for - Under Graduate and Post Graduate Degrees. (BSc, BA, BBA, MA, MSc, MBA, LLB etc.)

from - CECOS College, Thames Valley University (TVU) University of East London, Gateway2UK....

Individual Classes : Diploma in Computer Studies, Diploma in Web / Graphic Design, Diploma in Software Engineering (1Year), Dip. in Multimedia, DTP, Programming in VB, JAVA, C, C++, Visual C+, C#, ASP, Diploma in Dot Net, Flash, Dream weaver, PageMaker, CorelDRAW, Photoshop, Swish 3D, Accounting Packages & Internet & E-mail

Hightech International Computer College ஆனது Association of Computer Training Organization (ACTOS) இனால் அங்கீகரிக்கப்பட்ட தரம் வாய்ந்த ஓர் கணனி பயிற்சி கல்லூரியாகும். எமது மாணவர்களுக்கு இவற்றால் அங்கீகரிக்கப்பட்ட பெறுமதிவாய்ந்த சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

Affiliated with CECOS COLLEGE, London, UK.

Hightech International Computer College

No. 296 - 7th Floor, Galle Road, Wellawatta, Colombo -06

Contact : Miss. Nirmala (011) 5557725, (011) 5519993

(Location : Sea Side, Close to Delmon Hospital, in between Nations Trust Bank & NDB Bank)

Sachin

சுடர் ஒளி

ஆகஸ்ட் 14 - 20, 2005

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு—14 டெலிபோன்: 011-4734401—6
பாக்ஸ் : 011 - 4734404
E-mail: .editorial@sudaroli.com

## ஒற்றுமையே எமது பலம்

தமிழரின் தோலை உரித்து செருப்புத் தைப்பேன் என்று அன்று கூறினார் வெலிமடை எம்.பியாக இருந்த கே.எம்.பி. ராஜரட்ண. பச்சை இனவாதியான அவர் இதனால் சாதித்தது எதுவுமே இல்லை. இன்றைய இளம் சந்ததிக்கு ராஜரட்ண பற்றி எதுவுமே தெரியாது. சிங்கள மக்களும் அவரை மறந்து விட்டார்கள். தற்போது மற்றொரு ராஜரட்ண தோன்றி இருக்கிறார். அவர்தான் மேர்வின் சில்வா.

இனவாதம் பேசியதால் நாட்டுக்கு ஏற்பட்ட அழிவு எல்லோரும் அறிந்ததே. ஆனால் பேரினவாதிகள் இன்னும் பாடம் படிக்கவில்லை என்பதையே பிரதி அமைச்சர் மேர்வின் சில்வாவின் செயல் எடுத்துக் காட்டுகிறது.

இந்த நாட்டில் உள்ள இந்திய வம்சாவழி மக்களை மிகவும் கீழ்த்தரமான முறையில் பேசியது மூலம் அவர் தனது சுயரூபத்தை மட்டும் அல்ல தனது கட்சியின் சுயரூபத்தையும் வெளிக்காட்டி விட்டார்.

ஒரு பொறுப்புள்ள அமைச்சர் ஒரு சிறுபான்மைச் சமூகத்தினரை இப்படி இழிவு படுத்தியது சமீப கால வரலாற்றில் இடம் பெற்றிராத ஒன்று.

இதற்காக மேர்வின் சில்வா செம்மையாக வாங்கிக்கட்டிவிட்டார். என்றும் இல்லாதவாறு தமிழ், முஸ்லிம் மக்கள் ஒன்றிணைந்து தலைநகர் கொழும்பில் வரலாறு காணாத ஆர்ப்பாட்டமும் கண்டனப் பேரணியும் நடத்தி அவருக்கு நல்ல பாடம் படிப்பித்திருக்கின்றனர்.

பிரதி அமைச்சர் மேர்வின் சில்வாவை பதவி நீக்கம் செய்யக்கோரி அலரி மாளிகையில் வைத்து பிரதமரிடம் மகஜரும் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்திலும் கண்டனப் பேரணியிலும் மலையக மக்கள் முன்னணி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மேல் மாகாண மக்கள் முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ்தேசியக் கூட்டமைப்பு மற்றும் கொழும்பு வர்த்தகர் சங்கம் ஆகியவை பங்கு பற்றி இருந்தன. வாசுதேவ நாணயக்கார போன்ற இடது சாரிச் சிந்தனை உள்ள சிங்களத் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்திலும் கண்டனப் பேரணியிலும் உள்ள முக்கிய அம்சம் மலையக மக்களின் மூன்று முக்கிய அணிகளும் பங்கு பற்றியதே. மலையகத்தின் பல்வேறு அணிகளும் ஒன்றுபட்டது இது இரண்டாவது தடவை.

1998இல் தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு கோரி இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஹட்டனில் நடத்திய சத்தியாக்கிரகப்போராட்டத்தில் சகல மலையகத் தொழிற்சங்கங்களும் கலந்து கொண்டன.

மேர்வின் சில்வாவுக்கு எதிரான போராட்டத்தில் மற்றொரு முக்கிய அம்சம், புறக்கோட்டையில் உள்ள அனைத்து வர்த்தக நிலையங்களும் பகலுடன் மூடப்பட்டதும் மலையகம் முழுவதும் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்தினால் முடங்கியதுமே.

நாடு சுதந்திரம் அடைந்த நாளில் இருந்து தமிழ் மக்கள் மீது பேரினவாதிகள் மேற்கொண்டு வந்த அடக்கு முறைகள் தமிழ் மக்கள் ஒற்றுமைப்படவும், ஆயுதப் போராட்டத்தை ஆரம்பிக்கவும் வழிவகுத்தன.

தற்பொழுது இலங்கைத்தமிழர், இந்தியத் தமிழர், முஸ்லிம்கள் ஒன்றிணைவதற்கு வழிவகுத்திருக்கிறார் இனவாதியான மேர்வின் சில்வா. எதிர்காலத்திலும் இப்படியான பதிலடிகள் தொடரப் போகின்றன.

தமிழ் மக்களின் பலம் ஒன்றுமையே என்பதை மேர்வின் சில்வாவுக்கு எதிரான ஆர்ப்பாட்டமும் கண்டனப் பேரணியும் வெளிக்காட்டி இருக்கின்றன. இதே ஒற்றுமை தொடர வேண்டும்.

# சந்திரிக்காவின் சதிவலையில் மஹிந்த


மஹிந்த


சந்திரிக்கா

நீண்ட நாள் குத்துவெட்டுக்கள், குழிபறிப்புகளின் பின்னர் ஸ்ரீ.ல.சு.கட்சி தனது ஜனாதிபதி வேட்பாளரைத் தெரிவு செய்து அறிவித்துள்ளது.

ஆனால் ஜனாதிபதி சந்திரிக்கா, ஜனாதிபதி வேட்பாளராக மஹிந்த தெரிவாவதை உள்ளூர விரும்பவில்லை. சந்திரிக்காவைப் பொறுத்தவரையில் மஹிந்தவின் காலை வாருவதற்கான தெரிவே அது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த வெற்றிபெற முடியாது என்ற திடமான நம்பிக்கையில் தான் அவரது வேட்பாளர் நியமனத்துக்குப் பச்சைக்கொடி காட்டி இருக்கிறார் சந்திரிக்கா என்று கூறப்படுகிறது.

ஜனாதிபதி சந்திரிக்கா 2006 ஆம் ஆண்டு வரை ஜனாதிபதி தேர்தல் நடைபெறமாட்டாது என்று திட்டவட்டமாகத் தெரிவித்து வருகின்றபோதும் இந்த வருடம் நவம்பரில் இந்தத் தேர்தலை நடத்துவதற்கான அறிவிப்பை தேர்தல் கமிஷனர் வெளியிடுவார் என நம்பிக்கையுடன் எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனாதிபதி தேர்தல் களத்தில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஏற்கனவே குதித்து விட்டதால் ஸ்ரீ.ல.சு.கட்சிக்குள் தமது ஜனாதிபதி வேட்பாளரைத் தெரிவு செய்தே ஆகவேண்டும் என்ற நெருக்கடி வலுப்பெற்று வந்தது. கட்சி தனது வேட்பாளரைத் தெரிவு செய்யும் போது தான், அவரும் ஏட்டிக்குப் போட்டியாக தேர்தல் களத்தில் காய்களை நகர்த்த முடியும் என அவர்கள் நினைத்தார்கள்.

ஆனால் ஜனாதிபதி சந்திரிக்காவின் மூளை வேறுதிசையில் வேலை செய்து கொண்டிருந்தது.

'ஜனாதிபதி வேட்பாளராக மஹிந்த தெரிவு செய்யப்பட்டால் தாம் நொண்டிவாத்தின் நிலைக்குத் தள்ளப்படுவார். கட்சி இயந்திரம் மஹிந்தவின் வெற்றியிலேயே குறியாக இருப்பதால் அனைவரும் அவருக்குச் சார்பாகவே செயற்படுவர், – இப்படி ஜனாதிபதியின் மூளை துருதுருத்துக் கொண்டிருந்தது.

ஜனாதிபதியைப் பொறுத்தவரை ஸ்ரீ.ல.சு.கட்சி பண்டாரநாயக்கா குடும்பத்தின் கைகளிலேயே இருக்க வேண்டும். ஆதலால் மஹிந்த ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்தியாக வேண்டும் என்பதே முடிவாக இருந்தது.

அதேநேரம் மஹிந்தவுக்கு எதிராக ஜனாதிபதி வேட்பாளராக தெரிவு செய்யக்கூடிய ஒருவர் கட்சிக்குள் இருக்கிறாரென்றால் அவர் அனுரா பண்டாரநாயக்காதான். ஆனால் அவரது தெரிவை, கட்சியோ அல்லது நாடோ பொருத்தமான தெரிவாக ஏற்றுக் கொள்ள மாட்டாது என்பதும் ஜனாதிபதிக்குத் தெரியும்.

கட்சியைப் பொறுத்தவரை ரணில் விக்கிரமசிங்காவுக்கு தேர்தலில் சவாலாக விளங்கக் கூடியவர் மஹிந்த ராஜபக்ஷவே. ஆதலால் சுனாமி நிதியை அவர் மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டை கவனத்தில் எடுத்துக் கொள்ள கட்சி மறுத்தது. கட்சியின் இந்த முடிவு தெளிவாகவும் பலமாகவும் சந்திரிக்காவின் காதுகளுக்கு எட்டியது.

தமது கட்சியின் இந்த நிலைப்பாட்டை சந்திரிக்கா சந்தேகத்துக்கு இடமின்றி புரிந்து கொண்ட நிலையில் அவருக்கும் அவரது சகோதரர் அனுரா பண்டாரநாயக்கவுக்குமிடையில் சந்திப்பொன்று ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றது. இந்தச் சந்திப்பின் போது பண்டாரநாயக்கா குடும்பத்துக்கு மிகவும் நெருங்கிய இரு வர்த்தகப் பிரமுகர்களும் கலந்து கொண்டனர். கட்சியின் கட்டுப்பாடு பண்டாரநாயக்கா குடும்பத்தின் கைகளில் இருக்க வேண்டிய அவசியம் பற்றி அவர்கள் எடுத்து விளக்கினர்.

இந்த நிலைப்பாட்டை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி ஓர் இராஜதந்திர நகர்வாக மஹிந்தவை ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்க வேண்டியிருப்பதை தனது சகோதரர் அனுராவுக்கு பௌவியமாக எடுத்துக் கூறினார். இது மஹிந்தவால் வெல்ல முடியாத ஒரு தேர்தல். ஐ.தே.க. தலைவர் மலிக் சமரவிக்கிரமாவுடன் தான் நடத்திய பேச்சுவார்த்தைகளின் போது இதே கருத்தை அவருடன் பகிர்ந்து கொண்டதாகவும் அனுராவுக்கு எடுத்துச் சொன்னார் ஜனாதிபதி.

"இப்போது நாடு இருக்கும் நிலையில் ஐ.தே.கட்சியே வெற்றிக் கம்பத்தை எட்டிப் பிடிக்கும். தேர்தலின் பின்னர் மீண்டும் நானே கட்சியின் தலைவியாவேன். எனவே ஜனாதிபதி கதிரைக்கு போட்டியிட மஹிந்தவை அனுமதிக்க வேண்டும்" - இப்படி மேலும் கூறினார் ஜனாதிபதி.


அனுரா

"மஹிந்தவின் வேட்பாளர் நியமனத்தை நாம் தடுத்து நிறுத்தினால் கட்சியின் தோல்விக்கான பழி எமது தலையிலேயே சுமத்தப்படும். அவரை ஜனாதிபதி வேட்பாளராக அனுமதித்து, தேர்தலில் அவர் தோல்வி அடைந்தால் அதற்கு நாம் பொறுப்பாக முடியாது. அவரது தோல்விக்கு அவரே பொறுப்பேற்க வேண்டும். 1982 இல் ஹெக்டர் கொப்பேகடுவவுக்கு கட்சியில் எவ்வாறான நிலை ஏற்பட்டதோ அதே நிலைதான் மஹிந்தவுக்கும் உருவாகும்" என்றும் நிலைமையை விளக்கினார் சந்திரிக்கா.

இவ்வாறெல்லாம் தனது அந்தரங்க நோக்கத்தைச் சந்திரிக்கா அனுராவுக்கு எடுத்துக் கூறியபோதும் அவர் திருப்தியடையவில்லை. அப்படியானால் ரட்ணசிறி விக்ரமநாயக்காவை நாம் எமது வேட்பாளராக நியமிப்போம் என்று அனுரா கூறினார்.

இதற்கு, "ரட்ணசிறி விக்கிரமநாயக்கா ஒரு வலுவான வேட்பாளர் அல்ல. அவரால் உக்கிரமான தேர்தல் பிரசாரத்தை மேற்கொள்ள முடியாது. மஹிந்தவுக்கு வேட்பாளர் நியமனத்தை வழங்காது விட்டால் கட்சிக்குள் அவரின் மேல் அனுதாபம் அதிகரிக்கும். இறுதியில் தேர்தல் தோல்விக்கு நானும் பண்டாரநாயக்கா குடும்பமும் தான் காரணம் என்று எம்மீது குற்றஞ்சுமத்தப்படும்" - என்று சந்திரிக்கா பதிலளித்தார்.

மேலும், "ஜனாதிபதி வேட்பாளராக மஹிந்த நியமிக்கப்பட்டு தேர்தலில் தோல்வியடையும் போது யாரும் எம்மை குற்றஞ்சாட்ட முடியாது. அத்துடன் கட்சியின் கட்டுப்பாட்டை எமது கைகளில் எடுத்துக் கொள்வதும் இலகுவான காரியமாகிவிடும்" இப்படி சந்திரிக்கா விளக்கிய போது அதை ஏற்றுக் கொண்ட அனுரா கட்சிக்குள் தனது நிலை பலப்படுத்தப்பட வேண்டும் என்று தனது சகோதரிக்குக் கூறினார்.

ஜனாதிபதி வேட்பாளராக மஹிந்த நியமிக்கப்படும் போது பிரதமராகும் வாய்ப்பு தனக்கு வழங்கப்பட வேண்டும் என்ற செய்தி கட்சிக்குத் தெரிவிக்கப்பட வேண்டும் என்றும் மஹிந்த வென்றாலென்ன, தோற்றாலென்ன தேர்தலின் பின்னர் தாமே பிரதமராக வேண்டும் என்றும் அனுரா தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியபோது சந்திரிக்கா அதை மனதார ஏற்றுக்கொண்டாராம்.

இத்துடன் அனுரா நின்றுவிடவில்லை. வேட்பாளர் நியமனத்துக்கு முன்னர், ஜனாதிபதியின் அதிகாரங்களில் சிலவற்றை பிரதமருக்கு வழங்குவதற்கான ஏற்பாடாக அரசமைப்பில் மாற்றங்கள் செய்வதற்கு மஹிந்தவின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்தார்.

இதை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி, இதற்கான பூர்வாங்க வேலைகள் ஏற்கனவே ஆரம்பமாகிவிட்டன என்றும் கட்சித் தலைவருக்கும் மேலதிக அதிகாரங்கள் வழங்கப்பட இருப்பதாகவும் அனுராவுக்குத் தெரிவித்தார்.

மஹிந்தவுக்கும் இவ்விடயம் பற்றித் தெரியும் என்றும் அவரும் இதை ஆமோதித்துள்ளார் என்றும் ஜனாதிபதி மேலும் கூறினார்.

அனுராவுக்கு இன்னொரு கவலையும் இருந்தது. அதையும் தனது சகோதரியிடம் எடுத்துக் கூறினார். "மஹிந்த - ஜே.வி.பி கூட்டு நாட்டுக்கு நல்லதல்ல. இவர்களின் கூட்டினால் நாடு பல மோசமான விளைவுகளைச் சந்திக்க நேரிடும். எனவே இந்தக் கூட்டை அனுமதிக்க முடியாது" – இப்படி அனுரா கூறியபோது, பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கையை மஹிந்த நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தமையை ஜே.வி.பி ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் அதனால் இரு தரப்பினருக்கும் இடையில் கூட்டு ஏற்பட வாய்ப்பில்லை என்றும் சந்திரிக்கா கூறியபோது அனுரா 'ஆம்' என்பது போல் தலையசைத்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பின்னணியில் வைத்து மஹிந்தவின் ஜனாதிபதி வேட்பாளர் நியமனத்தை நோக்கும் போது ஸ்ரீ.ல.சு.கட்சித் தலைவி என்ற வகையிலும், ஜனாதிபதி என்ற வகையிலும் அதிகாரங்கள் அனைத்தையும் தனது பிடிக்குள் வைத்துக்கொண்டு சந்திரிக்கா நகர்த்த விருக்கும் எதிர்கால அரசியல் நகர்வுகள் மஹிந்தவுக்குப் பெரும் தலையிடியாக அமையப்போகின்றன.

ஆனால் மஹிந்தவும் அரசியலில் நீண்ட கால அனுபவம் உள்ளவர் என்பதால் அவரும் சந்திரிக்காவின் இத்தகைய சண்டித்தனங்களை எதிர்பார்த்து அரசியல் சதுரங்கத்தில் தனது காய்களை எவ்வாறு நகர்த்துகிறார் என்பதை அடுத்த வாரம் பார்ப்போம்.

புண்யா

# ‘பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாது’



தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க

“பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாது’. அதுபோல அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி பற்றி யாரும் எதை வேண்டுமானாலும் கதைக்கட்டும். எனது காதுகள் அவற்றை உள்வாங்கிக் கொள்ளப் போவதில்லை. காதுகளுக்கு எட்டினால் அது பற்றிக் கவலைப்படவும் போவதில்லை. தற்போதைய ஜனாதிபதி, இரண்டாவது தடவையாக ஜனாதிபதி பதவியைப் பொறுப்பேற்றுக் கொள்ள எந்தத் திகதியில் சத்தியப்பிரமாணம் செய்தாரோ, அதே தினம்தான் அவரது பதவி ஏற்புத் தினமாகக் கருதப்படுகிறது. உரிய நேரம் வந்ததும் ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதியை நான் அறிவிப்பேன்.’’

– இவ்வாறு தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்கா தெரிவித்துள்ளார்.

2006ஆம் ஆண்டு இறுதியில் தான், தனது பதவிக்காலம் முடிவடைகிறது எனக் கனவு கண்டுகொண்டிருந்த சந்திரிக்காவுக்கு தேர்தல் ஆணையாளர் மேற்கண்டவாறு கூறியிருப்பது பேரிடியாக அமைந்துவிட்டது. அதைத் தொடர்ந்து தான், குறிப்பிட்ட திகதி பற்றி தனது அபிப்பிராயத்தை அறிவிக்குமாறு உயர்நீதிமன்றத்தை அவர் கேட்டிருப்பதாக அறியப்படுகிறது.

இந்த நாட்டின் அரசமைப்பின்படியும், தேர்தல் சட்டத்துக்கிணங்கவும் ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதியை, விசேடமாக ஒரு ஜனாதிபதி இரண்டாவது தடவையாகப் பதவியிலிருக்கும் காலத்தில் அறிவிக்க வேண்டிய பொறுப்பு தேர்தல் ஆணையாளரிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. அப்படி இருக்க ஜனாதிபதி சந்திரிக்கா ஜனாதிபதித் தேர்தல் திகதியை அறிந்து கொள்ள உயர் நீதிமன்றத்தைச் சரணடைந்திருப்பது ஏன்? 2006இல் தான் ஜனாதிபதித்தேர்தல் என்று அடித்துக்கூறும் அம்மையார் இப்போது அதற்கான திகதி பற்றி தடுமாற்றம் அடைந்திருப்பது ஏன்? – இவ்வாறான சுவாரஸ்யமான கேள்விகளை அரசியல் ஆய்வாளர்கள் கேட்கிறார்கள்.

ஜனாதிபதி சந்திரிக்காவின் இரண்டாவது பதவிக்காலம் எப்போது ஆரம்பமாகியது என்று தேர்தல் ஆணையாளரிடம் கேட்கப்பட்டதற்கு, அவர் சுவாரஸ்யமாக இந்தக் கேள்விக்குப் பதிலளித்துள்ளார்.

“ஒருவர் புதிய உடை ஒன்றை வாங்கி அணிகிறார் என்று வைத்துக்கொள்வோம். சிறிது காலத்துக்கு அதை அவர் தனது அலுமாரிக்குள் பூட்டி வைத்திருந்துவிட்டு மீண்டும் அதை எடுத்து அணிந்துகொள்கிறார். அப்போது தாம் அணிந்திருக்கும் அந்த உடை புதியதென்று அவரால் சொல்ல முடியுமா?’’ – இப்படிக் கேள்வி எழுப்புகிறார் தேர்தல் ஆணையாளர்.

இவ்வாறு கேள்வி எழுப்பிய அவர் அத்தோடு நின்றுவிடாமல், “இரண்டாவது தடவை அல்லது மூன்றாவது தடவையும் கூட சத்தியப் பிரமாணம் எடுத்துக்கொள்ளலாம். அதுபற்றி யாரும் கவலைப்பட முடியாது. ஆனால் அவர் முதல் தடவையாக எப்போது சத்தியப்பிரமாணம் செய்து கொண்டாரோ அதே தினத்தைத் தான் நாம் கணக்கில் எடுக்கிறோம்’’ என்றும் காட்டமாகத் தெரிவித்திருக்கிறார்.

அது மட்டுமல்ல, இது பற்றித் தொடர்ந்தும் இப்படி விளக்கமளிக்கிறார், தேர்தல் ஆணையாளர்.

“ஒருவருக்கு மார்ச் மாதம் முதலாம் திகதி வேலையைப் பொறுப்பேற்குமாறு நியமனக் கடிதம் வழங்கப்படுகிறது. ஆனால், அவரோ ஏப்ரல் மாதம் 1ஆம் திகதியிலிருந்து தான் தனது வேலையை ஆரம்பிக்கிறார். பின்னர் இந்த நபர் தனக்கான சம்பளம் மார்ச் மாதம் 1ஆம் திகதியிலிருந்து கணக்கிட்டுச் செலுத்தப்படவேண்டும் என்று கேட்க முடியாது. அவரது சம்பளத்தை ஏப்ரல் மாதம் முதலாம் திகதியிலிருந்து தானே கணக்கிட்டுக் கொடுக்க முடியும்’’

இவ்வாறு ஒன்றன்பின் ஒன்றாக விளக்கம் அளித்துக்கொண்டிருந்த தேர்தல் ஆணையாளரிடம், சட்டமா அதிபரின் ஆலோசனையை இது சம்பந்தமாகப் பெற்றுக் கொள்வீர்களா என்று கேட்டபோது:–

“அதற்கான அவசியம் ஏதும் எனக்கு இல்லை. ஏனென்றால், தேர்தல் சட்டங்கள் இந்த விடயம் பற்றிய எனது கடமைகளைத் தெளிவாக எடுத்துக் கூறியிருப்பதுடன் எனக்குத் தேவையான அதிகாரங்களையும் வழங்கி இருக்கின்றன.’’ – என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்.

அவர் தொடர்ந்து இதுபற்றி கருத்துத் தெரிவிக்கும்போது “நான் கொல்லன்பட்டறையிலிருக்கும் நாய் போல சத்தங்களுக்கு நன்கு பழக்கப்பட்டவன். அந்த நாய்க்கு அதனருகில் புகையிரதம் ஒன்று ஓடிக் கொண்டிருக்கும் சத்தம் கூடக் கேட்பதில்லை. அதுபோல ஜனாதிபதித் தேர்தல் பற்றிய வாதப், பிரதிவாதங்கள் எதுவும் எனது காதுகளுக்கு எட்டுவதில்லை. உரிய தருணத்தில் ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதியை நான் அறிவிப்பேன். எனது முடிவுக்கு யாரும் சவால்விட முடியாது. அதுபோல எனது முடிவுக்காக யாரும் என்னைக் கம்பி எண்ணவைக்கவும் முடியாது’’ – என்று ஹாஸியமாகக் கிண்டலடித்தார்.

இதுவிடயம் சம்பந்தமாக 2.3.2005 ஆம் திகதி வண.ஓமல்பே சோபித தேரருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார் தேர்தல் ஆணையாளர். அதில், அரசமைப்பின் 32(1) பிரிவின் கீழ் ஜனாதிபதியின் ஆறுவருட பதவிக்காலம், எந்தத்திகதியில் அவர் ஜனாதிபதியாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டாரோ அந்தத் திகதியிலிருந்தே ஆரம்பமாகிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

மூடிவைத்திருந்த வாயை அவர் இப்போது திறந்திருக்கிறார் அல்லவா? தொடர்ந்து ஜனாதிபதித்தேர்தல் திகதி பற்றிய அவரின் அறிவிப்பு விரைவில் வெளியாகலாம் என எதிர்ப் பார்க்கப்படுகிறது.

தேர்தல் ஆணையாளரின் இந்தக் கருத்துகள் ஜனாதிபதிக்கு எட்டியதும்:–

* தேர்தல் ஆணையாளரின் நடவடிக்கைகளை முடமாக்கும் பொருட்டு உடனடியாக தனது நம்பிக்கைக்குரிய சட்டவல்லுனர்களுடன் அவர் தொடர்பு கொண்டாரென்றும்,

* அவர்களின் ஆலோசனையின் பேரிலேயே உயர்நீதிமன்றத்தின் உதவியை, அவர் இதுவிடயமாக நாடி இருக்கிறாரென்றும்.

* அரசமைப்பின் 129 ஆவது சரத்தில் ஆலோசனை பெறுவதற்கென அவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தியே உயர் நீதிமன்றத்தின் அபிப்பிராயத்தைக் கோரியிருக்கிறாரென்றும். செய்திகள் கசிந்திருக்கின்றன.

இவ்வாறு தேர்தல் ஆணையாளர் வெட்டு ஒன்று துண்டு இரண்டாகத் தனது கருத்துக்களைத் தெரிவித்திருப்பதை அடுத்தே குறிப்பிட்ட சில பொருட்கள் மீதான ‘வட்’ வரியை நீக்குவதற்கு அரசாங்கம் அவரசம் அவசரமாக முடிவு செய்ததாகத் தெரிகிறது.

தவிர, கடந்த 2.8.2005 இல் அலரிமாளிகையில் அனுரா பண்டாரநாயக்கா தலைமையில் நடைபெற்ற கூட்டமொன்றில் தேர்தல் தந்திரோபாயங்களை நகர்த்துவதற்கான கருத்துக்கள் பரிமாறப்பட்டிருக்கின்றன. அமைச்சர்கள் மங்கள சமரவீர, ஜயராஜ் பெர்னாண்டோபுள்ளே, மைத்திரிபால சிறிசேன ஆகியோருடன் பிரதமரின் சகோதரர் பசில் ராஜபக்ஷவும் இக்கூட்டத்தில் பங்குபற்றி இருக்கிறார்.

இது ஒருபுறம் இருக்க, பிரதமரின் அன்புக்குப் பாத்திரமான ஜே.வி.பியினர் அவருக்கு ஆதரவளிப்பது பற்றிச் செய்வதறியாத நிலையில் உள்ளனர்.

பொதுக்கட்டமைப்பு மற்றும் சமாதான நடவடிக்கை ஆகியன பற்றி தாம் எடுத்துள்ள இறுக்கமான நிலைப்பாட்டுக்கு ஆதரவளித்தால் மட்டும் மஹிந்தவுக்கு ஆதரவளிப்பதற்கு அவர்கள் ஆயத்தமாக உள்ளனர். அது மட்டுமல்ல, பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கை கைவிடப்படவேண்டும் என்பதே அவர்களது உறுதியானதும் இறுதியானதுமான நிலைப்பாடாகும். இதுபற்றியும் மஹிந்த ராஜபக்ஷ தனது கருத்தை இதுவரை வெளிப்படுத்தவில்லை.

அதே சமயம், சிறுபான்மையினரின் குறிப்பாகத் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்கான செயற்பாடுகளில் மஹிந்த இறங்கவேண்டும் என்றும், அவர்களின் ஆதரவின்றி தேர்தலில் வெற்றிபெறுவது வெறும் பகற்கனவாகவே இருக்கும் என்றும் அவரது தேர்தல் தந்திரரோபாய வல்லுனர்கள் அவருக்கு ஆலோசனை கூறியிருக்கிறார்கள்.

ரணில்விக்கிரமசிங்க இந்த விடயத்தில் மஹிந்தவுக்கு முன்னணியில் நிற்கிறார் என்றும் வடக்கு கிழக்கில் துப்பாக்கிச் சத்தத்தை ஓயவைத்தவர் அவரே என்றும் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

வடக்கு – கிழக்கு நெருக்கடியைப் பொறுத்தளவில் மதில் மேல் பூனையாக இனியும் மஹிந்த இருப்பது அவருக்குப் பாதிப்பையே ஏற்படுத்தும். எனவே இது சம்பந்தமான நிலைப்பாட்டை அவர் தெளிவாகத் தெரிவிக்கவேண்டும் என்ற உண்மையையும் அவர்கள் அவருக்கு எடுத்துரைக்கிறார்கள்.

எமது பிரச்சினை பற்றிய பிரதமர் மஹிந்தவின் நிலைப்பாடு என்ன? என்றுதான் தமிழ் மக்களும் கேட்கிறார்கள்.

ஆர்.பி.எம்


**யாழ்ப்பாணத்தில்**

**பிரபல தமிழ் பத்திரிகை ஒன்றுக்கு பின்வருவோர் தேவை**

**1. Circulation Manager**
**விநியோக முகாமையாளர்**

மேற்படி பதவிக்கு குறைந்தது G.C.E. (A/L) பரீட்சையில் சித்தியடைந்தவராகவும், 40 வயதிற்கு உட்பட்டவராகவும், விநியோகம், நிர்வாகம், கணக்கியல் (Circulation, Administration and Accounts) ஆகிய துறைகளில் குறைந்தது 5 வருட அனுபவமுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

**2. Asst.Accountant**
**உதவி கணக்காளர்**

மேற்படி பதவிக்கு குறைந்தது A.A.T (Final)/ CIMA Intermediate/ ICA Intermediate or equivalent, பரீட்சையில் சித்தியடைந்தவராகவும், வயது 25–40க்கும் இடைப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். அத்துடன் Accounts, Debt. recovery ஆகிய துறைகளில் குறைந்தது ஒரு வருட அனுபவமுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்**

**H.R.Manager,**
**P.Box No.23**
**Jaffna.**



**பலரது பாராட்டையும் பெற்ற மனோதத்துவ வைத்தியம்**
**(GENERAL PSYCHOTHERAPY)**

இளம் சமுதாயத்தினருக்கு சக்தி, ஆளுமை குறைந்து ஞாபக மறதி ஏற்பட்டு, மெலிவு, பயம் நடுக்கம், நித்திரை குறைவுடன் தாழ்வு மனப்பான்மையும் உண்டாகிறது. காரணம் தவறு என்று தெரிந்தும் தவிர்க்க முடியாது சக்தியை வீணாக்குவதேயாகும். எமது மனோதத்துவ வைத்தியத்தால் தவறுகளைத்திருத்தி வெற்றி பெற்ற எதிர்காலத்தை அடையலாம். ஆரம்ப மனநோயை உடனே சுகமாக்கலாம். மற்றும் ஆஸ்மா, நீரிழிவு, தலையிடி, வாதம், குழந்தைப் பேறு இன்மைக்கும், பெண்களுக்கு வெள்ளை போதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல், பல்லீறு கரைதல் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு. (பதில் பெறுவது எனில் முத்திரைச் செலவு அனுப்ப வேண்டும்.)

**பிரபல மனோ தத்துவ நிபுணர் Dr. ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்**

**Sexual Disorders (ஆண்மை சக்தி குறைவு)**

மனித உறுப்புக்கள் அனைத்துக்கும் வியாதி ஏற்படுவது போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. ஆண்மை சக்தி குறைய பல காரணங்கள் உண்டு. (1) அளவுக்கதிகமாக விந்தை வீணாக்குவது, கனவிலும் நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது. (2) உடல் பலவீனம். (3) நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்துவிடுவது. (4) உறவின் போது விந்து விரைந்து வெளிப்படுதலும் ஆகும். பயப்படாதீர்கள்! மனோதத்துவ வைத்தியம் (PSYCHOTHERAPY) மூலமும் திறமையான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

**வெளிநாட்டினருக்கு விசேட வைத்தியம் உண்டு**

எம்மைத் தொடர்பு கொண்டு பதில்பெற விரும்புவோர் (முத்திரைச் செலவுடன்) விளக்கம் தந்தால் மனோதத்துவ வைத்திய (PSYCHOTHERAPY) ஓடியோ கசட், மற்றும் மூலிகை மருந்துகளை பதிவுத்தபாலில் அனுப்பிவைப்போம்.

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

**கொழும்பில்...**

ஆகஸ்ட் 23 – 29 வரை சந்திக்கலாம் (விடுமுறை நாட்களிலும் சந்திக்கலாம்)
New Ahmed Tourist Inn, Bang Bang Building
10 - 1/A, Bankshall Street, Colombo - 11.
TEl No. 5368426, 368427
**Hot Line: 0777 569205**

**வவுனியாவில்...**

பின்னர் அறிவிக்கப்படும்
Vanni Inn, 2 ஆம் குறுக்குத்தெரு
வவுனியா, Tel No. 024 2222074
**Hot Line: 0777 569205**

**யாழ்ப்பாணத்தில்...**

ஆகஸ்ட் 14 -20
A.S.N. சுற்றுலா விடுதி
392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
**Hot Line: 0777 569205**
Tel No. 021 2223181
021 222 5399

கடிதத் தொடர்புக்கு: Dr. P. Arumugam, 51/5, Koolavady Road Batticaloa, Srilanka. Resident Tel No. 065 2224019, Hot Line: 0777 569205.

# இலங்கை - இந்திய காங்கிரஸ் இலங்கை தொழிலாளர் காங்கிரஸானது

1940களில் அரசியலானது பெரும்பாலும் உணர்ச்சிகளைத் தூண்டும் ஒன்றாக இருந்தது. மலையக தோட்டத் தொழிலாளர்கள் இதில் முக்கிய பங்கு வகித்தனர்.

அவர்கள் இலங்கையைவிட இந்தியாவையே அதிகம் நேசிக்கிறார்கள் என்று சிங்களவர்கள் குறைகூறினார்கள். அதற்கு ஆதாரமாக அவர்களது ஸ்தாபனம் இந்தியா என்ற பெயரைக் கொண்டிருக்கின்றதே என்று சிங்களவர்கள் சுட்டிக்காட்டினார்கள்.

அதைவிட இலங்கை - இந்திய காங்கிரஸின் தலைவர்களாய் இருந்த பெரிசுந்தரத்தைத் தவிர்ந்த ஏனையவர்கள் தமது தாயகத்துடனான தொடர்புகளை அறுத்துக் கொள்ளவிரும்பாதவர்களாய் இந்தியாவுக்கே திரும்பிச்சென்றுவிடத் தீர்மானித்தார்கள். இவர்களுக்குப் பின்னர் பதவிக்கு வந்தவர்கள் இந்தியா என்ற பெயரை மாற்றத் தீர்மானித்தார்கள். அதன்பேரில் அந்த ஸ்தாபனம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்என்று பெயர் பெறலாயிற்று. இந்தப் புதிய பெயர் அந்த ஸ்தாபனத்தின் உண்மைத் தன்மையை வெளிப்படுத்துவதாக அமைந்தது.




படத்தில் இடமிருந்து வலமாக இந்திராகாந்தி, எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்க, சிறிமாவோ பண்டாரநாயக்க, ஜவஹர்லால் நேரு, அனுரா, சந்திரிக்கா, சுனித்திரா.

பிரஜாவுரிமை மற்றும் வாக்குரிமையை பறிக்கும் சட்டங்கள் நிறைவேற்றப்பட்ட காலத்தில் காங்கிரஸின் தலைவர்களான எஸ்.தொண்டமான், ராஜலிங்கம், அப்துல் அஸீஸ், சி.வி.வேலுப்பிள்ளை, ராமானுஜம், எஸ்.எம்.சுப்பையா, வெள்ளையன் மற்றும் பலர் இருந்தார்கள். இவர்களில் பெரும்பாலானவர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களாகவே இருந்தனர்.

### சத்தியாக்கிரகப் போராட்டம்

இவர்கள் இந்திய - பாகிஸ்தானிய பிரஜாவுரிமைச் சட்டத்தை பகிஷ்கரிப்பதென்று முடிவு செய்தனர். இதன் மூலம் அச்சட்டம் செயல்படாமல் போகும்படி செய்யலாம் என்று தீர்மானித்து மலையக மக்களைப் பிரஜாவுரிமை கோரி விண்ணப்பிக்க வேண்டாம் என வலியுறுத்தினார்கள். பிரஜாவுரிமைகோரி விண்ணப்பிப்பதற்கு அரசாங்கம் இரண்டு ஆண்டுகால அவகாசம் கொடுத்திருந்தது. அது பெரும்பாலும் 1951 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் முடிவடைவதாய் இருந்தது.

பிரஜாவுரிமை கோரி விண்ணப்பிக்காமல் நடத்தப்பட்ட பகிஷ்கரிப்புப் போராட்டம் உண்மையில் இலங்கை அரசாங்கத்துக்கு ஒரு சவாலாகவே இருந்தது. புதிய சட்டத்தின் பிரகாரம் பத்து லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் குடியுரிமையற்றவர்களாக்கப் பட்டுவிட்ட நிலையில் இங்கேயே தங்கியிருக்கிறார்கள் என்பது அரசுக்கு பெரும் தலையிடியாக இருந்திருக்கும்.

கொடக்கான்பிள்ளை தாக்கல்செய்த வழக்கு பிரிவுக்கவுன்ஸிலில் தோல்வியுற்ற நிலையில் இந்திய - பாகிஸ்தானிய பிரஜாவுரிமைச் சட்டத்துக்கு எதிரான தமது போராட்டத்தைத் தீவிரப்படுத்த வேண்டிய நிலைமைக்கு மலையகத் தலைவர்கள் தள்ளப்பட்டனர்.

பெரிய அளவில் சத்தியாக்கிரகப் போராட்டம் ஒன்றை நடத்துவதற்கு அவர்கள் தீர்மானித்தார்கள்.

பிரதம மந்திரியின் அலுவலகம் அமைந்திருந்த செனட் கட்டடத்தின் வாயில் படிகளில் மலையகத் தோட்டங்களைச் சேர்ந்த தொண்டர்கள் ஆயிரக்கணக்கில் வந்து அமர்ந்து சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டார்கள். தலைவர்களும், தொண்டர்களும் இரவு பகலாக அமர்ந்து சத்தியாக்கிரகம் செய்த போதிலும் அரசு தரப்பில் எதுவித அசைந்து கொடுத்தலும் காணப்படவில்லை. பிரஜாவுரிமை கோரி மனு செய்வதற்கான கால அவகாசமும் முடிவடையும் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. அரசு அவர்களைத் தொடர்ந்தும் அலட்சியப்படுத்தியது. அவகாசம் முடிவடைய ஒன்று அல்லது இரண்டு மாதங்கள் இருக்கையில் இ.தொ.கா. சத்தியாக்கிரகத்தை வாபஸ் பெற்றுக் கொண்டு மக்களை பிரஜாவுரிமை கோரி மனு செய்யும்படி ஆலோசனை கூறியது.

இறுதிக் கட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கையால் ஒரே சமயத்தில் ஆயிரக்கணக்கான விண்ணப்பங்கள் இந்திய - பாகிஸ்தானிய குடியுரிமை பதிவுத் திணைக்களத்தில் வந்து குவியத் தொடங்கின.

இது அரசாங்கத்துக்கு மிகவும் வசதியாகப் போய்விட்டது. தனக்கு வேண்டிய அளவு மக்களைத் தெரிந்து எடுத்து வைத்துக்கொள்ளவும், எஞ்சியிருப்பவர்களின்




நிலைமையை காலம் தீர்த்துக் கொள்ளும்படி விடவும் அரசுக்கு வசதியாகப் போய்விட்டது. அதேசமயம், தேயிலை - றப்பர் தோட்டங்களும் மலிவான கூலியுடன் தொடர்ந்து நடப்பதற்கும் வழிவகுத்தது.

இந்திய - பாகிஸ்தானிய பிரஜாவுரிமைச் சட்டத்தின் கீழ் இலங்கைப் பிரஜாவுரிமை கோரி எவ்வளவு பேர் விண்ணப்பித்தார்கள் என்ற புள்ளி விவரம் வெளியிடப்படவில்லை.

ஆனால், 1964 ஜூலை அளவில் ஸ்ரீமா - சாஸ்திரி ஒப்பந்தம் கைச்சாத்தான பிற்காலத்தில் பத்து லட்சம் பேருக்கு மேற்பட்ட மக்களில் சுமார் 1,30,000 பேர் மட்டுமே இலங்கை பிரஜைகளாகப் பதிவு செய்யப்பட்டிருந்தனர் என்பது தெரியவந்தது. இவர்கள் சட்டதில் பதிவுப் பிரஜைகள் என்று அறியப்பட்டார்கள்.

ஏனைய தமிழர்கள் நாடற்றவர்களாகக் கணிக்கப்பட்டனர். ஏனென்றால், அவர்கள் இந்தியப் பிரஜைகளுமற்ற இலங்கைப் பிரஜைகளுமற்றவர்களாய் இருந்தனர். பிரிட்டனும் அவர்களை அம்போ என்று கைவிட்டது.

இலங்கைத் தமிழர் தரப்பில் தமிழ் காங்கிரஸ் உடைந்ததையடுத்து மக்கள் மத்தியில் குழப்பகரமானதோர் நிலைமை ஏற்பட்டிருந்தது. அமைப்பு ரீதியில் எதுவும் முறையாக அரசியல் சிந்தனையுடன் செயல்படுவதாகக் காணப்படவில்லை. பிளவுபட்ட இலங்கைத் தமிழ் காங்கிரஸ் அப்பொழுது ஐ.தே.கவின் ஓர் அங்கமாகவே ஆகிவிட்டிருந்தது.

மக்கள் எங்கே போகிறோம் என்று தெரியாமல் அங்குமிங்கும் இழுபட்டுக் கொண்டிருந்தார்கள். ஆசை கொண்டவர்களும், சந்தர்ப்பவாதிகளும் அதிகாரத்திலிருந்த தலைவர்களின் அடிவருடிகளாக சுழன்றுகொண்டிருந்தனர். விரக்தியுற்றிருந்தவர்கள் ஏதாகிலும் துரும்பாவது சிக்காதா; கரைசேர்வதற்கு என்ற நிலையில் கலங்கிக்கொண்டிருந்தனர்.

அரசுடன் சேர்ந்து கொண்டுவிட்ட பொன்னம்பலமும் அவருடைய ஆள்களும் தொழிற்சாலைகள் நிறுவுவதிலும், வீதிகள், தபாற்கந்தோர்கள் அமைப்பதிலும், நண்பர்கள், ஆதரவாளர்களுக்கு வேலைகள் பெற்றுக்கொடுப்பதிலும் மட்டுமே அக்கறை கொண்டிருந்தனர்.

அரசின் அரசியல் திட்டங்கள், சட்டங்கள் பற்றியெல்லாம் அவர்கள் சிந்திக்கவே இல்லை. தமிழர்களின் கால்களுக்கு கீழேயே அவர்களுக்கு குழிபறிக்கப்படுவதைப்பற்றி அவர்கள் அக்கறைகாட்டவில்லை.

### புதிய கட்சி பற்றிஆலோசனை

இந்த நிலையில் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் தலைமையில் பிரிந்துசென்றுவிட்டவர்கள் புதிய அரசியல் அமைப்பு யோசனை ஒன்றை முன்வைப்பதற்கு முயன்றனர். சுதந்திரம் கிடைத்தபோது வழங்கப்பட்ட ஒற்றை ஆட்சிக்குப்பதிலாக இணைப்பாட்சி (சமஷ்டி) திட்டமொன்றை முன்னெடுப்பதற்கான முயற்சியில் இறங்கியிருந்தனர்.

காந்தத்தில் ஊசி வயப்படுவதுபோல் நான் உடனடியாகவே இந்தக் கருத்தில் கவரப்பட்டுவிட்டேன். முன்பு குறிப்பிட்டதுபோல் இதுவே எனது சிந்தனையாகவும் இருந்துவந்துள்ளது. நான் எஸ்.ஜே.விக்கு எழுதினேன். அடுத்த நாளே என்னை ஹல்ஸ்ப்டோப்பிலுள்ள சட்டமன்றில் (Lawcourts )சந்திக்க வருமாறு அழைத்திருந்தார். புதிய அமைப்பில் சேர்ந்து கொள்ளும்படிகேட்டுக் கொண்டார். நானும் இணங்கினேன். செல்வநாயகத்துக்கு நான் எழுதியிருந்த கடிதத்தில், உத்தேசிக்கப்பட்டுள்ள கட்சியானது மக்களை அமைப்பு மயப்படுத்தி ஒரு தேசியத்தைப் பிரகடனப்படுத்த வேண்டும் என்றும், இணைப்பாட்சிக்காக பேச்சுகளில் ஈடுபட ஆயத்தப்படுத்த வேண்டுமென்றும் தெரிவித்திருந்தேன். அக்குழுவில் சேர்ந்து கொண்டவுடனேயே அதன் செயற்பாடுகளில் நான் ஈடுபடத் தொடங்கிவிட்டேன். ஏ.அமிர்தலிங்கம் ஏற்கனவே அந்த குழுவில் இருந்தார். ஆனால், இளைஞராகவும் இலங்கை சட்டக்கல்லூரியில் ஒரு சட்ட மாணவனாகவும் இருந்தார்.

சி.வன்னியசிங்கமும், டாக்டர் ஈ.எம்.பி நாகநாதனும், நானும் சேர்ந்து புதியகட்சிக்கான இடைக்கால யாப்பு ஒன்றை உருவாக்குவதில் ஈடுபட்டோம்.

கட்சியின் நோக்கம் என்னவாய் இருந்த தென்றால் இணைப்பாட்சி கட்டமைப்புக்குள் தன்னாட்சி உள்ள தமிழ்பேசும் தேசம் ஒன்றை உருவாக்கிக்கொள்வதே ஆகும்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியானது சமஷ்டிக்கட்சி 1949 டிசெம்பர் 19 ஆம் திகதி முறைப்படி அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. கொழும்பு மருதானையிலுள்ள அரச எழுதுவினைஞர் சங்கமண்டபத்தில் இதற்கான கூட்டம் நடைபெற்றது. எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தலைவராகவும், டாக்டர் ஈ.எம்.வி. நாகநாதனும் நானும் கூட்டு செயலாளர்களாகவும் நியமிக்கப்பட்டோம். அதன் பிறகு ஓய்வுக்கே இடமிருக்கவில்லை. எல்லாத் தலைவர்களும், ஆதரவாளர்களும் ஓய்வு ஒழிச்சலின்றி பாடுபட்டார்கள். நாட்டில் அக்கட்சியை ஒரு முனைப்பு சக்திமிக்க அமைப்பாக உருவாக்குவது அவர்களின் நோக்கமாகவிருந்தது.

மனம் திறந்து சொல்வதானால் நாங்கள் அனைவரும் நினைத்திருந்தோம், பிற்கால சிங்கள சந்ததியினரை நியாயத்தை உணரச் செய்யலாம் என்று. இணைப்பு ஆட்சி முறைதான் இலங்கை சூழ்நிலைக்கு பொருத்தமான ஆட்சி அமைப்பு என்பதாக அவர்களின் மனங்களை மாற்றிவிடலாம்



நாடு சுதந்திரம் அடைந்த நாளில் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் வரை இடம் பெற்ற முக்கியஅரசியல்நிகழ்வுகளை உள்ளடக்கியது 'தமிழ் தேசத்தின் வீழ்ச்சியும் எழுச்சியும்' (The Fall and Rise of the Tamil Nation)

தற்போது 96 வயதை எட்டிய நிலையில் கனடாவில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஊர்காவற்றுறை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வி.நவரத்தினம் ஆங்கிலத்தில் எழுதிய இந்த நூலின் தொகுப்பு தொடர் அரசியல் கட்டுரையாக சுடர்ஒளி வாரமலரில் வெளிவருகிறது. படியுங்கள்.

என்று நினைத்தோம். இந்த தீவின் எல்லைப்புற இறை ஆண்மையை உத்தேசித்தாவது இதைத் தவிர வேறு தீர்வுக்கு வழியில்லை என்பதை அவர்கள் உணர்வார்கள் என்று நாம் எதிர்பார்த்தோம்.

இரு தரப்பிலும் அவசியமான நல்லெண்ணத்தின் அடிப்படையில், சிங்களவர்களும் தமிழர்களும் ஒன்றிணைந்து பன்முகத் தன்மை கொண்ட இலங்கை நாட்டினை

**தமிழில் - 'பேனா'**

நவீன உலக சிந்தனைகளுக்கு ஏற்றமுறையில் முன்னேற்றமான ஒரு ஜனநாயக நாடாகக்கட்டி எழுப்பமுடியும் என்று நாங்கள் மனதார நம்பினோம்.

வெகு தூரத்திலுள்ள கனடா, சுவிற்சலாந்து நாடுகளைப்பார்த்து அந்த நாடுகள் பல்வேறு சமூகங்களைக் கொண்டிருந்தாலும் சிறப்பாக ஆட்சி நடைபெறும் தன்மையை நாங்கள் பார்த்து சிலாசிக்கலானோம்.

கனடா இரு இனங்களையும் இருமொழிகளையும் கொண்டநாடு. பேராசிரியர் கே.சி.வி.வியாரே (Rrof K.C.Wheare ) தமது நூல் ஒன்றில் இணைப்பாட்சி அரசுக்கான மிகவும் வெற்றிகரமான ஒரு மாதிரி கனடாவில் உள்ள அமைப்பு முறைதான் என்று வலியுறுத்தியிருக்கின்றார். அந்த நூலில் இணைப்பாட்சியில் இனரீதியான அம்சங்களை அவர் தொட்டுக் காட்டியிருக்கவில்லை என்பதை நாங்கள் அந்த சமயத்தில் மனம் கொள்ளவில்லை. அவர் அந்த நூலை எழுதிய காலத்தில் இணைப்பாட்சி நிலவிய நாடுகளில் இனப்பிரச்சினைகள் தலைதூக்காமலிருந்தமை ஒரு காரணமாக இருந்திருக்கலாம்.

(தொடரும்)

# தொடரும் தவிப்பு

இம்முறையும் உயர்நீதிமன்றத்தில் வழக்கு நடத்தி தடை உடைத்தார் மூத்த வழக்கறிஞர் சந்துரு. அரசாங்கம் தடை விதிக்கும் ஒவ்வொரு முறையும் விரைந்து செயல்பட்டு, உணர்வோடு வாதாடி, குறுகிய காலத்திற்குள் தடையை உடைத்து, அதன் மூலம் குழுவின் செயல்பாடுகளுக்கு பெருந்துணையாய் நின்றார் அவர்.

மீண்டும் அனுமதி பெற்று நவம்பர் 30ஆம் தேதி பேரணி நடந்தது. அத்தனை பொருளாதார சிக்கல்களையும் மீறி பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த கிட்டத்தட்ட 15,000 தோழர்கள் கலந்துகொண்ட மாபெரும் பேரணியாக அது அமைந்தது.

அதிலும் பல தோழர்கள் குடும்பத்துடன் கைகுழந்தைகளுடன் கலந்து கொண்டனர். பெண்கள் அணியே ஒருபெரும் படையாகவும் அவர்களோடு 12 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுடன் வந்தபோது பேரணியைக் கண்ட பொதுமக்கள் பெரிதும் வியப்புற்றனர். அரசியல் கட்சிகளின் பேரணிகளையே பார்த்துச் சலித்த மக்களுக்கு எந்தப் பெரிய அரசியல் கட்சியின் உதவியும் இல்லாமல் ஒரு மனித நேய காரணத்திற்காய் அணி திரண்ட இந்தப் பேரணி பெரிதும் கவர்ந்தது. வேடிக்கை பார்க்க வந்த மக்கள் பலரும் பேரணியோடு கலந்து நடக்கத் தொடங்கினர்.

எழுச்சியுடனும், உணர்ச்சிப் பெருக்குடனும் நடந்த அப்பேரணியின் முடிவில் தலைவர்கள், நெடுமாறன் தலைமையில் சென்று முதல்வரை சந்தித்தனர். அவரிடம் மக்கள் கையெழுத்திட்டுக் கொடுத்த பல்லாயிரக்கணக்கான படிவங்களையும் முக்கிய பிரமுகர்களின் ஆதரவுக் கையெழுத்து இருந்த படிவத்தையும் அளித்தனர்.

முதல்வர் மிகுந்த நம்பிக்கையுடன் பேசினார்.

புத்தாயிரமாண்டையொட்டி நாட்டில் முழுவதுமாக மரண தண்டனையை ஒழிக்க அவர் வற்புறுத்த வேண்டுமென்றும் தலைவர்கள் கேட்டுக்கொண்டனர்.

விடை பெற்றுத் திரும்பியபோது முழு நம்பிக்கை ஏற்பட்டு இருந்தது. பேரணியின் வெற்றியை ஊடகங்கள் உறுதிப்படுத்தின. இத்தனை நாட்களாகப் பாராமுகமாக இருட்டடிப்பு செய்த ஊடகங்கள் கூட பேரணியின் வெற்றியை மறைக்க முடியவில்லை. முதல் பக்கத்திலேயே படத்தோடு செய்தி வெளியிட்டனர். மகிழ்ச்சி, புத்தொளி நம்பிக்கை அனைவருக்கும்.

முதல்வரின் முடிவுக்காகக் காத்திருந்தனர்.

முதல்வர் மீதிருந்த நம்பிக்கை வலுப்பெற்றிருந்ததால் பிரசார வேகமும் குறைந்தது. பத்திரிகைகளின் கவனமும் மக்களின் கவனமும் மெதுமெதுவாக வேறு பிரச்சினைகளுக்குத் திரும்பின.

அனைத்து ஆரவாரங்களும் அடங்கிய பின்னர் ஒருநாள் முதல்வரின் முடிவு வெளி வந்தது.

'நளினிக்கு மட்டும் தண்டனை குறைப்பு' – மற்ற மூவருக்கும் நிராகரிப்பு.

இப்படி ஒரு முடிவை யாரும் எதிர்பார்க்கவில்லை. அதிலும் 'நளினி' பெண் என்பதாலும் ஒரு குழந்தையின் தாய் என்பதாலும் அவருக்குக் கருணை காட்டப்பட்டிருப்பதாக முதல்வரின் அறிவிப்பு கூறியது.

'நம்ப வைத்து ஏமாற்றிவிட்டாரே..' அற்புதத்தின் மனம் பொருமியது.

5வது முறை... ஒவ்வொரு முறையும் நம்பிக்கைகளை வளர்த்து வளர்த்து இறுதியில் ஏமாறுவது மட்டுமே மிஞ்சுகிறதே. இரண்டாவது முறை உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்போது இருந்த அதீத நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் அடுத்தடுத்து இல்லைதான். அந்த அளவுக்கு பாதிப்பும் அடுத்த தடவைகளில் இல்லைதான். அடுத்தென்ன செய்யலாம் என்ற எண்ணமே மேலோங்கியது.

தூக்குக்கயிறு, மரணதண்டனை, இந்த சொற்கள் எல்லாம் சாதாரணமாகிப் போயின. மரண தண்டனை ஒழிப்புப் பிரசாரம் உச்சக்கட்டத்தில் இருந்தபோது, பத்திரிகைகளில் மரண தண்டனை நிறைவேற்றப்படும் முறை குறித்து விளக்கமாக எழுதினர்.

அதைப் படித்தபோது அளவிலா வேதனை அடைந்தார். பிறரின் வேதனையில் சுகம் காணும் பத்திரிகைகள் மீது வெறுப்பு வந்தது. எனினும், அந்த வெறுப்பால் என்ன பயன். பத்திரிகை விற்க என்ன எழுத வேண்டுமோ அதை எழுதி காசாக்குகிறார்கள். பிறரின் உணர்வுகளைப் பற்றி அவர்களுக்கென்ன கவலை.

விமர்சனங்களை, அவதூறுகளை புறந்தள்ளிவிட்டு நடைபோடப் பழகிக்கொண்டார். நேருக்கு நேராக யாரேனும் பேசினால் கூட அதைக் கண்டுகொள்வதில்லை.

இதோ அடுத்து குடியரசுத் தலைவருக்கு மனு செய்துவிட்டு அடுத்த காத்திருப்புத் துவங்கியாகிவிட்டது. வழக்கம்போல் வாராவாரம் சென்று மகனைக் கண்டு வருகிறார். குழுவின் நிகழ்ச்சிகளில் தவறாது

உண்மைதான். இப்போது அற்புதத்தின் கவனம் முழுவதும் அறிவின் மீது மட்டும் தான். உடன் யாருமற்ற தனிமையில் மகனின் நினைவு அதிகமாக வாட்டுகிறது. அதற்கு மேலும் தாங்க முடியாது என்ற அளவிற்கு அவனது பிரிவு துன்புறுத்துகிறது. எதிலும் நாட்டம் இல்லாத ஒரு இறுக்கம். மகன் வரவை நோக்கியே எல்லாச் செயல்களும். மகன் வந்து வேலை பார்த்து சம்பாதித்துதான் நவீனப்பொருட்களை வாங்கவேண்டும் என்ற நிலையிருக்கக்கூடாது என்று சிறுக சிறுக சேமித்து ஒவ்வொரு பொருளாக வாங்கி வைக்கிறார்.

அவ்வப்போது தொலைபேசியிலும் நேரிலும் அளவளாவிச் செல்லும் நண்பர்கள் மட்டுமே பெரிய ஆறுதல்.

இல்லை.

அருளுக்கு சிதம்பரத்தில் வேலை கிடைத்தது அவளும் சென்றுவிட்டாள்.

இடையே அறிவு அற்புதத்திடம் – 'அம்மா அருளுக்கு சீக்கிரம் திருமண ஏற்பாடு செய்யுங்கம்மா நான் செத்தாக் கூட நம்மால் தான் நம்ம தங்கச்சியோட வாழ்க்கை கெட்டுப்போச்சுன்னு உறுத்தலோடு சாகக் கூடாது' – என்று கூறிய போது பதறிவிட்டார்.

இதைக்கேட்ட அருளும் பதறி திருமணத்திற்குச் சம்மதிக்க மூத்த மாப்பிள்ளை இராஜாவைப் போலவே தங்கமான மாப்பிள்ளை தனசேகர் கிடைத்தார்.

குழுவைச் சேர்ந்த தோழர்கள் அனைவரும் கலந்துகொள்ள திருமணம் சிறப்பாக நடந்தது.

திருமணம் முடிந்து அறிவைச் சந்தித்தபோது அவன் விளையாட்டாக.

'என்னம்மா இனிமே என்கவலை மட்டும்தானா உங்களுக்கு' எனக் கேட்டுச் சிரித்தான்.



காத்திருப்பு நீள்கிறது...
தவிப்பு தொடர்கிறது.

மகனின் வரவை எதிர்நோக்கியிருக்கும் அந்தத் தம்பதியினரின் கனவு, ஆசை, இலட்சியம் நிறைவேறுமா?

இனத்துக்காகவும் மொழிக்காகவுமே வாழ்ந்து, வாழும் இவர்களுக்கு கிடைக்கப் போகும்பரிசு என்ன?

காத்திருப்பு நீள்கிறது.... தவிப்பு தொடர்கிறது. (முற்றும்)

தூக்குத் தண்டனைக்கு காத்திருக்கும் தன் மகனை தூக்குக் கயிற்றின் பிடியிலிருந்து மீட்பதற்குப் போராடும் ஒரு தாயின் உண்மைக் கதை இது.

நவீன புறநானூறாக உணர்வும், விறு விறுப்பும் நிறைத்து இதனைச் செதுக்கியுள்ளார் இளம் எழுத்தாளர் பூங்குழலி.

## யமனுக்கு மனிதநேயம் இருந்தது. மனிதர்களுக்கு....?

### ஆடம்பர ஹோட்டலான ஹிட்லரின் அரண்மனை

உலகிற்கு தனது கொடூர முகத்தை வெளிக் காட்டியதன் மூலம் சரித்திரத்தில் இடம் பிடித்தவன் சர்வாதிகாரி ஹிட்லர். தனது எண்ணங்களை வடிவமைப்பதற்கு ஜெர்மனியில் பல்வேறு அரண்மனைகளை அவன் கட்டி இருந்தான்.

அந்த அரண்மனைகளில் பல, எதிரிகளிடம் இருந்து தப்பிக்கும் புகலிடமாகவும் விளங்கின. அவற்றில் சிகரமாக இருப்பது 'ஓபர்சல்' என்ற மலை மீது அமைந்துள்ள 'ஆல்பைன்' அரண்மனை.

இந்த அரண்மனையில் வைத்துத்தான் யூதர்களுக்கு சமாதி கட்டும் தனது விபரீத ஆசையை தன்னுடைய சகாக்களுடன் ஹிட்லர் பகிர்ந்து கொண்டான். ஹிட்லரின் வாழ்க்கையில் ஒரு முக்கிய இடத்தைப் பிடித்து நினைவுச் சின்னமாகத் திகழும் இந்த அரண்மனை இப்போது நட்சத்திர ஹோட்டல்.

2001 ஆம் ஆண்டு இதற்காக திட்டம் தீட்டியது ஜெர்மனிய அரசு. தற்போது புதுப்பிக்கும் பணி முடிவடைந்து நட்சத்திர ஹோட்டலாக கம்பீரமாக நிற்கிறது.

இந்த ஹோட்டலில் தங்கும் அறைகள் மட்டும் 138. இது தவிர பல்வேறு வடிவான நீச்சல் குளங்கள், உடற்பயிற்சி மையம் என்று நவ நாகரிக ஹோட்டலின் அனைத்து அம்சங்களையும் இது உள்ளடக்கி உள்ளது.

ஜெர்மனி வரும் சுற்றுலாப் பயணிகள் இந்த ஹோட்டல் மூலம் ஹிட்லரின் மறுபக்கமான கலை உணர்வுகளையும் ரசிக்கலாம்.




இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு மறுசீரமைக்கப்பட்ட
மறுசீரமைக்கப்படாத உயர்ரக
மெஸியர்கியூஷன்
MASSEY FERGUSON 240
எந்த வேலையிலும் எத்தனை ட்ரக்டர்களையும் வாங்கக்கூடிய இலங்கையின் மிகப்பெரிய ட்ரக்டர் நிறுவனம்
தேவ் டிரக்டர்ஸ்
SMS Engineers - Kullinnochchi
196, கண்டி ரோட் யக்கல.
(லங்கோ அருகில்)
தொ : 033-2226010 பெ : 033-2226716

ரேஸ்ரசி டென்சியா கம்பைன் ஹாவஸ்டர்



புத்தம் புதியது
▶ நாளொன்றுக்கு 2 ஏக்கர் நிலப்பரப்பினை அறுவடை செய்யலாம்.
▶ குறைந்த செலவு
▶ இலகு பாவனை
▶ அதிகூடிய திறன்
▶ வீண் விரயங்களைத் தடுக்கலாம்
▶ ஆறு மாத உத்தரவாதம் உண்டு
▶ இதில் சூடடித்தல் மற்றும் நெல்லினை சாக்கினில் இட்டுக்கட்டுதல் போன்றவற்றையும் மேற்கொள்ளலாம்.
டேவ் டிரக்டர்ஸ் பிறைவேட் லிமிடெட்.
யக்கல, தொலைபேசி – 0332226010

BRIGHT TRAINING CENTRE
POSTAL TUITION COURSES
பிறைட் பயிற்சி நிறுவனம்
தபால் மூலம் கல்வி நெறிகள்
SPOKEN ENGLISH - பேச்சு ஆங்கிலம்
SPOKEN SINHALA - பேச்சு சிங்களம்
BUSINESS ENGLISH - வியாபார ஆங்கிலம்
METHOD OF COMPUTERISED BOOK-KEEPING & ACCOUNTANCY (MCBA)
NURSERY TEACHER TRAINING COURSE (NTTC)
பாலர் முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி நெறி (NTTC)
FAMILY LIFE EDUCATION (FLE)
குடும்ப வாழ்க்கை / நலக் கல்வி (FLE)
ART OF YOGASANAM (AOY)
யோகாசனக் கலை (AOY)
EFFECTIVE ENGLISH WITH GRAMMAR AND SPOKEN ENGLISH
Diploma in Philosophy (D.I.P)
தத்துவியல் டிப்ளோமா
தபால் மூலம் கல்வி நெறி போதிப்பதில் இருபது வருடகால அனுபவமுள்ள நிறுவனம்
Bright ஆகும்
இணைய விரும்புவோர் 5.00 பெறுமதியான முத்திரையொட்டி சுயவிலாசமிடப்பட்ட தபாலுறையுடன் தொடர்பு கொள்ளவும்.
BRIGHT TRAINING CENTRE
S-27, First Floor, P.O. Box-162
Colombo Central Super Market Complex,
Colombo-11. Tel / Fax: 2434770

# 'ஆதி' படத்தில் மீண்டும் விஜய் - த்ரிஷா



'திருப்பாச்சி'
-விஜய், த்ரிஷா-

சிவகாசி படத்தைத் தொடர்ந்து விஜய் நடிக்கும் புதிய படம் 'ஆதி'.

எஸ்.ஏ.சந்திரசேகரன் மிகப் பெரிய இடைவெளிக்குப் பிறகு, விஜய்யை வைத்து சூரியன் ஆர்ட்ஸ் என்ற நிறுவனத்தின் பெயரில் மிக பிரமாண்டமாக — அதேநேரத்தில் தனது லட்சியம் படைப்பாக 'ஆதி' படத்தை தயாரிக்கிறார் டைரக்டர் எஸ்.சந்திரசேகரன் .

தெலுங்கில் சமீபத்தில் வெளியாகி வசூலில் மாபெரும் சாதனை நிகழ்த்திய 'அத்தன் ஒக்கடே' என்ற திரைப்படத்தை மிகப் பெரிய விலை கொடுத்து வாங்கி ஆதி என்ற பெயரில் தமிழில் தயாரிக்கிறார். விஜய்யை வைத்து 'திருமலை' என்ற வெற்றிப்படத்தை இயக்கிய ரமணா மீண்டும் விஜய்யை வைத்து இயக்கும் படம் இது.

இந்தப் படத்தில் அதிரடி ஆக்ஷனும், குடும்ப சென்டிமென்டும், அனல் பறக்கும் வசனங்களும் இடம்பெறுகின்றன. 'கில்லி', 'திருப்பாச்சி' ஆகிய படங்களில் நடித்த திரிஷா மீண்டும் விஜய்யுடன் ஜோடி சேருகிறார்.

கன்னடம், தெலுங்கு திரையுலகில் கதாநாயகனாக நடித்து வரும் சாய்குமார் இந்தப் படத்தில் வில்லனாக முக்கிய பாத்திரத்தில் நடிக்கிறார். இவர்களுடன் பிரகாஷ்ராஜ், விவேக், மணிவண்ணன், விஜயகுமார், நாசர், தேவன், சீதா உட்பட பல முக்கிய நட்சத்திரங்கள் நடிக்கிறார்கள்.

விஜய் நடித்த 'கில்லி','மதுர' ஆகிய படங்களுக்கு இசை அமைத்த வித்யாசாகர் இந்த படத்துக்கும் இசையமைக்கிறார். சவுந்தரராஜன் ஒளிப்பதிவு செய்கிறார்.

படத்தொகுப்பு சுரேஷ் அர்ஸ், கலை, ராஜீவன், சண்டைப் பயிற்சி பீட்டர் ஹெய்ன் தயாரிப்பு மேற்பார்வை சக்தி. திரைக்கதை, வசனம் எழுதி இயக்குபவர் ரமணா.

எஸ்.ஏ.சந்திரசேகரன் தயாரிப்பில் விஜய் நடிக்கும் படத்தை வேறு ஒருவர் டைரக்ஷன் செய்வது இதுவே முதற் தடவை.

படம் வரும் புதுவருடத்தில் வெளியாகவுள்ளதாம்.

## அசின் - நயன்தாரா மோதல்

முன்பு சிம்ரனுக்கும், ஜோதிகாவுக்கும் இடையே நடந்த 'நம்பர் ஒன்' இடத்துக்கான போட்டி இப்போது அசினுக்கும் நயன்தாராவுக்கும் இடையில் மறைமுகமாகவும் நேர்முகமாகவும் நடந்துவருகிறது.

இத்தனைக்கும் இந்த இருவருமே கேரள வரவுகள். ஆனால் இருவரும் நேருக்கு நேர் சந்தித்துக் கொண்டால் கூட மூணு ஜென்மத்து பங்காளி, பகையாளி மாதிரி முகத்தை ஒரு வெட்டு வெட்டி வேறு பக்கம் திருப்பிக் கொண்டு சென்றதெல்லாம் பழைய கதை.

நீயா, நானா ஒரு கைபார்த்து விடுவோம் என்று இப்பொழுது கஜினி படத்தில் சூர்யா ஜோடியாக நடிக்கும் இருவரும், போட்டி போட்டுக் கொண்டு சக்கைக் கவர்ச்சி காட்டி களம் இறங்கிவிட்டனர்.

அதிலும் நயன்தாரா ஒரு படி மேலே போய் ஒரு பாடல் காட்சியில் கலக்கோ கலக்கென்று கலக்குகிறார். இதைப் பார்த்த பொலிவுட் புள்ளிகள் எல்லோரும் தமது ஆச்சரியத்தை வெளிப்படுத்தினர் என்றால் பாருங்கள்.

இது ஒருபுறமிருக்க த்ரிஷாவுக்கும் அசினுக்கும் இடையேயும் குடுமிப்பிடி நடந்து கொண்டிருக்கிறது. தெலுங்கில் செம பிஸியாக இருக்கும் த்ரிஷா தமிழில் முக்கியமான படங்களை மட்டுமே ஒப்புக் கொள்கிறார்.

விஜய்யின் சொந்தப்படமான 'ஆதி'யிலும், சூர்யாவின் 'ஆறு'விலும் ஏ.எம்.ரத்னம் பண்ணப் போகிற விக்ரம் படத்திலும் ஜோடி சேருகிறார் த்ரிஷா.

இது அசினுக்கு டென்ஷனை ஏற்படுத்திவிட்டது. இதனால் த்ரிஷாவுக்கு தெலுங்கில் தொடர்ந்து வாய்ப்பு தரும் எம்.எஸ்.ராஜூ, ஏ.எம்.ரட்னம் மற்றும் எஸ்.ஏ.சந்திரசேகரன் ஆகியோரை சென்று சந்தித்து எனக்கும் சான்ஸ் கொடுங்கள் என்று கேட்டிருக்கிறார்.

இப்போதைக்கு இருக்கிற எல்லா மெயின் ஹீரோக்களுடனும் நடிப்பது அசின்தான் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனாலும் ஒரு புதுமுகம் போல் வாய்ப்புகளைத் தேடி ஓடிக் கொண்டிருக்கிறார் அசின்.

## பார்த்திபன்-வடிவேலு 'குண்டக்க மண்டக்க'

எஸ்.ஜி.பிலிம்ஸ் வழங்க, சூப்பர் ஸ்டார் ஆர்ட் மூவிஸ் தயாரிக்கும் குண்டக்க மண்டக்க படத்தில் பார்த்திபன் மெக்கானிக் வேடத்தில் நடிக்கிறார். பார்த்திபனின் நண்பராக வடிவேல் நடிக்கிறார். பார்த்திபனின் தங்கையாக மல்லிகா நடிக்கிறார்.

தங்கையை கோடீஸ்வர மாப்பிள்ளைக்கு திருமணம் செய்துகொடுக்க வேண்டும் என்ற லட்சியத்துடன் மாப்பிள்ளை தேடுகிறார் பார்த்திபன். இதற்காக பார்த்திபனுக்கு வடிவேல் உதவுகிறார். இரண்டு பேரும் சேர்ந்து நிறைய மோசடி செய்கிறார்கள். அவர்களின் லட்சியம் நிறைவேறியதா, இல்லையா? என்பதாக கதை பாலகுமாரன் எழுதிய இந்த கதைக்கு சி.பாலமுருகன் வசனம் எழுதுகிறார்.

பார்த்திபன், வடிவேல், மல்லிகாவுடன் லட்சுமிராய், புவனேஸ்வரி, புதுமுகம் அம்ருத், மதன்பாப், தியாகு, பயில்வான் ரங்கநாதன், சிசர் மனோகர், கிரேன் மனோகர், ரவிகுமார்,வனிதா, கலைராணி ஆகியோரும் நடித்து இருக்கிறார்கள். பரணி ஸ்ரீ ஒளிப்பதிவு செய்ய, இசையமைக்கிறார் பரத்வாஜ். எடிட்டிங் சுரேஷ் அர்ஸ், ஸ்டம்ட் சூம்பர் சுப்பராயான். கலை ராஜீவன்.

இந்தப் படத்தின் படப்பிடிப்பு முழுவதும் சென்னை மற்றும் சுற்றும் புறங்களில் நடைபெற்று முடிவடைந்தது.

## எஸ்.ஜே.சூர்யாவின் நியூ படத்திற்கு நீதிமன்றம் தடைவிதித்தது!

ஆகஸ்ட் 5ஆம் திகதி எஸ்.ஜே.சூர்யாவின் தலையில் இடியை இறக்கிய நாள் என்றே சொல்ல வேண்டும். 'நியூ' என்ற படத்தை எடுத்து, அதன்மூலம் நூற்றுக்கணக்கான விமர்சனங்களை கிளறிவிட்ட சூர்யா, அப்படத்தை நியாயப்படுத்த பேசிய பேச்செல்லாம் நீதிமன்றத்தின் முன் எடுபடவே இல்லை.

இந்தப் படத்தையே தடைசெய்ய வேண்டும் என்று வழக்கறிஞர் அருள்மொழி தொடுத்த வழக்கு நீதிபதிகள் எம்.அசோக்குமார், அ.கற்பக விநாயகம் ஆகியோரின் முன் வைக்கப்பட்டது. இந்த இரு நீதிபதிகளும் 'நியூ' படத்தை பார்த்துவிட்டு கொடுத்த தீர்ப்புத்தான் நீங்கள் படிக்க விருப்பது. கொச்சையான வசனங்கள் அதிகம் இருப்பதாலும் செக்ஸ் உணர்வை குழந்தைகள் மத்தியில் தூண்டும் வகையில் காட்சிகள் இருப்பதாலும் இந்தப் படத்தை திரையிட மத்திய தணிக்கை குழு வழங்கிய சான்றிதழை ரத்துச் செய்யவேண்டும். இதுதான் வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பின் சாராம்சம்!

தங்கள் தீர்ப்பில் இன்னும் விரிவாக கூறியிருக்கிறார்கள் நீதிபதிகள்.

'நியூ' படத்தில் இரட்டை மற்றும் கொச்சையான வசனங்கள் அதிகம் இடம்பெற்றுள்ளன. இது பார்ப்போரின் மனதை கெடுக்கும் வகையில் அமைந்துள்ளது. 8 வயதுப் பையன் அறிவியல் ஆராய்ச்சி காரணமாக இரவில் 28 வயது இளைஞனாகி 20 வயதுப் பெண்ணை திருமணம் செய்து அவளை கருத்தரிக்க செய்வதாக கதை அமைந்துள்ளது. இதை பார்ப்பவர்கள் மற்றும் இளைஞர்கள், குழந்தைகள் மனதில் கெட்ட உணர்ச்சியை ஏற்படுத்தும்.



'கள்வனின் காதலி'
-எஸ்.ஜே.சூர்யா,
நயன்தாரா-

பாலுணவை தூண்டும் வகையில் காட்சிகள், பாடல்கள் அமைந்துள்ளன. இதில் வரும் வசனங்கள் இரட்டை அர்த்தம் கொண்டதாக உள்ளன. ''எட்டுக்கால் பூச்சி போல் உடம்பில் ஊர்கிறான்''. ''இன்னும் கொஞ்சம் கீழே கீழே... ஒரு தடவை கொடு....'' ''கல்யாணத்திற்கு அப்புறம் நிறைய தடவை அடிக்கலாம்....'' ''நான் முப்பது வயசுல முழுசா இன்னும் கண்ணால கூட பார்க்கலை.'' ''எட்டு வயது பையன் இந்த போடு போடுகிறீயா...''

இவ்வாறு பல ஆபாச இரட்டை அர்த்த வார்த்தைகள் கொண்ட வசனங்கள் உள்ளன. இப்படம் சினிமா ஒளிபரப்பு சட்டத்தின் விதிமுறைகளுக்குட்பட்டு தயாரிக்கப்படவில்லை. தணிக்கை குழு கண்களை மூடிய நிலையில், கைகள் கட்டப்பட்ட நிலையில் இப்படத்திற்கு அனுமதி அளித்துள்ளது. இந்த அனுமதியை ரத்துச் செய்தாக வேண்டும். தணிக்கைக் குழுவில் உள்ள பெண் உறுப்பினர் இப்படத்திற்கு சன்றிதழ் தரக்கூடாது என்று எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். ஆனால் படத் தயாரிப்பாளரான சூர்யா அந்த பெண் உறுப்பினருடன் தகராறு செய்துள்ளார். தாக்குதல் செய்ய முயற்சித்துள்ளார். இதுபற்றி அந்த பெண் உறுப்பினர் புகார் தந்துள்ளார். ஆனால் பொலிஸார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.



'தொட்டி ஜெயா'
-சிம்பு, கோபிகா-

## இயக்குனர்கள் மக்களின் கருத்தில் கொள்வதில்

திரையுலகில் பல முன்னணி நட்சத்திரங்களாக திகழும் நாயக, நாயகிகளை அறிமுகமாக்கியது பாரதிராஜா தான்.

இவரின் மோதிரக்கையினால் குட்டுவங்கியவர்கள் எவரும் சோடைபோனதில்லை. என்ன காரணமோ அவரின் மகனாலும் திரையுலகில் சோபிக்க முடியவில்லை. அதேபோல் 'கண்களால் கைது செய்' படத்தின் மூலம் அறிமுகமாகிய நடிகை ப்ரியா மணியும் இதுவரை பிரபலமாகவில்லை.

அவர் தற்போது நடித்துவரும் படம் பாலு மகேந்திராவின் 'அது ஒரு கனாக்காலம்', அமீரின் 'பருத்தி வீரன்' என இரண்டு பெரிய படங்களிலும் 2 சிறிய படங்களிலும் பிஸியாக நடித்து வருகிறார் ப்ரியாமணி. அவ்வளவாக வெளிப்படாத ப்ரியா மணியின் நடிப்பாற்றல் இப்போது வெளிப்பட ஆரம்பித்துள்ளது.

ப்ரியா மணியுடன் ஒரு செவ்வி:-

✱ பாரதிராஜாவின் படத்தில் அறிமுகமாகியும் உங்களால் புகழ் பெற முடியவில்லை. இதற்கு என்ன காரணம்?

படம் சரியாக ஓடாததுதான் காரணம். மக்கள் ஒரு விடயத்தை ஒரு மாதிரியாக விரும்பும்போது நாம் அதை வேறுவிதமாக கொடுத்தால் அப்படம் தோல்வி அடைகிறது.

அப்படத்தில் டப்பாங்குத்து பாடல் இல்லை. காமெடி இல்லை. அதனால் தோல்வி அடைந்தது. மக்கள் என்ன விரும்புகிறார்கள் என்பது இயக்குநர்களுக்கு தெரியாமல் போகிறது. மக்கள் விரும்புவதை அவர்கள் கொடுப்பதில்லை. இதனால் படம் தோல்வி அடைகிறது. அதில் நடித்தவர்களும் பிரபலம் ஆவதில்லை.

✱ இப்போது பிஸி நடிகையாக மாறியது எப்படி?

மலையாளப் படங்களில் எனது படிப்பைப்

இந்தப் படத்திற்கு பல விளம்பரங்கள் அனுமதிக்கப்படாவிட்டாலும் அத்துமீறி விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது. இது கட்டாய திரைப்பட விளம்பர சட்டத்திற்கு முரணானதாகும். டி.வி. சேனல்களில் இந்த விளம்பரங்களை பார்க்கும் போது குழந்தைகள் மனதில் செக்ஸ் உணர்வை தூண்டும். இதற்கு 'ஏ' தரச் சான்றிதழ் கொடுக்கப்பட்டாலும் இது போன்று விளம்பரப்படுத்துவதை மாநில அரசு தடுக்கவில்லை. இதுகுறித்து தணிக்கை குழு ஏற்கனவே பொலிஸில் புகார் தந்துள்ளது.

சில தியேட்டர்களில் தணிக்கை செய்யப்பட்ட காட்சிகளும் சேர்த்து காட்டப்பட்டுள்ளன. தனியார் துறைப்பற்றியும் நிறுவனம் மூலம் இது தெரியவந்துள்ளது. இந்த நிறுவனமும் புகார் தந்துள்ளது.

பட தயாரிப்பாளருக்கு எதிராக நிறையப் புகார்கள் இருந்தாலும் பொலிஸார் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. காட்சிகளில் உள்ள இரட்டை அர்த்தம் கொண்ட வாசகங்கள் குழந்தைகளை சினிமா வரலாற்றில் தடுக்க முடியாத நிலை ஏற்படும். எனவே இப்படத்திற்கு மத்திய அரசின் தணிக்கை குழு வழங்கிய சான்றிதழை ரத்துச் செய்யப்படவேண்டும். படம் நீண்ட நாள் ஓடிவிட்டது என்பதற்காக இதுபோன்ற உத்தரவை நாங்கள் பிறப்பிக்கவில்லை என்றால் தமிழ் திரைப்பட வரலாற்றில் கரும் புள்ளி ஏற்படும்.

இந்தப் படத்தில் கொச்சை வார்த்தைகள் மட்டுமே ஒரே ஒரு செய்தியாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்படம் பொதுமக்களுக்கு ஆரோக்கிய பொழுது போக்காக அமையவில்லை.



...ன் காதலி' -...சூர்யா, ...தாரா-

தலைமை செயலாளர், கேபிள் டி.வி. ஒழுங்குமுறை சட்டத்தை கட்டாயமாக அமுல்படுத்த வேண்டும். சூர்யா மீது கொடுக்கப்பட்டுள்ள புகார்களை பொலிஸ் கமிஷனர் விசாரித்து கோர்ட்டில் அறிக்கை தாக்கல் செய்யவேண்டும்.'' இவ்வாறு தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

இதுகுறித்து எஸ்.ஜே.சூர்யா என்ன சொல்கிறார்? 'அ.. ஆ...' படத்தின் இறுதிகட்ட வேலைகளில் இருக்கும் அவர் சில வினாடிகள் மட்டுமே செல்பானில் வந்தார். ''நீதிமன்றத்தின் தீர்ப்பை தலை வணங்கி ஏற்றுக்கொள்கிறேன்'' இதுதான் சூர்யா சொன்ன வார்த்தை. இதற்கு அர்த்தம், இனிமேல் இதுபோன்ற படங்களை எடுக்கவே மாட்டேன் என்பதாக இருக்குமோ?



-ஜெயம் ரவி-

# ஜெயம் ரவியின் 'தாஸ்' அனுபவம்

ஜெயம் ரவிமுதன்முறையாக தன் அண்ணன் இயக்காத வேறொரு படத்தில் நடித்திருக்கிறார்.

''முதல் இரண்டு படங்களிலும் அண்ணன் சொன்ன மாதிரி நடித்தேன். என்னுடைய கோபம், என் மூட் எல்லாமே அண்ணனுக்கு தெரியும். எனக்கும் நடிக்க ரொம்ப சுலபமாக இருந்தது. ஆனால், 'தாஸ்' படத்தில் அப்படி இல்லை. முதலில் நானும் பாபுயோகேஸ்வரனும் பழகவே சில நாட்கள் பிடித்தன. பழகிய பிறகு ரொம்ப சகஜம் ஆயிட்டோம். நிஜமாகவே இந்த படத்தில் நடித்தது ஜாலியான அனுபவம்தான். 'தாஸ்' படமும் வெற்றி படமாக அமைந்திருக்கிறது. எல்லா ஊடகங்களில் இருந்தும் 'தாஸ்' படத்தை பற்றிய சிறப்பாக விமர்சனம் கொடுக்கப்பட்டுள்ளது.''

முதல் மூன்று படங்களிலேயே பெரிய நடிகர் அந்தஸ்தை பெற்றுவிட்ட ரவி, இன்னும் முன்னணி கதாநாயகிகளுடன் நடிக்கவில்லையே என்றால், அதுக்கெல்லாம் ஒரு வயசு வேணும். இந்த தகவலையும் அவரே சொல்லி மேற்படி கேள்விக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

'மழை' படத்தின் படப்பிடிப்பு முடிந்துவிட்டது. இந்த படத்திற்காக தொடர்ந்து 28 நாட்கள் மழையில் நனைந்தேன். பகலில் நனைவது தெரியாது. உடனுக்குடன் காய்ந்துவிடும். ஆனால், இரவில் நடிக்கும் போதுதான் கஷ்டம். சில நாட்கள் எனக்கு இயலாமலும் இருந்தது என்று கூறி தோள்களை குலுக்கி கொள்கிறார் ரவி.

''தொடர்ந்து ரீமேக் படங்ளில் நடிக்கிறேன் என்று சொல்கிறார்கள். நல்ல கதைகளை தேடி.  நடிச்சா தப்பா? என்னை ரீமேக் ரவி என்று சிலர் கூறுகிறார்கள். 'தாஸ்' மாதிரி நேரடிப் படங்களில் இப்போது நடித்துக்கொண்டு இருக்கிறேன். இனி அப்படி கதைக்க வேண்டாம்'' என்று கூறிய ரவியின் கண்களில் லேசான வருத்தம்!

# சினி பிட்ஸ்



'அழகு நிலையம்' -விந்தியா-

* 'மதுர', 'திருப்பாச்சி' படங்களுக்கு காரைக்குடியில் படப்பிடிப்பு நடந்தது. இப்போது 'சிவகாசி' படத்துக்கும் காரைக்குடியில் படப்பிடிப்பு நடக்கிறது.

*சிவக்குமாரின் இரண்டாவது மகன் கார்த்தி நாயகனாக நடிக்கும் 'பருத்தி வீரன்' பட்டத்தில் அதன் இயக்குநர் அமீர் முக்கிய வேடத்தில் நடிக்கிறார்.

*கஜினி படத்தில் பணக்கார வாலிபராக வரும் சூர்யாவின் ஜோடி அசின். மொட்டைத் தலையுடன் நடிக்கும் சூர்யாவின் ஜோடி நயன் தாரா.

*மணிவண்ணனின் மகன் ரகுவண்ணன் 'வெளிச்சத்தை தேடி' என்ற குறும் படத்தை தயாரித்துவருகிறார்.

*பொள்ளாச்சியில் பண்ணை வீடுகட்டவிக்ரம்திட்டமிட்டுள்ளார்.

*சின்னத்திரை இயக்குநர் சித்திரை செல்வன் 'ஹனி மூன்' என்ற படத்தை தயாரித்து இயக்குகிறார். பிரகாஷ் ராஜ் இதில் முக்கிய வேடம் ஏற்றுள்ளார்.

* 'இது தான் காதல் என்பதா' படத்தின் நாயகனாக ஜீத்தன் ரமேஷும் நாயகிகளாக சுருதி, மும்தாஜ் நடிக்கிறார்கள்.

* படப்பிடிப்புக்கு செல்லும்போது அஸின் புத்தகத்துடனேயே போகிறார்.

*'டான்சர்' நாயகன் குட்டி மலையாளப் படம் ஒன்றில் கதாநாயகனாக நடிக்கிறார்.

* 'வீரண்ணா' படத்தில் வடிவேல் பெயர் ஈ அடிச்சான் பழனிச்சாமி.

* எஸ்.ஜே.சூர்யா, அடுத்து விஜய் நடிக்கும் 'புலி', சிம்பு நடிக்கும் 'ஏசி' படங்களை இயக்கவுள்ளார்.

# மோகனின் படத்தில் நடிக்கவுள்ளார் ரஜினி

ரஜினிகாந்த் நடிக்க உள்ள புதிய படத்தின் கதை விவாதம் தொடங்கியுள்ளது.

நடிகர் ஜெயம் ரவியின் தந்தையும், தயாரிப்பாளருமான மோகன் இப்படத்தை தயாரிக்கிறார். சந்திரமுகி படத்துக்குப் பின் ரஜினி நடிக்கும் அடுத்த படம் எதுவாக இருக்கும் என்பதை அறிய ரசிகர்கள் ஆவலுடன் உள்ளனர். இந்நிலையில் ரஜினியின் அடுத்த படத்தை மோகன் தயாரிப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது. இப்படத்தை மோகனின் மகன் ராஜா இயக்குவார் எனத் தெரிகிறது.

இதற்காக சில மாற்றுமொழிப் படங்களை ரஜினிகாந்தும் மோகனும் பார்த்துள்ளனர். ஹிந்தியில் நன்றாக ஓடும் ஒரு படத்தை மோகன், தமிழில் ரீமேக் செய்யப் போவதாக பொலிவுட் வட்டாரத்தில் பேச்சு நிலவியது.

இது தொடர்பாக அறிய மோகனுக்கு நெருங்கிய வட்டாரங்களுடன் தொடர்புகொண்டபோது தற்போது ரஜினி நடிக்கும் படத்தின் கதை விவாதம் தொடங்கியுள்ளது என்றனர்.

இப் படத்தில் ஜெயம் ரவியும் நடிப்பார் என்க்கருதப்பட்டது. ஆனால் இதில் ரவி நடிக்கவில்லை. முழுக்க முழுக்க ரஜினிக்கு மட்டுமே முக்கியத்துவம் அளித்து இப்படத்தை தயாரிக்கவுள்ளார் மோகன்.

# ...களின் விருப்பத்தினை ...தில்லை -ப்ரியாமணி

பார்த்துவிட்டு பலர் பாராட்டினர். 'ஒட்ட நாணயம்' படத்தில் பிச்சைக்காரி வேடத்தில் நடித்திருந்தேன். இதில் எனது நடிப்பைப் பார்த்துவிட்டு பொலிவுட்டிலும் என்னை நடிக்க அழைக்கின்றனர். இப்போது மிகவும் ஜாக்கிரதையாக படங்களைத் தேர்வு செய்கிறேன்.


'அது ஒரு கனாக்காலம்' படத்தில் பிளஸ் டு மாணவியாக நடிக்கிறேன். கண்டிப்பாக அப்படம் எனக்கு பெயர் வாங்கித் தரும். 'பருத்தி வீரனில்' சூர்யாவின் தம்பி கார்த்தி கதாநாயகனாக நடிக்கிறார். இப்படத்தில் கிராமத்து அப்பாவி பெண் வேடம். ஆர்.பி.சௌத்ரியின் மகன் ரமேஷுடன் ஒரு படத்தில் நடிக்கிறேன். 'தோட்டா' படத்தில் நடிக்கிறேன். மலையாளத்தில் 2 படங்களில் நடிக்கிறேன்.

✱ காதல் அனுபவம்?

கண்டிப்பாக இல்லை. கல்லூரியில் எனக்கு நிறைய பேர் லவ் லெட்டர் கொடுத்திருக்கிறார்கள். எனது மனதைக் கவரும் வகையில் இது வரை யாரும் கிடைக்கவில்லை. ஒருவேளை கிடைத்தால் காதலிக்கலாம். ஆனால் இன்னும் 5 வருடங்களுக்குத் திருமணம் கிடையாது.

✱ கிளாமர் வேடம் உங்களுக்குப் பொருந்தாது என்ற பேச்சு இருக்கிறதே?

'அது ஒரு கனாக்காலம்'. 'பருத்தி வீரன்' இரண்டிலுமே படம் முழுவதும் சேலையில்தான் வருகிறேன். அதையும் மீறி கனாக்காலத்தில் எனது கவர்ச்சி நடிப்பை ரசிகர்கள் பார்க்கலாம். அது ஆபாசமாக இருக்காது. காரணம் எப்போது நான் அந்த மாதிரியெல்லாம் நடிக்கமாட்டேன். கனாக்காலம் வந்த பின் கிளாமர் வேடமும் ப்ரியாவுக்குச் சூட்டாகிறது என்பார்கள். பொறுத்திருந்து பாருங்கள்!



'கஜினி' -சூர்யா, அஸின்-

# ஆங்கில படத்துக்கு நிகராக 'கஜினி'

கஜினி படத்துக்காக சூர்யா நடித்த ஒரு பயங்கர சண்டை காட்சி 15 நாட்கள் படமாக்கப்பட்டது. மழைநீர் தேங்கிய ஒரு குளத்தில் தினம் காலை 9 மணிமுதல் இரவு 9 மணிவர சூர்யா சட்டை எதுவும் அணியாமல் வெறும் உடம்புடன் நின்று சண்டை போட்டார்.

ஆங்கில படத்துக்கு நிகரான தொழில்நுட்பத்துடன் இந்த படம் வளர்கிறது. படம்பிடிப்புக்காக 'மைலோ' என்ற நவீன காமிரா - மும்பையில் இருந்து வரவழைக்கப்பட்டுள்ளது. இதன் ஒருநாள் வாடகை, ரூ.2 லட்சம். 'தீனா', 'ரமணா' ஆகிய படங்களை டைரக்டு செய்த ஏ.ஆர். முருகதாஸ் இந்த படத்தை டைரக்ட் செய்கிறார். படத்தின் கதை - திரைக்கதை - வசனம் இவரே. ஹாரீஸ் ஜெயராஜ் இசையமைக்கிறார்.

ஸ்ரீ சரவணா கிரியேஷன்ஸ் சார்பில் சேலம் ஏ.சந்திரசேகரன் இந்த படத்தை தயாரிக்கிறார். சூர்யா ஜோடியாக அசின் நடிக்க, ஒரு பாடல் காட்சியில் நயன்தாரா தோன்றுகிறார். மனோபாலா, சத்யன், மும்பை வில்லன் பிரதீம் சிங் ராவத் மற்றும் பலரும் நடிக்கிறார்கள். கஜினி படத்தில் நடிப்பதற்காக நடிகர் சூர்யா 6 மாதங்களாக விரதம் இருந்தார். அரிசி சாதம், அசைவ உணவு ஆகியவற்றை தவிர்த்தார். 62 கிலோ எடையுள்ள அவர்,54 கிலோவாக குறைந்து விட்டார். மெலிந்த தோற்றத்துடன் அவர் காணப்படுகிறார்.

# இலங்கை தமிழர் பற்றிய படம்

'மஜா' ஷூட்டிங் முடிந்து ரிலாக்சாய் ஒதுங்கிய மணிவண்ணனை ரவுண்டு கட்டினோம். என்ன சார் ரைடக்ஷனை மறந்துவிட்டீங்க போலிருக்கே என்றோம்.

'அகதி' என்று ஒரு படம் தயாரிக்க முடிவு செஞ்சிருக்கேன். லண்டன்காரர் ஒருவர் தான் தயாரிப்பு. இலங்கைத் தமிழர் பற்றிய இந்தப் படத்தை இலங்கையின் கடலோரப் பகுதியில் படமாக்கத் திட்டமிட்டு இருந்தேன். சுனாமியாலே இப்போ அந்தப் பகுதிகள் எல்லாம் கடுமையா பாதிக்கப்பட்டு இருக்கு. இப்ப போய் கேமராவோட அங்கு நின்றால் நல்லாயில்லை என நிறுத்தி வைச்சிருக்கேன். நிலைமை சீரடைஞ்சதும் 'அகதி' படத்தை ஆரம்பித்துவிடுவேன் என்றார் மணிவண்ணன் உற்சாகமாய்!

# ராசி பலன்

**மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.**

(1,8) உரிய செவ்வாய் ராசியில் ஆட்சியாக இருப்பது ஒரு வகையில் நன்மைசெய்யும் மறு வகையில் தீமை செய்யலாம். சுக்கிரனின் நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தாமதமானாலும் நிறைவேறும். சனி, செவ்வாய் ஒன்றையொன்று நோக்குவது பல பிரச்சினைகளை கொடுக்கலாம். (2,7) உரிய சுக்கிரன் 6இல் நல்ல பலனைச் செய்யாது. கையில் பணம் இருக்காது. திருமணவாய்ப்பு பாதிக்கலாம். (3,6) உரிய புதன் 4இல் நல்ல பலனைச் செய்யாது. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். எதிரிகளின் தொல்லை இருக்கும். இளைய சகோதரத்துக்கு நல்ல பலன் இல்லை. 4ம் வீட்டில் உள்ள சனியை செவ்வாய் பார்ப்பதால் வாகன சுகம் இருக்காது. தாய்க்கும் கூடாது. (10,11) உரிய சனி 4இல் இருப்பதால் தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது.

**இடபம் : கார்த்திகை 2,3,4. ரோகிணி, மிருகசீரிடம் 1,2**

(1,6) உரிய சுக்கிரன் 5இல் இருப்பது விசேஷம். இருப்பினும் சூரியனின் நட்சத்திரத்தில் இருப்பது நல்ல பலனைச் செய்யாது. தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. எதிரிகளின் தொல்லை இருக்காது. (2,5) உரிய புதன் மூன்றில் நல்ல பலனைச் செய்யாது. கையில் பணம் இருக்கும். பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். நாலுக்குரிய சூரியன் நாலில் ஆட்சியாக இருப்பது நல்லது. தாய் நலம். வாகன சுகம் உண்டு. (7,12) உரிய செவ்வாய் 12இல் ஆட்சியாக இருப்பது திருமணவாய்ப்பு தாமதமாகலாம் சயன சுகம் உண்டு. (9,10) உரிய சனி மூன்றில் இருப்பது விசேஷம். தொழில் துறையில் முன்னேற்றம் உண்டு. பிதா நலம். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். ராசியைக் குரு பார்ப்பது விசேஷம். குருவின் இருப்பும் விசேஷம்.

**மிதுனம்: மிருகசீரிடம்3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

(1,4) உரிய புதன் இரண்டில் இருப்பது விசேஷம். மேலும் சனியின் நட்சத்திரத்தில் இருப்பதும் நல்லது. தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத்தரும். பிரயாண வாய்ப்பு உண்டு. தாய் நலம். வாகன சுகம் உண்டு. இரண்டாம் இடத்தில் உள்ள சனியை செவ்வாய் பார்ப்பதால் கையில் பணம் இருக்காது. (5, 12) உரிய சுக்கிரன் 4இல் இருப்பது நல்லது. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். சயன சுகம் உண்டு. (6,11) உரிய செவ்வாய் 11இல் ஆட்சியாக இருப்பது நல்லது. உடல் ஆரோக்கியம் உண்டு. பகைவர் நண்பர் ஆவார். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். மூத்த சகோதரத்துக்கு நல்ல பலன் உண்டு. (7,10) உரிய குரு 4இல் கேதுவுடன் இருப்பது தோசம். திருமண வாய்ப்பு பாதிக்கலாம். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. (8,9) உரிய சனி இரண்டில் இருப்பது கூடாது. பிதாவுக்கு நல்லதல்ல.

**கடகம்: புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**

ராசிநாதன் சந்திரன் தனு முதல் கும்பம் வரை சஞ்சரிப்பதால் வாரமுற்பகுதிலும் நடுப்பகுதியிலும் நல்ல பலன் உண்டு. தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத் தரும். பிரயாண வாய்ப்புண்டு. இரண்டுக்குரிய சூரியன் இரண்டில் ஆட்சியாக இருப்பதால் கையில் பணம் இருக்கும். (3,11) உரிய புதன் ராசியில் நல்ல பலனைச் செய்யாது. சயன சுகம் இருக்காது. இளைய சகோதரத்துக்கு நல்ல பலன் இல்லை. (4,11) உரிய சுக்கிரன் மூன்றில் நல்ல பலனைச் செய்யும். வாகனசுகம் உண்டு. தாய் நலம். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். மூத்த சகோதரத்துக்கு நல்ல பலன் உண்டு. (5,10) உரிய செவ்வாய் 10இல் ஆட்சியாக இருப்பது ஒருவகையில் நல்ல பலனைத்தரலாம். தொழில்துறையல் முன்னேற்றம் உண்டு. பிள்ளைகளின் செயல்பாடு திருப்திதராது. (7,8) உரிய சனி ராசியில் இருப்பது கூடாது. திருமணவாய்ப்பு பாதிக்கலாம்.

**சிங்கம்: மகம், பூரம், உத்தரம்1.**

ராசிநாதன் சூரியன் ராசியில் ஆட்சியாக இருப்பது அவ்வளவு சிறப்பு இல்லை. இருப்பினும் தனது நட்சத்திரத்தில் இருப்பது நல்லது. தொடங்கும் காரியங்கள் தாமதமானாலும் நிறைவேறும். அரச உதவி கிடைக்கும். சென்ற இடமெல்லாம் சிறப்புக் கிடைக்கும். (2,11) உரிய புதன் 12இல் நல்ல பலனைச் செய்யாது. கையில் பணம் இருக்காது. மூத்த சகோதரத்துக்கு நல்ல பலன் இல்லை. நண்பர்களுக்கு கூடாது. (3,10) உரிய சுக்கிரன் இரண்டில் இருப்பது நல்லது. தொழில்துறை முன்னேறும். இளைய சகோதரத்துக்கு நல்ல பலன் உண்டு. (4,9) உரிய செவ்வாய் 9 இல் நல்ல பலனைச் செய்யாது. பெற்றோருக்கு நல்லபலன் இல்லை. வாகன சுகம் இருக்காது. (6,7) உரிய சனி 12இல் நல்ல பலனைத் தராது. திருமணவாய்ப்பு பாதிக்கலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். பகைவிலகும்.

**கன்னி: உத்தரம்2,3,4. அத்தம், சித்திரை 1,2.**

(1,10) உரிய புதன் 11இல் இருப்பது விசேஷம். மேலும் சனியின் நட்சத்திரத்தில் இருப்பதும் நல்லது. தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத்தரும். மன அமைதி இருக்கும் பிரயாண வாய்ப்பு உண்டு. தொழில்துறையில் முன்னேற்றம் இருக்கும். (2,9) உரிய சுக்கிரன் ராசியில் இருப்பது நல்லது. கையில் பணம் இருக்கும். பிதாவுக்கு நல்ல பலன் உண்டு. (4,7) உரிய குரு ராசியில் கேதுவுடன் இருப்பது தோஷமான நிலை. வாகன சுகம் இருக்காது. தாய்க்கும் நல்ல பலன் இல்லை. திருமணவாய்ப்பு பாதிக்கலாம். (5,6) உரிய சனி 11இல் இருப்பது நல்லது. உடல் ஆரோக்கியம் உண்டு. பகைவர் நண்பராவர். பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். 12க் உரிய சூரியன் 12இல் ஆட்சியாக இருப்பது நல்லது. சயன சுகம் உண்டு. ராசியை சனி ராகு பார்ப்பது குறை. குரு வழிபாடு ஆறுதல் தரும்.

**துலாம்: சித்திரை3,4 சுவாதி, விசாகம்1,2,3.**

(1,8) உரிய சுக்கிரன் 12இல் நல்ல பலனைத் தருவார். இருப்பினும் சூரியனின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லதல்ல. தொடங்கும் காரியங்கள் தாமதமானாலும் நிறைவேறும். மன அமைதி பாதிக்கலாம். (2,7) உரிய செவ்வாய் 7இல் இருப்பது தோஷம். கையில் பணம் இருக்காது. திருமணவாய்ப்பு பாதிக்கலாம். (3,6) உரிய குரு 12இல் இருப்பதில் பயன் குறைவு. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். பகைவிலகும். இளைய சகோதரத்துக்கு பாதிப்பு இருக்கலாம். (4,5) உரிய சனி 10இல் மத்திமமான பலனைத் கொடுக்கும். வாகனசுகம் இருக்காது. தாய்க்கு மத்திமமான பலன். பிள்ளைகளின் செயல்பாடு திருப்திதராது. 10இல் சனி, புதன் இருப்பது தொழில் துறை முன்னேறலாம். (9,12) உரிய புதன் 10இல் நல்ல பலனைத் தராது. பிதாவுக்கு கூடாது. சயன சுகம் இருக்காது.

**விருச்சிகம்: விசாகம் 4,அனுசம், கேட்டை**

(1,6) உரிய செவ்வாய் 6இல் ஆட்சியாக இருப்பது விசேஷம் மேலும் சுக்கிரன் நட்சத்திரத்தில் இருப்பது நல்லது. தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத் தரும். உடல் ஆரோக்கியம் உண்டு. மன அமைதிஇருக்கும். (2,5) உரிய குரு 11இல் இருப்பது விசேஷம் கையில் பணம் இருக்கும். பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். (3,4) உரிய சனி 9 இல் இருப்பது மத்திமமான நிலை. நன்மையில்லா விடினும் தீமை இருக்காது. தாய் நலம். வாகன சுகம் உண்டு. இளைய சகோதரத்துக்கு நல்ல பலன் உண்டு (7,12) உரிய சுக்கிரன் 11இல் இருப்பது விசேஷம். திருமண பலன் உண்டு. சயன சுகம் இருக்கும். 10இல் சூரியன் ஆட்சியாக இருப்பது தொழில் துறையில் முன்னேற்றம். அரச உதவி கிடைக்கும். ராசிநாதன் செவ்வாய் சனியும் ஒன்றை ஒன்று பார்ப்பது பல பிரச்சினைகளை உருவாக்கலாம்.

**தனு: மூலம், பூராடம், உத்தராடம் 1.**

(1,4) உரிய குரு 10இல் கேதுவுடன் இருப்பது தோஷம். இருப்பினும் செவ்வாயின் நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தாமதமானாலும் நிறைவேறும். வாகன சுகம் இருக்காது. வசிப்பிடங்களிலும் பிரச்சினைகள் இருக்கலாம். தாய்க்கும் நல்ல காலம் இல்லை. (2,3) உரிய சனி எட்டில் இருப்பதை அட்டமத்துச்சனி யென்பர். பாதகமான பலனைக் கொடுக்கும். கையில் பணம் இருக்காது. இளைய சகோதரத்துக்கு கூடாது. (5,12) உரிய செவ்வாய் 5இல் நல்ல பலனைத் தராது. சயன சுகம் இருக்காது. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். (6,11) உரிய சுக்கிரன் 10இல் நல்ல பலனைத் தரார். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். பகைவரின் கை ஓங்கலாம். நண்பர்களுக்கு நல்லதல்ல. மூத்த சகோதரத்துக்கு கூடாது. (7,10) உரிய புதன் 8இல் இருப்பது நல்லதல்ல. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். தொழில் துறையில் முன்னேற்றம் இருக்காது.

**மகரம்:உத்தராடம்2,3,4, திருவோணம், அவிட்டம்1,2**

(1,2) உரிய சனி 7இல் இருப்பது நல்லதல்ல. இருப்பினும் தனது நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தடைப்படலாம். கையில் பணம் இருக்காது. பிரயாண வாய்ப்பு உண்டு. (3,12) உரிய குரு 9இல் இருப்பது விசேஷமானது. சயன சுகம் உண்டு. இளைய சகோதரத்துக்கு நல்ல பலன் காட்டும் (4,11) உரிய செவ்வாய் 4இல் இருப்பது தோசமானது. தாய்க்கும் கூடாது. வாகன சுகம் இருக்காது. நண்பர்களுக்கும் மூத்த சகோதரத்துக்கும் மத்திம பலன். (5,10) உரிய சுக்கிரன் 9இல் இருப்பது விசேஷமானது. பிள்ளைகளின் செயல்பாடு திருப்தி தரும். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்கும். (6,9) உரிய புதன் 7இல் நல்ல பலனைச் செய்யாது. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். பிதாவுக்கு கூடாது. எதிரிகளின் தொல்லை இருக்கும். சனி வழிபாடு செய்வது நல்லது.

**இவ்வார 'ராசிபலன்' 15–08–2005 முதல் 21 –08–2005வரை**

**பொ. சந்திரன்**

### இவ்வார கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| ராகு | செவ் | | |
| | செவ்வாய் பரணி சந்திரன்<br>புதன் பூசம் சனி<br>சுக்கிரன் உத்தரம் சூரியன் | | புதன் சனி |
| | சூரியன் மகம் கேது<br>குரு சித்திரை செவ<br>சனி பூசம் சனி | | சூரியன் |
| | | | குரு கேது சுக்கிரன் |

ஆடி 30முதல் ஆவணி 05 வரை

சந்திரன் தனு முதல் கும்பம் வரை

**கும்பம்: அவிட்டம் 3,4. சதயம், பூரட்டாதி 1,2,3.**

(1,12) உரிய சனி 6இல் இருப்பது விசேஷமானது. மேலும் தனது நட்சத்திரத்தில் இருப்பது நல்லது. தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத்தரும். பிரயாணவாய்ப்பு உண்டு. சயன சுகம் உண்டு. (2,11) உரிய குரு 8இல் இருப்பதில் பயன் இல்லை. கையில் பணம் இருக்காது. நண்பர்களுக்கும் கூடாது. மூத்த சகோதரத்துக்கும் நல்லதல்ல. (3,10) உரிய செவ்வாய் மூன்றில் ஆட்சியாக இருப்பது சிறப்பானது. தொழில்துறை முன்னேற்றம். இளைய சகோதரத்துக்கு நல்ல பலன் காட்டும். (4,9) உரிய சுக்கிரன் 8இல் நல்ல பலனைத் தரும். பெற்றோர் நலம். வாகன சுகம் உண்டு. 7இல் சூரியன் ஆட்சியாக இருப்பது நல்லதல்ல. திருமண வாய்ப்பைப் பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. 6ம் வீடு வலுவாக இருப்பதால் உடல் ஆரோக்கியம் உண்டு. பகை விலகும். குரு விழிபாடு ஆறுதல் தரும்.

**மீனம்: பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி.**

(1,10) உரிய குரு 7இல் இருப்பது நல்லது. மேலும் செவ்வாயின் நட்சத்திரத்தில் இருப்பதும் நல்லது. ஆனால் ராகு கேதுக்களின் தொடர்பு ராசிக்கும் ராசிநாதனுக்கும் இருப்பது தோஷமானது. தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத் தரும். தொழில் துறை முன்னேறும். (2,9) உரிய செவ்வாய் இரண்டில் இருப்பது தோஷமானது. கையில் பணம் இருக்காது. பிதாவுக்கு கூடாது. (4,7) உரிய புதன் 5இல் இருப்பது சிறப்பானது. தாய் நலம். வாகன வாய்ப்பு உண்டு. நல்ல வசிப்பிடம் அமையலாம். திருமண வாய்ப்புண்டு. 6ம் வீட்டில் சூரியன் ஆட்சியாக இருப்பது சிறப்பானது. உடல் ஆரோக்கியம் உண்டு. பகைவர்கள் அடங்கி இருப்பர். (11,12) உரிய சனி 5இல் இருப்பது நல்லதல்ல. சயன சுகம் இருக்காது. நண்பர்களுக்கு நல்ல பலன் இல்லை. மூத்த சகோதரத்துக்கு கூடாது.

# புலிகளிடம் என்ன ரக விமானங்கள் உள்ளன?

தமிழீழ விடுதலைப் புலிகளின் விமானத் தாக்குதல் எங்கு, எப்போது நடைபெறும் என்று தெரியாமல் கிளிநொச்சியின் வான்பரப்பையே தலை நிமிர்ந்து பார்த்துக் கொண்டிருக்கிறது சிங்கள இராணுவக்கட்டமைப்பு.

இந்தச் சூழலில் தமது இராணுவ வீரர்களின் அச்சத்தைப் போக்கிக் கொள்வதற்காக இந்தியாவிடம் அது சரணடைந்துள்ளது. தெற்காசிய நாட்டின் வல்லரசாக தன்னை நினைத்துக்கொண்டிருக்கும் இந்தியாவும், ஸ்ரீலங்கா வான்படையினரை இருகரம் நீட்டி வரவேற்று தனது வான்படை பயிற்சி நிலையங்களில் பயிற்சி கொடுத்து வருகிறது.

இறுக்கமான பொருளாதாரத் தடைகளையும் மீறி தமிழீழ விடுதலைப் புலிகள் எப்படி தமது விமானங்களைத் தயாரித்து முடித்தனர் என்று சர்வதேச நாடுகள் மூக்கின் மேல் விரலை வைக்க, சிங்கள அரசோ யுத்த நிறுத்தத்தைப் பயன்படுத்தி அவர்களால் இவற்றை தயாரிக்க முடிந்தது என கதை அளந்திருக்கிறது.

ஆனால், 1998ஆம் ஆண்டே நாம் விமானப் படையை உருவாக்கி விட்டோம் என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச் செல்வன் அறிவித்திருந்தார்.

இந்தியாவில் நிலைமைகளை அறிவதற்காக 5 பேர் கொண்ட விமானப்படை அதிகாரிகளைக்கொண்ட குழு ஒன்று ஜூன் மாதம் இந்தியா சென்று திரும்பியது.

இக்குழுவினர் இந்திய விமானப்படைத் தளபதி சசிந்திர பால் தியாகி உள்ளிட்ட அதிகாரிகளைச் சந்தித்து விடுதலைப்புலிகளின் வான் படைப் பலத்தை எதிர்கொள்ள ஆலோசனை நடத்தி உள்ளதாகத் தெரியவருகிறது.

இப்போது 20 விமானப்படை அதிகாரிகள் இலங்கையில் இருந்து இந்தியாவில் பயிற்சிக்காக அனுப்பப்பட்டுள்ளனர். விமானப்படையின் மின்னணு தொழில்நுட்பத் துறை உள்ளிட்ட விமானப் படையின் பல்வேறு பயிற்சிகள் அவர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

1967இல் அரபு உலகத்தின் மீது இஸ்ரேல் நடத்திய யுத்தத்தின்போது 385 விமானங்களை எகிப்து இழந்ததாக வரலாறு. அந்தக் காலத்தில் சோவியத் யூனியன் அள்ளி அள்ளிக் கொடுத்த விமானங்கள் இவை. இஸ்ரேலுக்கு அமெரிக்காவின் முழு இராணுவ ஒத்துழைப்பு அப்போது கிடைத்தது. இப்போதும் கிடைத்து வருகிறது.

ஆனால் தமிழீழ தேசத்துக்கு எந்தத் தேசம் கொட்டிக் கொடுத்தது?

உலகின் நாலாவது படைவலு கொண்டிருப்பதாகச் சொல்லப்படும் இந்திய அரசு அச்சப்படும் அளவுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளிடம் என்ன ரக விமானங்கள் இருக்கின்றன?

அமெரிக்க தயாரிப்பான ஹெர்குலஸ் சி – 130 ரக சரக்கு போக்குவரத்து விமானம் உள்ளிட்ட 2 அல்லது 3 விமானங்கள் புலிகளிடம் உள்ளன. இவற்றில் செக் தயாரிப்பான ஜிலின் இசட் – 143 ரக விமானம் இரவு நேரப் பயிற்சிக்குப் பயன்படுத்தப்படுகிறது என்கிறது ஸ்ரீலங்கா வான் படைத்தரப்பு.


வவுனியாவில்!




கிளைப் பணிமனை

வவுனியா நகர மையத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

58, கண்டிவீதி,
(பஸ்நிலையம் முன்பாக,
கண்டிவீதி - முதலாம் குறுக்குத்தெருச் சந்தியில்)
வவுனியா.

தொலைபேசி: 024 222 4848, 071 422 0008

# சுவடுகள்

கடந்த சில வாரங்களாக நான் ஒரு 'Ring in Tone' உடன் மாரடிக்க வேண்டி இருந்தது. என்ன அவ்வளவு வயதா போய்விட்டது; யாரும் போன் எடுப்பவர் அடுத்த பக்கதில் கொஞ்சம் கண கணப்பாக இருக்கட்டுமே என்று, எனது மொபைல் கொம்பனிக்கு Text அனுப்பி அவர்கள் எனக்கு பதில் அனுப்பி ஒரு நிமிடத்துக்கு இரண்டு ரூபா கொட்டி எத்தனையோ நிமிடங்கள் இசைத் தேர்வு நடத்தி எனக்கும் இன்னும் பல பேருக்கும் பிடிக்கும் என்று மனதில் யோசித்து அந்த 'Ring in Tone' ஐ எனது மொபைலுக்கு 'டவுண்லோட்' செய்தேன். 20 ரூபா செலவு. மாதம் 50 ரூபா என்று நண்பர்கள் பயப் பீதியை யூட்டினார்கள்.



அது போட்டவுடன் முதலாவது 'கோல்' மனைவியிடமிருந்து, ''ஏன் உந்தப்பாட்டை போட்டு வைத்திருக்கிறீர்கள், உது இளசுகள் கேட்கிறதல்லோ.''

அப்பொழுதிருந்தே ஆரம்பித்தது 'Ring in Tone' பிரச்சினை எனக்கு.

பிறகு எனது நண்பர் பத்திரிகைக்காரர் ஒருவர் எடுத்தார். ''என்ன நீங்கள் உந்த பாட்டை போட்டிருக்கிறியள். உது உங்களுக்கு சரியில்லை. ஒரு எழுத்தாளர் போடுகிற பாட்டா உது. மதிப்பை குறைத்து விடும் மாத்துங்கோ''.

அதற்குப் பிறகுதான் யோசித்தேன். ஒரு எழுத்தாளன் இப்படி எல்லாம் மற்றவர்களின் மன ஓட்டங்களை புரிந்து கொண்டுதான் வாழவேண்டும். அது சமூகத் தேவையும்கூட.

ஒருமுறை நபிபெருமானார் கடைவீதிக்கு போனார். முகம் மூடி பர்தா அணிந்த தனது மனைவியையும் அழைத்துக் கொண்டு. இடையில் ஒரு இடத்தில் நபித் தோழர்கள் சந்தித்தார்கள். அவர்களிடம், ''இது எனது மனைவி'' என்று அறிமுகப்படுத்திவிட்டு சென்றார்.

நபித்தோழர்கள் அதிசயித்தனர். நபிகளார் சொன்னார்கள், ''ஷைத்தான் சந்தேகத்தை ஏற்படுத்தி விடுவான்''.

பொதுவாழ்வில் ஈடுபடுபவர்கள் எப்படி இருக்கவேண்டும் என்பதற்கான அறிவுரை அது.

எனது 'Ring in Tone' ஐ மாற்றுவதற்கு மேலும் பல நிமிடங்களும், பல 2 ரூபாக்களும் செலவழிந்துவிட்டன.

ஆனால் குறிப்பிட்ட இசை பெட்டிகளுக்குள் வேறு இல்லை; எங்களுக்கென்று பொருத்தமானவை.

பிறகு ஒரு 'தாய்' சம்பந்தமான பாடல் போட்டேன். ஆனால் அத 'காதல்' பாடல் போல இருப்பதாக எனது 'மதினி' திட்டினாள்.

எனது எல்லா ஆசைகளும் மரித்துவிட்டன. உடனடியாக சாதாரண சத்தமே – வழமையானதே – போதும் என்ற நிலைக்கு வந்துவிட்டேன். அதையும் 'போன்' காரரிடம் சொல்லி மாற்றவேண்டும்.

இப்படி ஆசைப்படும் என் போன்றவர்களுக்காக ஒரு நாதஸ்வரம், வயலின், வீணைபோன்ற இசைகளையும் 'போன்' காரர் சேர்த்தால் நல்லது என்று பட்டது.

இப்பொழுது இளையவர்கள் எல்லாம் போனில் சத்தம் போட்டுத் திரிகிறார்கள். கேட்பவர்கள் சந்தோஷப்பட. எங்களைப் போன்றவர்களுக்காக ஒரு சத்தம் இல்லை.

* * * *

யாழ்ப்பாணத்தில் இருந்து விமானப் பயணம் என்பது ஒரு முக்கியமான சேவைதான். பலருக்கு இது வாய்ப்பு,வசதி.

பலாலிக்கு விமானப்பயணக்காரரின் பஸ்ஸில் ஏற்றிக் கொண்டு போனார்கள். போகும்போது வயிறு பற்றி எரிகிறது.

எத்தனை ஏக்கர் விளைநிலங்கள், எத்தனை பாடசாலைகள், குருவி சேமித்தது போல் சேமித்து கட்டிய வீடுகள், வளவுகள், கோவில்கள் எல்லாம் குண்டடிபட்டு இடிந்து காடுபத்திப்போய்க் கிடந்தன.

தமிழர் பூமி எத்தனை அழிவுகளை கண்டுவிட்டது. காணி உறுதி இருக்கிறது காணி சொந்தமில்லாமல். உயர் பாதுகாப்பு வலயம் அபகரித்துக் கொண்டு விட்டது.




வீடுகளில் இராணுவமும் விமானப் படையும் குந்தியிருக்கின்றன. அப்படி விமானப் படை வைத்திருக்க வேண்டுமென்றால் 'உயர்பாதுகாப்பு' வலயத்தில் உள்ள வீடுகளுக்கு மாத வாடகை கொடுக்கலாமே. கொடுக்க வேண்டும்.

வீடு கட்டியது வாழ்வதற்கே தவிர அபகரிப்பதற்கல்ல.

எத்தனை கோடி யுத்தச் செலவுக்கு என்று ஒதுக்கப்படுகிறது. அதில் ஒன்றிரண்டு கோடிகளை வீட்டு வாடகையாக கொடுக்கலாமே. இதைத்தான் ஆக்கிரமிப்பு என்கிறோம்.

எனது சீற்றுக்கு அருகில் இருந்தவர், '15 – 10' என்று கறுப்பால் எழுதியிருந்த வீட்டைக் கண்டதும் கண்ணீர் விட்டு அழுதார். பலாலிக்கு போகும் போது நடந்தது இது. ''ஏன் ஐயா'' என்று கேட்டேன். ''என்ரை அப்பர் உந்த வீட்டைக் கட்டுவதற்கு என்ன கஷ்டப்பட்டார். வாயைக்கட்டி வயித்தைக்கட்டி ஏழு பிள்ளைகளோடு என்ரை அம்மா சிறுகச் சிறுக சேமித்து எங்களுக்கு ஒதுங்க ஒரு இல்லிடம் வேண்டும் என்று கட்டிய வீடு. நான் பிறந்த வீடு.

உந்த முற்றத்தில்தான் நான் விளையாடினேன். எனக்கு என்ரை முற்றத்து மண்ணை மிதிக்கமுடியாது.

என்ரை மனம் கொதிக்குது. அபகரிச்சுப் போட்டாங்கள். இந்த இடத்தைப் பிடிச்சதாலை உவைக்கு அழிவு வராது எண்டு நினைக்கிறியளோ. உதிலையும் விட ஆயிரம் மடங்கு பாதுகாப்பா வைச்சிருந்த இடம்தானே 'எயார்போட்'. அதே ஆறு மணித்தியாலத்துக்குள்ளே அழிஞ்சு போச்சுதே.

பல நூறு பேரின்ரை வயித்தெரிச்சல் சும்மா விடுமே''

கேவிக் கேவி அழுதார் அவர்.

* * * *

வியாபாரிகளை இன்னும் நுகர்வோர் நம்ப மறுக்கின்றனர். அவர்கள் களவு செய்து விடுவார்கள் என்ற பயம்.

அரபு நாடுகளில் வியாபாரிகள் மீது அதீத நம்பிக்கை. நுகர்வோருக்கு தரமான பொருட்களை கொடுத்து அதற்கான பணத்தை பெறுபவர்கள் அரப்பிக்காரர். இதனை 'அரபு எமிரேட்ஸ்' எங்கு போனாலும் பார்க்கலாம். தற்செயலாக ஏதாவது பொருளின் மீது மனச் சந்தேகம் ஏற்பட்டால் விற்பவரிடம் உறுதிப்படுத்திக் கொள்ளலாம். 'வல்லாஹி' (அல்லாஹ்வின் மீது ஆணையாக) என்று வியாபாரி உறுதிப்படுத்தினால் படுத்தினதுதான். அதற்கு மீறி வேறொன்றுமில்லை.

ஐரோப்பிய நாடுகளிலும் தரமான பொருட்கள் கிடைக்கும். அதற்கேற்ப விலை – ஏமாற்றமாட்டார்கள். அதை மீறிவேறொன்றும் இல்லை.

முறிகண்டியில் அண்மையில் யாழ்ப்பாணம் போனபோது பஸ்ஸில் இருந்து இறங்கி உடல்களைப்பை ஆசுவாசப்படுததி அருமையான சுடச்சுட வடை, நல்ல சாயம் போட்ட தேத்தண்ணி என்று சிறிய புசிப்பின் பின்னர்.



கடலை வாங்கி கொறிக்கா விடில் பத்தியப்படாதே.

பெரிய 'பேசினில்' கடலைகள் முழுசு முழுசாக. உடைத்தால் முத்து முத்து பருப்பு சோட்டையாக இருந்தது.

கடலைக் குவியலுக்கு மேல் சிறிய 'சொப்பிங்' பையில் கட்டி, ''ஒரு பை பத்து ரூபா'' என்றார் கடலைக்காரர்.

''அண்ணை இது பேசினில் உள்ளதுதானே'' என்று பலமுறை கேட்டேன்.

நண்பன் சந்திமால் கேட்டான், ''ஏன் இத்தனை முறை கேட்கிறாய்?''

இருந்தும் ''பரவாயில்லை எனக்கு 'பேசின்' கடலையே தாங்கோ'' என்றபோது கூட கடலைக்காரர் 'சத்தியமாய் இது பேசின் கடலைதான்'' என்றார்.

முறிகண்டியானுக்கு முன்னால் அவர் சத்தியத்தை மதித்தேன்.

பஸ்ஸில் ஏறி பையை அவிழ்த்தால் அரைவாசி சக்குப் பிடித்த நிலக்கடலை.

எனது சந்தேகத்தினை நண்பனுக்கு உறுதிப்படுத்தினேன்.

பஸ் புறப்பட்டுவிட்டது. தேடிப்பொறுக்கி நல்லது ஐந்தாறை கொறித்தேன். மனம் அவரைத் திட்டிக்கொண்டே இருந்தது. தவிர்க்க முடியவில்லை. பத்து ரூபாவுக்கு 15 ரூபா வாங்கியிருக்கலாம். நல்ல கடலையை அவர் தந்திருக்கலாம் உணவுப் பண்டங்களில் ஏன் இப்படிச் செய்கிறார்கள்?

முறிகண்டியில் கடலை வாங்குபவர்கள் பேசினில், கடகத்தில் குவித்து வைத்திருக்கும் நல்ல கடலையையே கேட்டு வாங்கவும். 'பாலப்பழம்' எமக்கு முன்னால் கடகத்தில் இருப்பதையே வாங்கவும். உரப்பையில் மேசைக்கு கீழ் இருந்து எடுத்துத் தருவதை தவிர்க்க வேண்டும்.

'சத்தியம்' செய்வதைப் பொருட்படுத்த வேண்டாம்

* * * *

'செம்மணி' எங்களது மனதை விட்டு அகல மறுக்கின்றது. 'பாவி'கள் செய்த கொடுஞ்செயல் அதற்கருகால்போய் வரும் போதெல்லாம் மனது கருகிப்போகிறது. இலங்கையின் 'நீதி' தமிழருக்கல்ல என்பதனை வெளிச்சாட்சியாய் சொல்வது 'செம்மணி'.

சேரன் எனக்கு பிரமிப்பூட்டுபவன்; 80களில் இலங்கைத் தமிழ் கவிதைப் போக்கின் மையப்புள்ளியாக இருந்தவர். சேரனின் கவிதையொன்று –

*கைவிலங்குகளுடன்*
*வரும் சமாதானத் தேவதையின்*
*ஒரு காலடியிலே மறைகிறது வெளி.*
*வெளியில் எழுகின்றது*
*கடற்கரையை வேலிபோட்டு*
*காவல் இருப்பவனின்*
*புன்முறுவல் தாங்கிய முகம்.*

*அந்த முகத்தருகே*
*காற்றையும் நீரையும்*
*காசுக்கு விற்கப் பெருநிதி சொரிந்து*

*நிலத்தையும் வளத்தையும் விழுங்குகின்ற*
*இன்னொரு பிசாசு முகத்தையும்*
*கண்டேன்.*

*பனையளவு உயரத்தில்*
*திடீரென முளைக்கின்றன முகங்கள்*
*விளம்பரப்பலகைகளாக*

*செம்மணியை மூடியது*
*செல்லரிப்பான்.*

***– சேரன்***
***'செம்மணி'***
***தொகுப்பு – மீண்டும் கடலுக்கு;***
(இன்னும் பதியும்)

இளைய அப்துல்லாஹ்

# ஜனாதிபதித் தேர்தல் ரணிலின் 1+1 திட்டம்

ஜூலை 25ஆம் திகதி ஐ.தே.கவின் அரசியல் விவகாரக் குழுக் கூட்டம் நடைபெற்றபோது, ரணில் விக்கிரமசிங்க விசேட அறிவித்தல் ஒன்றை முன்வைத்து உரையாற்றினார். ஆகஸ்ட் 16ஆம் திகதியின் பின்னர் ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதியை அறிவிப்பதற்கு தேர்தல் ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு என்றும் ரணில் தெரிவித்தார்.

''ஆகஸ்ட் 16ஆம் திகதியின் பின்னர் எந்த நேரமும் வர்த்தமானி அறிவித்தல் ஒன்றின் மூலம் இந்தத் திகதியை தேர்தல் ஆணையாளரால் அறிவிக்க முடியும். எதிர்வரும் மூன்று மாதங்களிலும் கட்சி மிகக் கடுமையாக உழைக்க வேண்டியிருக்கும். இந்த அரசாங்கம் எவ்வாறு மக்களைத் தவறாக வழிநடத்திச் சென்றிருக்கிறது என்பது பற்றி அவர்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டியிருக்கும்'' என்றும் அங்கத்தவர்களுக்கு ரணில் அறிவுறுத்தினார்.



இவ்வாறு கூறிய அவர் திஸ்ஸ அத்தநாயக்கவின் பக்கம் திரும்பியபோது, வடக்கு - கிழக்கு உட்பட நாட்டின் சகல மாவட்டங்களிலும் கட்சியைப் பலப்படுத்த வேண்டிய நடவடிக்கைகள் அனைத்தும் எடுக்கப்பட்டுள்ளதாக அத்தநாயக்கா தெரிவித்தார். இம்மாதம் முதலிரு வாரங்களிலும் இதற்கான மதிப்பீடு ஒன்று செய்யப்பட இருக்கிறதென்றும், பலவீனமான விடயங்கள் கண்டுபிடிக்கப்படுமிடத்து அவற்றை நிவர்த்திப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் ரணில் தொடர்ந்து கூறினார்.

அவர் இவ்வாறு கூறிமுடித்ததும் தனது ஒன்று+ஒன்று (1+1) திட்டத்தை அறிமுகம் செய்தார். ஐ.தே.கவின் வாக்குப் பலத்தை அதிகரிப்பதற்கான திட்டமே இது என்று அவர் அப்போது தெரிவித்தார்.

கடந்த தேர்தலின்போது ஐ.தே.க. இழந்த 5 லட்சம் வாக்குகளை இந்தத் திட்டத்தின் மூலம் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அவர் அப்போது தெரிவித்தார்.

கட்சியின் அடிமட்டத் தொண்டர்கள் ஒவ்வொருவரும் 50 புதிய வாக்குகளை ஒவ்வொரு வாக்களிப்பு நிலையத்திலும் ஐ.தே.கட்சிக்கு பெற்றுத் தரவேண்டும். இவ்வாறு புதிதாகப் பெற்றுக் கொள்ளும் 50 புதிய வாக்குகளும் கட்சியின் வாக்கு வங்கியை 5,00000 மேலதிக வாக்குகளால் நிரப்பும் என்று கூறினார்.

ஒரு கிழமைக்குள் இந்தத் திட்டம் பற்றிய முன்னேற்றத்தை கட்சிக்கு அறிவிப்பதற்காக குழு ஒன்றும் நியமிக்கப்பட்டது. திஸ்ஸ அத்தநாயக்கா, பதில் தலைவர் கரு ஜயசூரிய, மலிக் சமரவீர, மிலிந்த மொரகொட, ரோசி சேனநாயக்கா, தஹாம் விமலசேன ஆகியோர் இந்தக் குழுவின் அங்கத்தவர்களாக நியமிக்கப்பட்டனர்.

பத்திரிகையாளர்கள் மற்றும் இரு தொலைபேசி நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா, விடுத்த பயமுறுத்தல் பற்றி அங்கத்தவர்களிடம் தெரிவித்த ரணில், பிரதி அமைச்சர் ஒருவர் இவ்வாறு நடந்து கொண்டது நாட்டில் சட்டத்தையும், ஒழுங்கையும் சீர்குலைக்கும் என்று தெரிவித்தார். ''நான் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் இவ்வாறான செயல்களை ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை. யாராவது இவ்வாறு நடந்து கொண்டால் அதுவே அவரின் அரசியல் வாழ்க்கையின் முடிவாக இருக்கும். என்னால் முடிந்த அளவு இத்தகைய செயல்களுக்கு எதிராக நடவடிக்கைகள் நிச்சயம் எடுப்பேன். அதற்கு உங்களின் ஆதரவும், ஒத்துழைப்பும் தேவை.'' -இப்படி கூறி முடித்தார் ரணில்.




**பித்தன் மீது பித்துக் கொண்ட வாசகர்களுக்கு:-**

பித்தனிடம் நீங்கள் எத்தனை கேள்விகளையும் கேட்கலாம். தரமான கேள்விகளுக்கு பித்தன் பதில் அளிப்பான். நீங்கள் அனுப்பும் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி:-

பித்தன் பதில்கள்
'சுடர் ஒளி வாரஇதழ்'
85, ஜெயந்த மல்லிமாராய்ச்சி மாவத்தை,
கொழும்பு - 14

*பொ.கேமருபன், கிரான்.*

**கேள்வி:–** பித்தா! பெண்களைக் கண்டவுடன் ஆண்கள் ஏன் தம்மையே மறந்து விடுகிறார்கள்! விரிவாகப் பதில் தாரும்?



**பதில்:–** இதற்கு விரிவு எல்லாம் தேவை இல்லை. சுருக்கமான பதில், ஆண்களின் ஹோமோன்கள் செய்யும் கோலம் அது.

*தினேஷ், இத்தாவில்.*

**கேள்வி:–** அன்பின் பித்தா! ஒவ்வொரு இரவும் கனவில் நயன்தாரா வந்து தன்னோடு டூயட்பாடி ஆடக் கூப்பிடுகிறார். என்ன செய்வது பித்தா. அவரை நம்பி டூயட் பாடி ஆடப் போகலாமா?



**பதில்:–** கவனம்... டூயட் பாடும்போது நயன்தாரா தனது உதட்டைத் தருவார்... அதனைக் கடித்து இழுப்பதாக (வல்லவன் படத்தில் சிம்பு போல) நினைத்து உமக்கு அருகிலே படுத்திருப்பவரின் உதட்டைக் கடித்து இழுத்து பிய்த்து எடுத்து சங்கடத்தில் மாட்டிக் கொள்ளப் போகிறீர் கவனம்.

*சிதம்பரம் ராஜேந்திரன், கெரவளப்பிட்டி – வத்தளை.*

**கேள்வி:–** அர்த்தமுள்ள நகைச்சுவையை அள்ளிக் கொடுத்த கிருஷ்ணன் – மதுரம் ஜோடியைப் போல் இன்று யாரைக் குறிப்பிடலாம் பித்தன் சார்?

**பதில்:–** கிருஷ்ணனின் இடத்தை – சின்னக் கலைவாணர் என்ற விவேக் எப்போதோ தட்டிக்கொண்டு விட்டார். ஆனால், மதுரத்தின் இடத்துக்கு எவரும் வரவில்லை. தமிழ் சினிமாவைப் பொறுத்தமட்டில் நகைச்சுவை நடிகைகளுக்கு எப்போதுமே தட்டுப்பாடு தான். இதில் மதுரம் மாதிரி அல்ல, மனோரமா மாதிரி கூட இன்னமும் எவருமே கிடைக்கவில்லையே!

*யே.நிக்ஷன், மல்லாவி.*

**கேள்வி:–** வெளிநாட்டு மாப்பிள்ளைக்கும் – உள்நாட்டு மாப்பிள்ளைக்கும் என்ன வித்தியாசம் பித்தா?

**பதில்:–** அது டொலர் அல்லது பவுண் அல்லது யூரோ மாப்பிள்ளை. இது ரூபா சத மாப்பிள்ளை....

*ச.சபேசன், 4ஆம் கட்டை, பூநகர்.*

**கேள்வி:–** பித்து மாமா! பித்தன் பதிலுக்கு சித்திரம் வரையும் சாமி பயங்கர ஆசாமி போலத் தெரிகிறது. சீச்சீ... படம் இப்படியும் வரைவதா? தயவு செய்து தணிக்கை செய்யச் சொல்லவும்?

**பதில்:–** ஐயயோ... அவர் வரைந்தவற்றில் தணிக்கை செய்தவைதான்... வெளியாகும் படங்கள். இதுக்கே இப்படி சிலிர்த்துக் கிறீரே...! அவர் வரைந்த எல்லாப் படங்களையும் பார்த்தால் மயங்கி விழுந்து விடுவீர்....

*பாலசிங்கம் செல்வி, கல்மடுநகர்.*

**கேள்வி:–** பித்தா! கற்பனையே வாழ்க்கை என்று வாழ்பவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்?

**பதில்:–** வாழ்க்கைக்கு கற்பனை வேண்டியது தான். ஆனால் கற்பனையே வாழ்க்கையாகி விடக்கூடாது. எதிர்காலத்திலே நான் அப்படி வரவேண்டும் இப்படி வாழ வேண்டும் என்ற கற்பனைகள் வளமான வாழ்வுக்கு வழி அமைக்கும்.

அதாவது ஒருவன் நான் ரஜனிபோல், விஜய் போல், பில்கேட்ஸ்போல், சச்சின் டெண்டுல்கர் போல், வேலுப்பிள்ளை பிரபாகரன் போல வரவேண்டும் என்று ஆசைப்படுவது எதிர்காலத்துக்கு ஆரோக்கியம். ஆனால் அவர்கள் தான் நான் என்று கற்பனை செய்தபடி வாழ்ந்தால் அது அழிவிலே தான் கொண்டுபோய்விடும்.

*நீதன், விக்கி குடியிருப்பு, வள்ளிபுனம்.*

**கேள்வி:–** டியர் பித்தா! சீரியஸாக காதலிக்கும் பெண்களையும் பொழுது போக்காக காதலிக்கும் பெண்களையும் எப்படி இனம் காணுவது?

**பதில்:–** பொழுது போக்கான காதல்கள் தான் பின்னர் சீரியஸான காதல்களாக மாறும் – சில சீரியஸான காதல்கள் பொழுது போக்கானவையாகவும் மாறலாம். எனவே இவைகளை இனம் காணுவது என்பது மகா கஷ்டம்.... ஐயா... சுனாமி வருவதை கூட அறிந்து கொள்வது சுலபம் ஆனால், இந்த காதல் இருக்கிறதே இது எங்கே, எப்போது, எப்படி வரும் அது எப்போ பொழுது போக்காக மாறும் அல்லது சீரியஸானதாக ஆகும் என்பது மகா மர்மம் ஐயா...

*பா.யசோதா, கிளிநொச்சி.*

**கேள்வி:–** அன்பின் பித்தா! எனது உயிர் நண்பி என்னுடன் அடிக்கடி சண்டை பிடிக்கிறாள். இது பாசமா... வேஷமா?



**பதில்:–** பாசமுள்ளபடியால்தான், தன்னுடன் முரண்பட்ட விடயங்களுக்காக உம்முடன் சண்டைபோடுகிறார். சண்டைபோட்டு உம்மைத் திருத்தி தன்னுடன் உடன்பட வைக்க முயற்சிக்கிறார். அது வேஷம் என்றால் எப்போதோ நீயாச்சு... உன் பாடாச்சு என்று உம்மை விட்டு விட்டு விலகிப் போயிருப்பாரே.

*அ.அஜந்தன், முள்ளிவாய்க்கால் கிழக்கு.*

**கேள்வி:–** பித்தா! நாம் எல்லாம் பெண்களைப் பற்றியும் அவர்களின் நடை, உடை, பாவனைகளைப் பற்றியும் விமர்சிக்கிறோம். ஆனால் தற்போது பல ஆண்கள் கிழிந்த ஜீன்சும், சிகரட்டும், கையிலே பியரும், முகத்திலே கோடுபோட்டது போல் தாடியுமாக அலைகிறார்களே. இவர்களைப் பற்றி என்ன கூறுகிறீர்?

**பதில்:–** இதெல்லாம் எதற்காக, பெண்களை குறிவைத்து தானே – எனவே பெண்களின் நடை உடை, பாவனைகளால் தான் ஆண்களும் இப்படி தம்மை கேவலப்படுத்தி அலைய வேண்டியிருக்கிறது.

*கே.சது, நயினாதீவு.*

**கேள்வி:–** பித்தா எனது நண்பி சிம்புவை நினைத்து உடல் மெலிகிறாள் அவளுக்கு என்ன சொல்லித் தேற்றலாம்?



**பதில்:–** இப்போது உடல்தானே மெலிகிறாள் பரவாயில்லை. சிம்புவுடன் சகவாசம் வைத்தால்வயிறு பெருத்து விடும் எனவே சீச்சி... அந்தப் பழம் புளிக்கும்... ஏனென்றால் புளித்த பழத்தை தின்ன வேண்டி வந்து விடும் என்று சொல்லித் தேற்றும்.

*ஆர்.எம். கதிர்நிலவன், மாணிப்பாய்.*

**கேள்வி:–** இலங்கையில் ஜனாதிபதி தேர்தல் ஒன்று மிக விரைவில் நடைபெறுமா பித்து? அப்படி நடந்தால் தமிழர்கள் யாராவது ஜனாதிபதி வேட்பாளராக நிற்ககூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவா?



**பதில்:–** எப்படியும் இந்த வருட இறுதியில் ஜனாதிபதி தேர்தல் நடைபெறும். அதில் ரணில் வெற்றி வெறுவார் என்ற விடயங்கள் அநேகமாக உறுதியாகிவிட்டன. ஆனால் தமிழர்கள் வேட்பாளராக நிற்பது – வெற்றிவெறுவது என்பது எல்லாம் கனவு... ஆனாலும் சும்மா ஒரு கற்பனைக்கு பார்த்தாலும் பெரும்பான்மையான சிங்களவர்களின் வாக்குகள் ரணில், மஹிந்த, விமல் வீரவன்ச இன்னும் போட்டியிடப் போகும் சிங்கள வேட்பாளர்களுக்கு என உடைந்து சிதறிப்போக.... தமிழர் யாராவது போட்டியிட்டு அதிலும் தமிழர்கள் எல்லாம் ஒன்று சேர அவருக்கே வாக்களித்தால் வெல்லக்கூடிய – ஜனாதிபதியாக வரக்கூடிய சாத்தியங்கள் ஏற்படலாம். ஏனென்றால் அரசியலில் எதுவும் நடக்கலாம். ஆனால் வெல்லுபவர் ஜனாதிபதியாக பதவியேற்க முடியுமா? இலங்கையை ஆள முடியுமா? அதற்கு சிங்களப் பெரும்பான்மையினர் இடம் பொடுப்பார்களா? என்பது மில்லியன் டொலர் கேள்வி.

*தே.லொரன்டீனா, ஜெயந்தி நகர்.*

**கேள்வி:–** டியர் பித்து கல்வியா–செல்வமா பெரிதென்று நினைக்கிறீர்? ஏன்?

**பதில்:–** கல்வி... ஏனென்றால் கல்வியறிவுள்ள ஒருவர் அதனைக் கொண்டு செல்வத்தை தேடிக் கொள்ளலாம். ஆனால் நிறைய செல்வம் உள்ளஒருவரால் கல்வி அறிவை தேடிக் கொள்ள முடியுமோ?

*வர.ராஜ்மோகன், கிளிநொச்சி.*

**கேள்வி:–** அன்பின் பித்தா! பெண்களுடன் நட்பு வைக்கலாமா?

**பதில்:–** லாம். ஆனால் நட்புடன் பார்க்கும் போது பார்வை கழுத்துக்கு மேல் இருக்க வேண்டும்.

---

# நைகரில் பஞ்சம், பசி குழந்தைகளுக்கு உணவு புல்

பஞ்சம், பசி, பட்டினி இவற்றின் கோரப்பிடியில் சிக்கி செய்வதறியாது திண்டாடுகிறது ஆபிரிக்கா கண்டத்திலுள்ள 'நைகர்' நாடு.

உண்பதற்கு எதுவுமற்ற நிலையில் சுமார் 150, 000 குழந்தைகள் பட்டினிச் சாவை எதிர் நோக்கி இருக்கிறார்கள். நைகரின் மொத்த சனத்தொகை 120 இலட்சமாகும். இவர்களில் 1/4 பங்கினருக்கு உணவுதவி மிகவும் அவசியமாகத் தேவைப்படுகின்றது. குழந்தைகளின் உயிர்களுக்குப் பிச்சைகேட்கும் 'நைகர்' தாய்மார் தமது பிள்ளைகளைக் காப்பாற்றுவதற்காக இலைகளையும் புல் வகைகளையும் உணவாக அவர்களுக்கு ஊட்டிவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நைகர் உலகிலுள்ள மிகவறிய நாடுகளில் மூன்றாவதாக விளங்குகின்றது. ஐ.நாவின் யுனிசெப் (Unicef) நிறுவனம் நைகரின் நான்கு குழந்தைகளில் ஒன்று ஐந்து வயதுக்கு முன்னர் மரணமடைவதாக அறிவித்துள்ளது.

கடந்த காலத்தில் வெட்டுக்கிளிகள் பயிர்களை நாசம் செய்தமையாலும் இவ்வருடம் நிலவும் கடும் வரட்சியாலும் இந்த உணவுப் பஞ்சம் அங்கு ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

பிரிட்டன் பெருந்தொகையான உணவுப் பொருட்களையும், மருந்து வகைகளையும் மற்றும் அத்தியாவசியப் பொருட்களையும் நைகருக்கு அனுப்பிவைத்துள்ளது.



தவிர, 10 லட்சம் பவுண்கள் பெறுமதியான மேலதிக உதவியை தான் வழங்க இருப்பதாகவும் பிரிட்டன் அறிவித்துள்ளது.

இதுவரை பிரிட்டன் 3 லட்சம் பவுண்கள் பெறுமதியான உதவியை நைகருக்கு வழங்கி இருப்பது குறிப்பிடத்தக்கது.

---

# தேர்தல் அரங்கம்

* ஐக்கிய தேசியக் கட்சி அங்கத்தவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பந்துல குணவர்த்தனாவுக்கு நீதிமந்திரிப் பதவி வழங்க முன்வந்திருக்கிறார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

முன்னைய ஐ.தே.க. அரசாங்கத்தில் பந்துல குணவர்த்தனா கிராமியப் பொருளாதார அமைச்சராகப் பதவி வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதித் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் பந்துலகுணவர்த்தனா தனக்கு ஆதரவளித்தால், அவருக்கு நிதி மந்திரிப்பதவி வழங்கத் தான் தயாராக இருப்பதாகவும் பிரதமர் தெரிவித்து இருக்கிறார்.

அதுமட்டுன்றி முன்னாள் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத்தலைவர் திலங்க சுமதிபால இந்தத் தேர்தலில் தமக்கு ஆதரவளிக்குமிடத்து அவருக்கு நியமன எம்.பி பதவிவழங்குவதாகவும் மஹிந்த ராஜபக்ஷ வாக்குறுதி அளித்துள்ளார்.

* பிரமர் மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் முகாமிலுள்ள அனைவரும் இந்த ஆண்டு தேர்தல் நடைபெறவேண்டும் என்றே விரும்புகிறார்கள். அரசாங்கம் கண்மூடித்தனமாக பொருட்களின் விலைகளை உயர்த்திவருவது பிரமரின் களநிலைமையை வெகுவாகப் பாதிக்கும் என அவர்கள் நினைக்கிறார்கள். உள்ளூர் சாராயத்தின் விலையும் இவ்வாரம் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதற்கு வெளிநாட்டுச் சந்தையைக் காரணம் காட்டமுடியாது என்று அவர்கள் சொல்கிறார்கள்.

அண்மையில் வெளிநாட்டு இராஜதந்திரிகளைச் சந்தித்த பிரதமர் ராஜபக்ஷ 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என்றே கூறியிருக்கிறார்.

* ஐ.தே.கட்சியும், ஸ்ரீ.சு.கட்சியும் தமது தேர்தல் விஞ்ஞாபனங்களைத் தயாரிக்கும் பணியில் மும்முரமாக ஈடுபட்டுள்ளன. ஸ்ரீ.சு.கட்சின் தேர்தல் விஞ்ஞாபனத்தை தயாரிக்கும் பொறுப்பு அஜித் நிவாட் கப்ரால் என்பவரிடம் விடப்பட்டுள்ளது.

இவர் முன்னாள் ஐ.தே.க அங்கத்தவரென்பதும், கட்சியின் சார்பில் கடந்ததேர்தலில் கொழும்பு மேற்கு தொகுதியில் போட்டியிட்டுத் தோல்வி கண்டவரென்பதும் குறிப்பிடத்தக்கது.

**வடகொரியா**

# ஆறுநாடுகளின் அணுஆயுத தவிர்ப்பு மாநாடு ஒத்திவைப்பு

கடந்த ஜூலை மாதம் 26ஆம் திகதி முதல் சீனாவின் தலைநகரான பெய்யிங்கில் நடைபெற்றுவந்த அமெரிக்கா, சீனா, யப்பான், ரஷ்யா, வடகொரியா, தென்கொரியா ஆகிய ஆறு நாடுகள் கலந்து கொண்ட வட கொரியாவின் அணு ஆயுதத்திட்டம் சம்பந்தமான மாநாடு எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 29 ஆம் திகதி வரை முடிவு எதுவும் எட்டப்படாமல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இந்தச் செய்தி எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான். ஏனெனில் இந்த மாநாட்டைத் தொடங்குவதற்காக வடகொரியா மீது பல்வேறு அழுத்தங்களை அமெரிக்கா பிரயோகித்துவந்தது என்பதும் மனநிறைவோடு இந்த மாநாட்டில் வடகொரியா கலந்துகொள்ளவில்லை என்பதும் சர்வதேச அரசியல் நகர்வுகளை அவதானிப்பவர்களுக்கு புரியாமல் இருக்க முடியாது.

## அமெரிக்கா வலைவீச்சு

இந்த மாநாடு 13 நாட்கள் தொடர்ந்தது. இது ஆரம்பமாவதற்கு முதல்நாள் அதாவது கடந்த 15ஆம் திகதி அமெரிக்கா வடகொரியாவை வளைத்துப் பிடித்து மடக்குவதற்கேற்றவகையில் தனிப்பட்ட முறையில் அதனுடன் பேச்சுவார்த்தை நடத்தியது.

அப்போது வடகொரியாவுக்கு வாக்குறுதிகள் பல வழங்கப்பட்டன. இதுவரை கொடிய ஒரு நாடாக வடகொரியாவை வர்ணித்த அமெரிக்கா இப்போது அதை ஒரு இறைமையுள்ள நாடென்று கூறியிருப்பதுடன் அதை எப்போதாவது தாக்கும் அல்லது ஆக்கிரமிக்கும் எண்ணம் தனக்கு இல்லை என்றும் வாக்குறுதி அளித்திருக்கிறது.

இவ்வாறான ஆறுதல் வார்த்தைகளுக்குப் பின்னரும் வடகொரியா அசைந்து கொடுக்க முன்வரவில்லை. அதுபோல அமெரிக்காவும் வடகொரியாவின் அணு ஆயுதத் திட்டம் பற்றி தான் முன்னர் கொண்டிருந்த நிலைப்பாட்டிலிருந்து இம்மியேனும் நகர்ந்து விட்டுக் கொடுக்கத் தயாராக இருக்கவில்லை.

## அமெரிக்கா நிபந்தனை

அமெரிக்கா தனது பிடியைத் தளர்த்திக் கொள்ள முன்வராமல் இருந்தமை வடகொரியாவுக்கு ஏமாற்றத்தைக் கொடுத்தது. தனது அணு ஆயுதத்திட்டங்களை வடகொரியா பூரணமாகக் கைவிட வேண்டும் என்பதே அமெரிக்காவின் அசைக்கமுடியாத கோரிக்கையாகும்.

வடகொரியா தனது அணு ஆயுதத் திட்டங்களைக் களைந்தால்

* இருநாடுகளுக்குமிடையிலான பரஸ்பர உறவுகளை மேம்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும்.
* பாதுகாப்பு உத்தரவாதம் வழங்கப்படும் எனவும்.
* மின்வலு உதவிகள் வழங்கப்படும் என்றும் வாக்குறுதி அளித்தது அமெரிக்கா.

அமெரிக்காவின் ஊதுகுழலான தென்கொரியாவும், வடகொரியா தனது அணுத்திட்டத்தைக் கைவிடுமானால் தனது நாட்டில் உற்பத்தியாகும் மின்சாரத்துக்குச் சமனான அளவு மின்சாரத்தை அதற்கு வழங்குவதாக வாக்குறுதி அளித்திருந்தது.

### வடகொரியாவின் நிபந்தனைகள்

ஆனால் இவை எதையும் வடகொரியா காதில் போட்டுக் கொள்ளவில்லை.

அது தனது அணு ஆயுத திட்டங்களை கைவிடவேண்டுமானால் அமெரிக்கா, தென்கொரியாவிலிருக்கும் தனது அணு ஆயுதங்களை மீளப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்றும் இரு கொரியாக்களும் அணு ஆயுதங்கள் அற்ற பகுதிகளாக ஒரே நேரத்தில் ஆக்கப்படவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டது. அது மட்டுமல்லாமல் எதிர்காலத்தில் தனது அணு ஆயுதத்திட்டங்கள் சமாதான



வடகொரியாவின் அணு ஆயுதத்திட்டம் பற்றிய 6 நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்ளும் பொருட்டு சீனாவின் தலைநகரான பெய்யிங்குக்கு வந்திருந்த பிரதிநிதிகள் மாநாடு கடந்த 23ஆம் திகதி ஆரம்பமானபோது கைகளை ஒன்றாக இணைத்துத் தமது நட்புறவை வெளிப்படுத்தினர். இருவாரகாலம் நடைபெற்ற இந்த மாநாடு முடிவு ஏதும் எட்டப்படாமல் ஆகஸ்ட் 29 ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நோக்கத்துக்காகவே மேற்கொள்ளப்படும் எனவும் கூறியது. அத்துடன் இந்த மாநாட்டில் கலந்து கொண்ட ஏனைய நாடுகளான தென்கொரியா, அமெரிக்கா, சீனா, யப்பான், ரஷ்யா ஆகிய நாடுகள் கூட்டாக தனக்கு நட்ட ஈடு வழங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டது.

இவ்வாறு இரு நாடுகளுக்கும் நெருங்கி வர முடியாத அளவுக்கு கருத்து வேற்றுமை நிலவியதால் கூட்டறிக்கை ஒன்றை வெற்றி கரமாகத் தயாரித்து வெளியிடமுடியாத நிலை அங்கத்துவ நாடுகளுக்கு ஏற்பட்டதைத் தொடர்ந்தே இந்த மாநாடு ஆகஸ்ட் 29 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## வடகொரியாவுக்கு மட்டும் அழுத்தம் ஏன்?

இன்றைய உலகில் வடகொரியா மட்டும் தானா அணு ஆயுத உற்பத்தியில் ஈடுபடுகின்றது. அணு ஆயுத தயாரிப்பை நிறுத்துமாறு வடகொரியாவை கோரி இந்த மாநாட்டில் பங்கு பற்றிய அமெரிக்கா, சீனா, ரஷ்யா ஆகிய நாடுகளிடம் அணு ஆயுதங்கள் இல்லையா?

இந்த 21ஆம் நூற்றாண்டு முடிவடையும் போது 40க்கு மேற்பட்ட நாடுகள் அணு ஆயுத வலிமையைப் பெற்றிருக்குமென மதிப்பீட்டு அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

அப்படியானால் வடகொரியாவுக்கு மட்டும் ஏன் இந்த அழுத்தம் என்று இன்னொரு கேள்வியும் இங்கே இயல்பாகவே எழுகின்றது.

## பின்னணி

இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் வடகொரியா - தென்கொரியா என கொரியா இரண்டாகத் துண்டாடப்பட்டது. வடகொரியா கம்யூனிச நாடாகவும், தென்கொரியா அமெரிக்க ஆதரவுள்ள நாடாகவும் இப்போது உள்ளன. 1950 - 1953 வரை தென் கொரியாவை தனது கட்டுப்பாட்டில் கொண்டுவர வடகொரியா நடத்திய யுத்தம் தோல்வியில் முடிவடைந்ததோடு அமெரிக்கப் படைகள் தொடர்ந்து தென்கொரியாவில் நிலைகொள்ளவும் இது வழிகோலியது.

வடகொரியாவுக்கு, அமெரிக்கா தன்னை ஒரு நாள் தாக்கும் என்ற பயம் பீடித்துள்ளது. அதுபோல் அமெரிக்காவும் வடகொரியாவின் அணு ஆயுத பலம் தனது நட்பு நாடான தென்கொரியாவுக்கு ஆபத்தாக முடியும் என நினைக்கிறது. இந்தப் பயத்தின் அடிப்படையில் தான் இந்தப் பேச்சுவார்த்தைகள் முறிவடைகின்றன.

வடகொரியா அணு ஆயுத உற்பத்தியில் ஈடுபடுவது 1994இல் அது அமெரிக்காவுடன் செய்து கொண்ட அணு ஆயுத தவிர்ப்பு ஒப்பந்தத்தை மீறுவதாக அமைந்துள்ளது. தனது அணு ஆயுத உற்பத்தியை வட கொரியா முதலில் நிறுத்தி பின்னர் முற்றாகக் கை விட வேண்டும் என்று அந்த ஒப்பந்தம் கூறுகிறது.

ஆனால் வடகொரியா பற்றி இறுதியாக வெளியிடப்பட்ட அமெரிக்க புலனாய்வு அறிக்கை வடகொரியாவிடம் குறைந்தது 10 அணு குண்டுகளாவது இருக்க வேண்டுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

2003 ஆம் ஆண்டு சர்வதேச அணுசக்தி முகவர் நிலையத்தைச் சேர்ந்த கண்காணிப்பாளர்களை தனது நாட்டிலிருந்து வெளியேற்றி வடகொரியா

**உலக அரங்கில் இவ் வாரம் -மூர்த்தி-**

2004 ஆம் ஆண்டில் தனது அணு ஆயுதத்திட்டம் சம்பந்தமாக நடைபெற்றுவந்த மாநாடு ஒன்றிலிருந்தும் வெளியேறியது.

அன்றிலிருந்து இந்த மாநாட்டை மீண்டும் கூட்டி, வடகொரியாவை அதனது அணு ஆயுதத்திட்டத்தை கைவிடச் செய்வதற்கான இராஜதந்திர முயற்சிகளில் அமெரிக்கா பல கோணங்களில் முயற்சி செய்து வந்ததன் விளைவே கடந்த ஜூலை மாதம் 26 ஆம் திகதி ஆரம்பித்து இப்போது முடிவு எதுவும் எட்டப்படாமல் முடிவுற்றுள்ள இந்த மாநாடாகும்.

## இறுதி முடிவு

இந்த மாநாடு இடை நிறுத்தப்பட்டமை, அதில் கலந்து கொண்ட பிரதிநிதிகள் தமது நாடுகளுக்குத் திரும்பிச் சென்று ஆலோசனைகளை மேற்கொள்ள வசதி அளிக்கும் என்று சீனாவின் பிரதான பேச்சாளரான வூடவேய் தெரிவித்தார்.

கூட்டறிக்கை ஒன்றை வெளியிடுவதில் நாம் எப்போது வெற்றி காண்போம் என்று என்னால் நிச்சயமாகக் கூற முடியாது. அதுபோல உடன்பாடொன்றை எட்டுவதில் நாம் வெற்றிகாண்போம் என்றும் சொல்ல முடியாது. ஆனால், என்றோ ஒரு நாள் நாம் உடன்பாடு ஒன்றைக் காண்போம் என்று அவர் கூறியிருக்கிறார்.

அமெரிக்கா இதுபற்றிக் கருத்து வெளியிட மறுத்துவிட்டது.

இதற்கு முன்னர் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளும் தோல்வியிலேயே முடிவடைந்துள்ளன. ஆனால் நான்காவது தடவையாக நடைபெற்ற இந்த மாநாடு மிக நீண்ட காலம் - சுமார் இரு வாரங்கள் நடைபெற்ற பின்னர் முடிவேதும் எட்டப்படாமலே ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

**மாநாட்டின் நாயகர்களான அமெரிக்காவும் - வடகொரியாவும் தமது நிலைப்பாடுகளில் இருந்து கீழிறங்கி வந்தாலன்றி வெற்றிக் கனியைப் பறிப்பது கஷ்டமாகத்தான் இருக்கும்.**


சுடர் ஒளி

MILITAR STR. 84
8004 ZURICH
SWITZERLAND
Telephone - 0041-043 3179137

# அரசியல் வம்பு தும்பு

அம்பி



## ஏட்டிக்குப் போட்டி

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பிலான செயற்பாடுகள் இருபிரதான கட்சிகளாலும் பரபரப்பாக ஆரம்பிக்கப்படுள்ள நிலையில், இந்த பிரசாரம் தொடர்பில், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்குள் போட்டி நிலைமை உருவாகியுள்ளதாம்.

அண்மையில் ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டி ஒன்றில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் படம் மட்டும் இருந்தமை அனுரா பண்டாரநாயக்காவுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியிருக்கிறதாம். ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தை கூட்டாக மேற்கொள்வதற்கு, முன்னர் உடன்பாடு காணப்பட்ட போதும் மஹிந்த தனியே பிரசாரத்தை மேற்கொள்ள ஆரம்பித்திருப்பது பற்றி தனது எரிச்சலை கட்சிக்காரர்களிடம் அள்ளிக்கொட்டிக் கொண்டிருக்கிறாராம் அனுரா.

மஹிந்தவுக்கு சரியான பாடமொன்றை கற்பிப்பதற்காக லட்சக்கணக்கான சுவரொட்டிகளை தனது படத்துடன் மட்டும் அச்சிட்டுள்ளாராம் அனுரா. கட்சியின் 54ஆம் வருட நிறைவு மாநாடு அடுத்த மாதம் நடைபெறவுள்ளதால் அன்றைய தினம் தமது சுவரொட்டிகளை ஒட்ட அனுரா தயாராகிவருகிறாராம்.

## ஐ.தே.கவில் வெட்டப்பட்டவர்கள்

ஐக்கிய தேசியக் கட்சிக்கு பெருத்தொகை நிதியை செலவழித்து கட்சிக்கு கடந்த காலங்களில் பேராதரவை வழங்கிவந்த முன்னாள் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் திலங்க சுமதிபால தற்போது ஆளுங்கட்சிப் பக்கம் சாய்ந்துள்ளாராம்.

அவிசாவளை அல்லது அனுராதபுரம் மாவட்ட அமைப்பாளர் பதவியை தருமாறு திலங்க விடுத்த கோரிக்கையை ஐ.தே.க தலைவர் நிராகரித்துவிட்டமைதான் இதற்குக் காரணமாம். ஜனாதிபதித் தேர்தலில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் சுவரொட்டிகளை அச்சிடும் முழுப்பொறுப்பையும் திலங்க ஏற்றுள்ளாராம். அதேபோல் அவருக்குச் சொந்தமான சிங்களப் பத்திரிகையினூடாக முழுமையான ஆதரவு வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளதாம்.

பிரதமர் மஹிந்த ஜனாதிபதித் தேர்லில் வெற்றிபெற்றால் தேசியப்பட்டியல் மூலம் நாடாளுமன்றம் செல்வதற்கு திலங்கவுக்கு வாய்ப்பளிக்கப்படுமென உறுதியளிக்கப்பட்டுள்ளதாம். ஐ.தே.க விலிருந்து வெட்டப்பட்டவர்களுக்கு இவ்வாறு மதிப்பு வழங்கப்படுவதன் பின்னணியில் பல காரணங்கள் உள்ளனவாம்.

## அரவணைக்கும் முயற்சி

ஐ.தே.கவின் அதிருப்தியாளர்களாக கருதப்படும் பிரமுகர்களை அரவணைத்துக் கொள்ளும் முழுமுச்சான செயற்பாட்டில் அலரிமாளிகையின் குழு ஒன்று இறங்கியிருக்கிறதாம்.

இதற்கமைய ஐ.தே.கவின் வாக்குவங்கி பலமாக உள்ள இடங்களின் மாவட்ட அமைப்பாளர்களுக்கு மறைமுகமாக மூளைச்சலவை செய்யப்படுகிறதாம். தற்போதைய களநிலைவரப்படி மஹிந்த ராஜபக்ஷவே ஜனாதிபதியாக வருவாரென்றும், அவருக்கு ஆதரவளித்தால் பல சலுகைகள் கிடைக்குமென்றும் வாக்குறுதிகள் வழங்கப்படுகிறாம்.

ஐ.தே.கவின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன, முன்னாள் மாகாண சபை உறுப்பினர் அஜித் நிவாட் கப்ரால், முன்னாள் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் திலங்க ஆகியோருடன் இது தொடர்பில் நடத்திய பேச்சுக்கள் வெற்றியைத் தந்துள்ளனவாம் பலே... பலே...

## தடுமாற்றம்

ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்ற விடயத்தில் தடுமாறிப் போயிருக்கிறதாம் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைமை.

அண்மையில் ஜனாதிபதியை இ.தொ.க. தலைமை சந்தித்தபோது ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான இ.தொ.காவின் நிலைப்பாட்டை சந்திரிக்கா வினவினாராம். அப்போது பதில் கூறாமல் மழுப்பி விட்டாராம் ஜூனியர் தொண்டா. அதேபோல் ஐ.தே.க தலைவர் ரணிலை தொண்டா சந்தித்தபோது அவரும் இ.தொ.காவின் நிலை குறித்து கேட்டாராம். இதன்போது புன்னகையுடன் நிறுத்திக் கொண்டாராம் ஜூனியர் தொண்டா.

எது எவ்வாறிருப்பினும் ஜனாதிபதித் தேர்தலில் இ.தொ.கா ரணிலை ஆதரிப்பது உறுதி என்று அக்கட்சி வட்டாரங்கள் கூறுகின்றன. இ.தொ.கா. விரும்பாவிட்டாலும் மலையக மக்கள் யானைக்குப் புள்ளடியிட்டுப் பழகியவர்களென்பதால் மக்களுக்கு ஏற்றவாறு இ.தொ.கா தன்னை மாற்றிக் கொண்டுவிட்டதாம்.

ஆனாலும் சில விடயங்களுக்கு சந்திரிக்காவின் அனுசரணையைப் பெறவேண்டியிருப்பதால் இன்னமும் தடுமாறிக்கொண்டிருக்கிறாராம் ஜூனியர் தொண்டா.

## முன்னணிக்குள் முன்னணி

மலையகத்தின் முன்னணி என்று கூறிக் கொள்ளும் கட்சிக்குள் களேபரம் ஏற்பட்டது நாம் அனைவரும் அறிந்ததே. இந்த களேபரத்தின் முக்கியஸ்தர்களான கட்சிக்குள் ஓரங்கட்டப்பட்டவர்கள் தனியே குரல்கொடுக்க முயற்சி எடுத்து வருகிறார்களாம்.

இந்த முன்னணியின் தலைமை, உள்நாட்டில் இருப்பதைவிட வெளிநாட்டில் அதிகமாக இருப்பதால் கட்சிக்குள் இருக்கும் இளந்தலைமைகள் கொதித்துப்போயுள்ளனவாம். இவ்வாறான இள ரத்தங்களை அடையாளம் கண்டுகொண்ட மலையகத்தின் முக்கிய அமைச்சரொருவர் அவர்களை கட்சிக்குள் இருந்து வெளியே எடுத்து மூன்றாவது சக்தியொன்றை உருவாக்கிவிட முயற்சிக்கிறாராம்.

இதற்கமைய இந்த முன்னணியின் இரு உறுப்பினர்களை அரவணைத்துக் கொள்வதற்கான பேரம் உயர்மட்டத்தில் பேசபடுகிறதாம். இதன் எதிரொலியாக மலையக சந்திரனின் வெளிச்சம் குறையப்போகிறது என்கின்றனர் ஆய்வாளர்கள்.

## சொற்சிலம்பம் போட்டி இல. 173

சொற்சிலம்பம் 173 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பிவைக்கவேண்டிய கடைசித்தினம் ஆகஸ்ட் 20ஆம் திகதி ஆகும். விடைகள் ஆகஸ்ட் 28ஆம் ஆம் திகதி சுடர் ஒளியிலும், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் செப்டெம்பர் 04ஆம் திகதி சுடர் ஒளியிலும் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.171க்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும், இரண்டாவது பரிசாக 150ரூபாவும், மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும்.பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.


**அனுப்ப வேண்டிய முகவரி:**

'சுடர் ஒளி'

85,ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,

கொழும்பு–14.

## சொற்சிலம்பம் போட்டி இல. 173



## சொற்சிலம்பம் போட்டி இல.171

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 அ | ரு | 2 ம | 3 தி | ■ | 4 து | ம் | 5 பு |
| ஞ் | ■ | 6 க | ண | வா | ன் | ■ | ர |
| 7 சா | 8 க | ர | ம் | ■ | 9 ப | 10 ச | ளி |
| 11 மை | ய | ம் | ■ | 12 அ | ம் | மி | ■ |
| ■ | வ | ■ | 13 செ | டி | ■ | 14 பா | 15 சி |
| 16 அ | ன் | 17 ப | ன் | ■ | 18 க | டு | ம் |
| ம் | ■ | 19 க | னி | 20 த | ல் | ■ | ம |
| 21 பு | ய | ல் | ■ | 22 கா | வி | ய | ம் |

## சொற்சிலம்பம் போட்டி இல.173

### இடமிருந்து வலம்

1. இந்திரலோக அழகி இவளாமே?
4. உபகரணம்.
6. தமிழ் வருடப்பிறப்பு இந்த மாதத்தில்.
8. ஒருங்கு சேர்த்தல்.
10. பாவம் செய்தவன்.
11. தர்க்கம்.
12. தேர் போன்ற வாகனம்.
13. மண் தோன்ற முன் தோன்றியது.
14. பிரேதம்.
15. நம்மைக் குறிப்பிடுவது.
16. காலில் பந்து, கையில் பந்து.
18. உலோகப் பொருளுக்கு மேலே பூசுவதை இப்படி அழைப்பர்.
19. மலை.
20. சிறிய பாத்திரம்.
21. மகள்.

### மேலிருந்து கீழ்

1. தூண்டுதல் செய்.
2. வாழ்தல்.
3. உள்ளம் / அறிவு.
4. எல்லையில் இருப்பது.
5. கேள்வி பதில்.
7. ஓர் அசைச் சொல். மனதில் இருக்கும் தைரியத்தையும் இப்படித்தான் பேச்சு வழக்கில் அழைப்பர்.
9. திருமணம்.
10. பகுதி / நீரின் ஆழத்தை இதிலும் அளவிடுவர்.
12. ஒரு மாற்றுப் பயிர்.
14. அடிப்பது இதனால்.
15. இரண்டும் இரண்டும்.
16. மார்புக்கும் முதுகுக்கும் பக்கத்தே உள்ளது.
17. ஒரு சிறிய புள்.
18. வித்தின் ஆரம்பப் பருவம்.
19. கீழ் அல்ல.

## சொற்சிலம்பம் போட்டி இல. 170


1. **நா.அச்சுதன்**
   **இல 389, திருநகர்,**
   **யோகபுரம்.**
2. **சாருகா செல்வராஜா**
   **57, ஆனந்தன் வடலி ஒழுங்கை,**
   **யாழ்ப்பாணம்.**
3. **திருமதி பா.செல்வராணி**
   **பொது நூலகம்,**
   **சங்கானை.**

## பாராட்டுப் பெறுவோர்

1. கந்தவனம் குருநாதன்
   கோகுல வீதி, கோண்டாவில் வடக்கு,
   கோண்டாவில்.
2. திரு. த.பஞ்சலிங்கம்
   40/2, கலைமகள் வீதி,
   அரியாலை, யாழ்ப்பாணம்.
3. திருமதி ரஞ்சினி சிவஞானம்
   43/1, புகையிரத நிலைய வீதி,
   மட்டக்களப்பு.
4. ம.சத்தியபாலன்
   மயிலனி,
   சுன்னாகம்.
5. த.மேரி தர்ஷினி
   4ஆம் வட்டாரம்,
   முள்ளியவளை.
6. ஆ. அதிரூபசிங்கம்
   அம்மன் கோவிலடி,
   வல்வெட்டித்துறை.
7. திருமதி ராஜினி புண்ணியமூர்த்தி
   இல 36, புகையிர நிலைய வீதி,
   மட்டக்களப்பு.
8. கே. சாமினி
   54/5, கடல் காட்சி வீதி,
   திருகோணமலை.
9. செல்வி.ஆர். இராகிணி
   மே/ப ஆர். திலகம்,
   என்பீல்ட் எஸ்டேட், டிக்கோயா.
10. குவின்ரன் டினேஷ்
    மீசாலை கிழக்கு,
    மீசாலை.

# திருமணத்திற்கு முன்பே கர்ப்பம்!

ஆஸ்திரேலியாவின் முன்னணி டெனிஸ் வீரரும், முன்னாள் விம்பிள்டன் மற்றும் அமெரிக்கப் பகிரங்க டெனிஸ் சம்பியனுமான லெய்டன் ஹெவிட், அவுஸ்திரேலியாவின் பிரபல தொலைக்காட்சி நட்சத்திரமான பெக் கார்ட்ரைட்டை கடந்த மாதம் திருமணம் செய்தார்.



உலகின் முன்னணி டெனிஸ் வீரர்கள் உட்பட பல முக்கிய பிரமுகர்கள் இந்த திருமணத்தில் கலந்துகொண்டனர். ஹெவிட்டும், கார்ரைட்டும் கண்டதுமே காதல் கொள்ளவில்லை. 6 வாரங்கள் 'டேட்டிங்' வைத்துக்கொண்டு ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொண்ட பிறகு காதலிக்கத் தொடங்கினர். மிகவும் நெருக்கமாகப் பழகினர். விளைவு திருமணத்தன்று கர்ப்பிணியாக இருந்தார் கார்ட்ரைட். இந்த வருடக் கடைசியில் அவர்களுக்குக் குழந்தை பிறக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஹெவிட் ஏற்கனவே பெல்லிய டெனிஸ் வீராங்கனை கிம் கிலிஜஸ்டர்ஸுடன் காதல் கொண்டு பிறகு அவரிடமிருந்து பிரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# முன்னாள் அமெ. டெனிஸ் வீரர் சாம்ப்ராஸிற்கு 2ஆவது குழந்தை

அமெரிக்காவின்பிரபலமுன்னாள்டெனிஸ் வீரர் சாம்ப்ராஸ் - பிரிட்கெல் தம்பதியினருக்கு இரண்டாவது ஆண் குழந்தை பிறந்தது.



லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் கடந்த வாரம் இந்தக் குழந்தை பிறந்ததாக 'பீப்பில்' என்ற பத்திரிகை தெரிவித்துள்ளது.

இந்த இரண்டாவது குழந்தைக்கு ரியான் நிக்கோலஸ் எனப் பெயரிடப்பட்டுள்ளதாகவும், இந்தக் குழந்தையின் எடை 2.8 கிலோகிராம் என்றும் அந்தப் பத்திரிகைச் செய்தி தெரிவிக்கின்றது.

2000ஆம் ஆண்டு சாம்ப்ராஸுக்கும், பிரிட்கெல் வில்சனுக்கும் திருமணம் நடைபெற்றது.

இந்தத் தம்பதியினரின் மூத்த மகன் பெயர் கிறிஸ்டியன் (வயது 02).

33 வயதான சாம்ப்ராஸ், டெனிஸ் வாழ்க்கையில் இதுவரை 14 கிராண்ட் ஸ்லாம் பட்டங்களை கைப்பற்றியிருக்கிறார்.

கடந்த ஆண்டு டெனிஸ் போட்டிகளிலிருந்து இவர் ஓய்வுபெற்றார். அமெரிக்காவின் முன்னணி வீரராக இருந்த இவர், டெனிஸில் பல சாதனைகளையும் படைத்தார்.


சாம்ப்ராஸின் மனைவியான பிரிட்கெலுக்கு வயது 31. இவர் 'தி வெடிங் பிலினர்' மற்றும் 'பில்லி மெடிசின்' ஆகிய திரைப் படங்களில் நடித்திருக்கிறார்.

## விளையாட்டுச் செய்திகள்

ஷெனாயா

# புதிய விதிகள் பற்றி கங்குலியின் கருத்து

கிரிக்கெட்டில், ஐ.சி.சி. புதிய விதிகளை அறிமுகப்படுத்தியிருக்கிறது. இந்த விதிகள் பற்றி அணித்தலைவர்கள் நிறையச் சிந்திக்க வேண்டியிருக்கும் என்று டெண்டுல்கர் கருத்து தெரிவித்திருக்கிறார். இந்திய அணியின் தலைவர் கங்குலி இந்தப் புதிய விதிகள் பற்றிக் கூறியதாவது:–




"சச்சின் சொல்வது முழுவதும் சரிதான். இந்த விதிகள் பற்றி அணித்தலைவர்கள் நிறைய சிந்திக்க வேண்டியிருக்கும். இந்த விதிகளில் சில சந்தேகங்கள் உள்ளன.

"உதாரணமாக மைதானத்தில் விளையாடிக் கொண்டிருக்கும்போது எனக்கு ஒரு இடதுகை சுழற்பந்து வீச்சாளர் தேவைப்படுகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போது நான் போட்டிக்காக அறிவிக்கப்பட்ட 12 வீரர்களின் பட்டியலில் இல்லாத ஒரு வீரரை விளையாட அழைக்கலாமா?

"மற்றது 12 பேர் பட்டியலை போட்டி தொடங்கும் முன் கண்டிப்பாக அறிவிக்க வேண்டுமா? இது போன்ற சந்தேகங்கள் பல உள்ளன" - என்றார்.

# கில்கிறிஸ்ட் மீதான பயமும் வியப்பும்!

கிரிக்கெட்டுக்கென்றே வெளிவரும் இங்கிலாந்து இதழான 'தி விஸ்டன்' சமீபத்தில் துடுப்பாட்ட வீரர்கள் பற்றி ஒரு கருத்துக் கணிப்பை நடத்தியது. இதில் மிகவும் இந்தவாக்கெடுப்பில் அபாயகரமான துடுப்பாட்டக்காரராக அவுஸ்திரேலிய விக்கெட் காப்பாளர் அடம் கில்கிறிஸ்ட் தெரிந்தெடுக்கப்பட்டார். லாரா, அப்ரிடி, ஷேவாக், பிலிங்டொங் போன்ற அதிரடி வீரர்களை விட பந்துவீச்சாளர்களுக்கு அதிக பயத்தை ஏற்படுத்துவது கில்கிறிஸ்ட் தான் என்று விஸ்டன் கூறியுள்ளது.



அபாயகரமான – பந்து வீச்சாளர்களை அதிகம் பயமுறுத்தும் துடுப்பாட்ட வீரர் யார் என கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.

நியூசிலாந்தைச் சேர்ந்த வீரர் டேனியல் வெட்டோரி, கில்கிறிஸ்டைப் பற்றிக் கூறும்போது:–

"கில்கிறிஸ்ட் துடுப்பாட்டம் பண்ணும்போது பந்துவீச்சின் மீதான எனது ஆர்வம் குறைந்து விடுகிறது" – என்கிறார்.

தென்னாபிரிக்க பந்து வீச்சாளர் நிதினி– "சில சமயம் கில்கிறிஸ்டின் ஆட்டம் நம்பமுடியாத அளவுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தும். --" என்று கூறுகிறார்.

இவ்வாறு உலகின் முன்னணி பந்து வீச்சாளர்கள் கில்கிறிஸ்ட் பற்றிய தங்கள் பயத்தையும், வியப்பையும் இந்தவாக்கெடுப்பில் வெளிப்படுத்தியுள்ளார்கள்.

பந்துவீச்சாளர்கள் இடையே நடத்தப்பட்ட


# ஆபாசப் படத்தில் நடிக்கிறார் குத்துச்சண்டை வீரர் டைசன்

உலக அதிபார முன்னாள் குத்துச் சண்டை சம்பியன் மைக் டைசன் ஆபாசத் திரைப்படங்களில் நடிக்கமுடிவு செய்திருக்கிறார்.


உலக அதிபாரக் குத்துச்சண்டைப் போட்டிகளில் முன்பு கொடிகட்டிப் பறந்தவர் அமெரிக்காவின் மைக் டைசன். இவர் களம் புகுந்தால் எதிரியை ஓரிரு சுற்றுகளிலேயே வீழ்த்தி 'நொக் அவுட்' செய்துவிடுவார். இப்படி உலகச் சம்பியனாகத் திகழ்ந்தவர் டைசன்.

ஆனால், சமீபகாலமாக அவருக்கு தோல்வி ஏற்பட்டு வருகிறது. யாரிடம் மோதினாலும் தோற்றுப்போகிறார். இதனால் வெறுத்துப்போன டைசன் குத்துச்சண்டைப் போட்டியில் இருந்து ஓய்வுபெறுவதாக கடந்த மாதம் அறிவித்தார். ஆனால் எப்போதும் பரபரப்பாக இருக்க விரும்பும் டைசன் இப்போதும் சும்மா இருக்கவிரும்பவில்லை.

ஆபாசத் திரைப்படங்களில் நடிக்க இவர் முடிவு செய்திருக்கிறார். இதற்காக கோடிக் கணக்கான பணம் வாங்கிக்கொண்டு ஒரு சினிமா கம்பனியுடன் ஒப்பந்தம் செய்து கையெழுத்தும் இட்டுள்ளார். அவருடன் ஜோடியாக புகழ்பெற்ற நடிகை ஜெனா ஜேம்சன் என்பவர் நடிக்கவிருக்கிறார்.



அமெரிக்காவின், நியூயோர்க் நகரின் மெடிசன் சதுக்கத்தில் உள்ளூர் கழகங்களுக்கிடையே கூடைப்பந்தாட்டப் போட்டி ஒன்று கடந்தவாரம் நடைபெற்றது. இதில் 'கனெக்டிகட் சன்ஸ்' அணியின் 7 அடி 2 அங்குலம் உயரமான டைடெக் என்ற வீராங்கனையை 'நியூயோர்க் லிபர்ட்டி' அணியின் பெக்கி ஹேமொன் பந்தை எடுக்க விடாமல் தடுப்பதைப் படத்தில் காணலாம்.



# பல்சுவை கதம்பம்

# ஐயோ! இதென்ன கொடுமை



குழந்தைகளை பாலியல் வன்முறைக்குப் பலியாக்கும் மோசடிக் கும்பல் ஒன்றின் வலைப்பின்னலை பொலிஸார் முறியடித்ததைத் தொடர்ந்து 65 குற்றவாளிகள் மீது வழக்குத் தொடரப்பட்டது. வழக்கின் முடிவில் இவர்களில் 62 பேரைக் குற்றவாளிகளாகக் கண்ட நீதிமன்றம் இவர்களுக்கு 28 ஆண்டுகள்வரை சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

சிறைத்தண்டனை பெற்றவர்களில் அரைப்பங்கினர் பெண்கள். பாலியல் வன்முறைக்குப் பலியான குழந்தைகளின் வயது 14வரை உள்ளதென்றும் ஆறுமாதக் குழந்தையொன்றும் இந்தக் காமுகர்களின் பசிக்கு இரையானதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தமது குழந்தைகளையும், பேரப்பிள்ளைகளையும்கூட இந்தக் கொடியவர்கள் தமது இச்சைக்குப் பலியாக்கி உள்ளதாக வழக்கு விசாரணையின்போது தெரியவந்தது. அத்துடன், இந்தக் குழந்தைகள் மீது நூற்றுக்கும் மேற்பட்ட தடவைகள் பாலியல் வன்முறை பிரயோகிக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

குற்றாவாளிகளில் ஒருவரான வி.பிலிப் என்பவர் மீது, தனது பேத்தியை கற்பழித்ததாக மட்டுமின்றி வேறும் பல குற்றச்செயல்களில் ஈடுபட்டிருந்தார் எனவும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. இவருக்கு நீதிமன்றம் 28 வருட சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

தன்னுடைய மூன்று குழந்தைகள் உட்பட 14 குழந்தைகளைக் கற்பழித்ததற்காக இவரது மகனான பிராங்க் என்பவருக்கு 18 வருடச் சிறைத்தண்டனை வழங்கப்பட்டது.

இவரது மனைவியான பற்றீஷியா மீது தனது மகளைப் பாலியல் வன்முறைக்குட்படுத்தினார் என்றும், குழந்தைகளைப் பாலியல் தேவைகளுக்காக விற்கும்போது அதற்கான பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கான பொருளாளராகச் செயற்பட்டார் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. அவர் 16 வருடங்கள் சிறைக்கம்பி எண்ணவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்.

இந்த விசாரணையில் பங்குபற்றிய ஜூரிகள் 9பேர் குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்குவதுபற்றி ஆராய தனிமையில் ஒன்பது நாட்களைச் செலவிட்டனர். தண்டனை வழங்கும்போது நீதிபதி குற்றவாளிகளில் ஒவ்வொருவருக்கும் அவர்களுக்கு வழங்கப்படும் தண்டனை பற்றி விளக்கம் அளித்தார். இந்த வழக்கில் 65பேர் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தனர். அவர்களில் மூன்று பேரைத்தவிர எஞ்சிய 62 பேருக்கும் 28 வருடங்கள்வரை சிறைத்தண்டனை வழங்கப்பட்டது.

பிரான்ஸ் நாட்டில் இவ்வாறு குழந்தைகள் மீது பாலியல் வன்முறை செய்யப்பட்டிருப்பது தெரியவந்துள்ளமை வரலாற்றில் முதல் தடவை என்றும், அந்நாட்டு அரசாங்கம் இது பற்றி அதிர்ச்சியும் கவலையும் அடைந்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பிரான்ஸில் சிறுவர்களை பாலியல் துஷ்பிரயோகத்துக்குள்ளாக்கும் குற்றச்செயல்கள் அண்மைக்காலமாக அதிகரித்து வருவதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. படிப்பறிவு இல்லாதவர்கள், கல்வி அறிவு குறைந்தோர், வேலைவாய்ப்பின்றி இருப்பவர்கள் ஆகியோரே இத்தகைய பாலியல் வன்முறைகளில் அதிகமாக ஈடுபடுகின்றார்கள் என்றும் பொலிஸ் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

பிரான்ஸ் அரசாங்கம் இத்தகைய குற்றச்செயலைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர இப்போது தீவிர நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது. சுமார் 60 சட்டத்தரணிகள் பாலியல் வன்முறைகளைத் தடுக்கும் முயற்சிகளிலும், குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கும் முயற்சிகளிலும் தம்மை ஈடுபடுத்தியுள்ளனர்.

கடந்த நான்கு மாதங்களில் மட்டும் 31 ஆண்களும், 27 பெண்களும் குழந்தைகள் மீதான பாலியல் துஷ்பிரயோகத்துக்காக குற்றவாளிகளாக இனங்காணப்பட்டுள்ளனர்.

# படுக்கையறைப் பண்பு



படுக்கை அறையில் பெண்கள் எப்படி ஆர்வம் காட்டுகிறார்கள் என்று வெளிநாடுகளில் நடத்தப்பட்ட கருத்துக்கணிப்புகளில் சில சுவாரஸ்யமான தகவல்கள் தெரியவந்தன. இந்தோனேசிய பெண்களில் 80 வீதத்தினர் தினமும் உடலுறவை விரும்புகின்றனர். திருமணமாகி குழந்தைகள் பெற்ற பெண்கள் பெரும்பாலும் காதலர்களைத் தேடுகிறார்களாம். 40 வயதைத் தாண்டிய பெண்கள் வயகரா மாத்திரைகளையும் பயன்படுத்துகிறார்கள். இங்கல்ல வெளிநாடுகளில். சீனப்பெண்கள் இதற்கு முற்றிலும் மாறுபட்டவர்கள். அவர்கள் அதிகம் விரும்புவது படுக்கையை அல்ல. பணத்தைத்தான். நாள் ஒன்றுக்கு 16 மணிநேரம் உழைக்கிறார்கள்.

# தொள தொள பிரஸ்ஸியர்



ஆஸ்திரேலியப் பெண்கள் அணியும் பிரஸ்ஸியர் பற்றி 'கிரு கிரு' ஆய்வொன்று அண்மையில் நடத்தப்பட்டது. ஆஸ்திரேலியப் பெண்களில் அதிகமானோர் சரியான அளவுள்ள பிரஸ்ஸியரை அணிவதில்லை என்று இந்த ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டது. ஆஸ்திரேலிய நுகர்வோர் அமைப்பு, சில பெண்களைத் துணிக்கடைக்கு அனுப்பி பிரஸ்ஸியர் தெரிவு ஒன்றை நடத்தியது. 49 பேர் பிரஸ்ஸியர் தெரிவில் ஈடுபட்டனர். அவர்களில் அநேகமானோருக்கு பிரஸ்ஸியர் சிறியதாகவே இருந்தது. 8 பேருக்கு மட்டும் 'பிரா' சரியாகப் பொருந்தியது. மீதமுள்ளோர் தெரிவு செய்தவை தமது மார்பகங்களுக்கு அளவில்லாத பிரஸ்ஸியர்கள்தான்.

# மார்பகங்களுக்கு காற்றோட்டம் வேண்டுமாம்



ஸ்கார்லட் என்ற இந்த ஹொலிவூட் நடிகை பிரஸ்ஸியர் பற்றிக் கவலைப்படுவதே இல்லை. இவர் மேலாடை மட்டும் அணிவதோடு திருப்திப்பட்டுக் கொள்கிறார். உள்ளாடை அணிவதில்லை.

இயக்குநர் ஒருவர் இவரிடம் பிரஸ்ஸியர் இல்லாமல் நடிக்கமுடியுமா என்று தயக்கத்துடன் கேட்டார்.

நடிகையோ எவ்வித ஆட்சேபனையும் இல்லாமல் 'ஆம்' என்று சொல்லிவிட்டார்.


**உடனடி வெளிநாட்டு வேலை வாய்ப்பு**

Doha, Qatar நாடுகளில் வீட்டுப் பணிப் பெண்களிற்கு வேலை வாய்ப்பு முற்றிலும் இலவசம். மக்களின் நம்பிக்கை வென்ற ஒரே நிறுவனம். இன்றே நாடவும்.

**M.L.M.Lanka Travels**
21-2/1, 9th Lane, Galle Road,
Colombo - 03.
Tel: 0112 556489, Mobile: 0777 739661

App No: AL/1891/Advt/01/05


# பெண்ணினச் சேர்க்கை [லெஸ்பியன்] மாநாடு

பெண்கள் ஏன் பெண்ணினச் சேர்க்கையை நாடுகிறார்கள். ஆண்களிடையே ஓரினச் சேர்க்கை ஏற்படுவது ஏன்? அதுபோல சில பெண்கள் ஆண்களாகவும், ஆண்கள் பெண்களாகவும் மாறுவது ஏன்? இவை பற்றி ஆராய பாங்கொக்கில் அண்மையில் ஒரு மாநாடு நடந்தது. 24 நாடுகளின் சார்பில் 160 ஆராய்ச்சியாளர்கள் வந்திருந்தார்கள். நாங்கள் இவ்வளவு ஆராய்ச்சியாளர்களை எதிர்பார்க்கவில்லையென்று மாநாட்டு அமைப்பாளர் ஒருவர் ஆச்சரியத்துடன் சொன்னார்.



# கூடு விட்டுக் கூடு பாய்கிறது குடும்பம்

கடந்த ஜூலை மாதம் முதலாம் திகதி ராஜகிரியவிலுள்ள ஆடம்பர தொடர்மாடிக் கட்டடத்தில் கழுத்து நெரித்துக்கொலை செய்யப்பட்ட மாடல் அழகி இவோன் ஜோன்சனின் குடும்பத்தவர்கள் நாட்டைவிட்டு வெளியேறி சுவீடனில் குடியேறுவதற்கான தீவிர முயற்சிகளில் இறங்கி இருக்கின்றனர்.

அழகி இவோனின் தந்தையார் ஜோன்சன் சுவீடன் நாட்டவர் என்பதும் இவோனும் அவரது தங்கை கரோலினும் சுவீடன் நாட்டிலேயே பிறந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கொழும்பு மேலதிக நீதிபதி அமாலி றணவீர முன்னிலையில் நடைபெற்றுவரும் இக்கொலை வழக்கு விசாரணையின்போது காலஞ்சென்ற இவோன் ஜோன்சனின் குடும்பத்தின் சார்பில் தோற்றும் வழக்கறிஞர் ஹேமத்த வர்ணகுலசூரிய மேற்குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை மேலதிக நீதிபதியின் கவனத்துக்குக்கொண்டுவந்தார்.

கடந்த ஜூலை மாதம் முதலாம் திகதி 19வயதுடைய அழகி இவோன் ராஜகிரியவிலுள்ள றோயல் பாக் தொடர்மாடிக் கட்டடத்தில் அவரது தங்கையின் காதலனால் சாமர்த்தியமாக கழுத்துநெரித்துக் கொலைசெய்யப்பட்டிருந்தார்.

இந்தக் குடும்பத்தைப் பீடித்துள்ள மன அழுத்தத்திலிருந்து விடுபடுவதற்காகவே நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு அவர்கள் முடிவு செய்ததாகவும் மேலதிக நீதிபதியிடம் தெரிவிக்கப்பட்டது.

"இந்தக் குடும்பத்துக்கு பயமுறுத்தல் கடிதங்களும், விரும்பத்தகாத தொலைபேசி அழைப்புகளும் கிடைத்துவருகின்றன. அதனால் அவர்களது மனோநிலை பாதிக்கப்பட்டிருப்பது மட்டுமின்றி தமது வீட்டுக்குள்ளே சிறைக்கைதிகளாக வாழவேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் ஏற்பட்டுள்ளது. அது மட்டுமல்ல, இவோனின் தங்கை கரோலின் இரவில் பயங்கரக் கனவுகளாலும் பீதிக்குள்ளாகி இருக்கிறார். அவருக்கு வெளி நாட்டில் சிகிச்சை அளிக்கப்பட வேண்டிய அவசியம் எழுந்திருக்கிறது.

சுவீடனின் அரசு இவோனின் மரணம் பற்றி கவலை அடைந்துள்ளது. வெளியுறவு அமைச்சினூடாக இந்த வழக்கு விசாரணையில் அது தலையிடலாம் என எதிர்பார்க்கப்படுகிறது" - இவ்வாறு சட்டத்தரணி வர்ணகுலசூரிய மேலும் தெரிவித்தார்.



இந்தக் கொலை வழக்கின் சந்தேகநபரான 19 வயது நிரம்பிய ஷாமந்த நீதிமன்றத்துக்கு ஊன்றுகோலின் உதவியுடனேயே வந்திருந்தார். சிறைச்சாலை அதிகாரிகள் நீதிமன்றத்தில் வைத்திய அத்தாட்சிப்பத்திரமொன்றைச் சமர்ப்பித்திருந்தனர்.

ஜூலை மாதம் ஆறாம் திகதி அவர் விழுந்ததாகவும் வழக்கு விசாரணையின்போது சமுகமளிப்பதற்கு அவரது உடல்நிலை தடையாக இல்லை எனவும் அந்தப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அவருக்கு உட்காயங்கள் எதுவும் இல்லையெனவும் அதில் வைத்திய அதிகாரி தெரிவித்திருந்தார்.

"இந்த வழக்கை ட்ரயல்-அட்-பார் முறையில் நடத்துமாறு அட்டர்ணி ஜெனரலுக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளதாகவும் வழக்கறிஞர் வர்ணகுலசூரிய நீதிபதியிடம் தெரிவித்தார்.

சந்தேகநபரின் பெற்றோர்கள், வாடகைக்கார் சாரதி உட்பட 14 பேரிடமிருந்து வாக்கு மூலங்கள் பெறப்பட்டிருப்பதாக குற்றப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் அபயசேகரா விசாரணைகளின்போது தெரிவித்தார்.

11 கையடக்கத் தொலைபேசிகளினூடாகச் செய்யப்பட்ட உரையாடல்கள், எப்போது, எவ்விடத்திலிருந்து அந்த அழைப்புகள் பெறப்பட்டன? இவைபோன்ற முழுவிவரங்களையும், குறிப்பிட்ட இரு கையடக்கத் தொலைபேசி நிறுவனங்களிடமிருந்து பெற்று தமக்குச் சமர்ப்பிக்குமாறு இன்ஸ்பெக்டர் அபயசேகராவுக்கு நீதிபதி உத்தரவிட்டார்.


செல்வச் சந்நிதி முருகன் தேரேறும் 18.08.2005ஆம் நந்நாளில்

சந்நிதியான் அருளால் நாட்டில் பூரண அமைதியும், சமாதானமும் நிலவப் பிரார்த்திப்போம்



ஜெனா சிற்பக்கலைக் கூடம்

மணவறைகள், சித்திரத்தேர்கள், வாகனங்கள் முதலியவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதில் இலங்கையின் முன்னணி நிறுவனம்.

* இலண்டன் மாநகரில் உள்ள ஆலயங்களுக்கு 7 தேர்களை 3 வருடத்தில் அமைத்தவர்கள்.

* சித்திரத்தேர் * தங்கத்தேர் * வாகனங்கள்

* முத்துமணவறைகள் * பூமணவறைகள் (Plastic)

பிரதான உற்பத்தியாளர்களும் ஏற்றுமதியாளர்களும்.


JENA HANDICRAFT
284 - 285, MODERA STREET, COLOMBO - 15.
Tel:- 011 - 2522956, 2527820
Mobile:- 0777- 396608
E-mail: s.jeyakanthan@hotmail.com

# ஆண்களுக்கு ஏற்படும் வீரியக் குறைவும் அதற்கான காரணங்களும்

**கே:– வயது 38. திருமணமாகி 13 வருடங்கள். இன்னும் எனக்கு உறவு அனுபவிக்க முடியாமல் இருக்கின்றது. ஆண் உறுப்பு உடலுறவின் போது சோர்ந்துவிடுகிறது. இதனால் குடும்பத்தில் பிரச்சினை. பரிகாரம் தருக.**

ப:– உங்கள் கேள்வியில் விளக்கம் குறைவு. 13 ஆண்டுகளாக நீங்கள் பாதிக்கப்பட்டிருப்பது பற்றி இதுவரை ஏதாவது வைத்தியம் செய்தீர்களா? மருத்துவ ஆலோசனை பெற்றீர்களா? என்பதெல்லாம் குறிப்பிடப்படவில்லை. உங்கள் நோயைத் தற்காலத்தில் ERECTILE DYSFUNCTION அல்லது ED என்று அழைக்கின்றார்கள்.

உடலுறவுக்கு ஏற்றவிதத்தில் ஆண் உறுப்பு விறைப்புப் பெறுவது இல்லாத நிலையே இது. இதற்கு பல காரணங்கள் இருக்கின்றன.



ஆண் உறுப்புக்குச் செல்லும் இரத்தக் குழாய்களில் ஏற்படும் கோளாறுகள் ஒரு காரணம். இவை நீரிழிவு நோய், இரத்தக்குழாய்களில் கொலஸ்திரோல் அடைப்பு நோய் (ATHEROSCLEROSIS) காரணமாகவும் அதேவேளையில் இடுப்பிலிருந்து வெளிவரும் நரம்புகள் பாதிக்கப்பட்டாலும் ஏற்படும்.

விபத்து, சத்திரசிகிச்சை, புரஸ்டேட் சுரப்பு சத்திரசிகிச்சை, அதிகளவு மதுபான பழக்கம், முதுகு தண்டுவட நோய்கள் (SPINAL CORD DISEASES), நீரிழிவு நோயினால் ஏற்படும் நரம்புத் தளர்ச்சி போன்றவை இடுப்பு நரம்புகளை பாதிக்கின்றன. இப்படியான சூழ்நிலைகளிலும் ஆண் உறுப்பின் விறைப்புத்தன்மை பாதிக்கப்படும்.

டெஸ்டோஸ்ரீரோன் (TESTOSTERONE) ஹார்மோன் அளவு உடலில் குறைந்தாலும், மன அழுத்தம், உடல் களைப்பு, சோர்வு என்பனவும் உடலுறவு ஆசையை குறைப்பதால் இந்த நிலை ஏற்பட வாய்ப்புண்டு.

அதி உயர் இரத்த அழுத்த மாத்திரைகள், மனச் சோர்வுக்கு உபயோகிக்கும் மாத்திரைகள், இதய நோய் மாத்திரைகள் கூட இந்த ERECTILE DYSFUNCTION க்கு காரணமாகின்றன.

எனவே ஒரு வைத்தியரிடம் சென்று மேற்குறிப்பிட்ட காரணங்கள் ஏதாவது உமது குறைபாட்டுக்கு காரணமா என்பதை அறிந்து கொள்ளவும்.

SILDENAFIL மாத்திரை (வயாகரா மாத்திரை) அநேகமாக இந்த கோளாறுக்கு உபயோகமாகிறது. இந்த மாத்திரையை எடுத்து 30 – 60 நிமிடநேரத்தில் ஆண் உறுப்பு விறைப்படைந்து 10 தொடக்கம் 30 நிமிடம் வரை நிலைத்து நின்று உடலுறவுக்கு உதவுகிறது. ஆனால் மனதில் ஆசை இல்லாமல் இந்த மாத்திரையை உபயோகித்தால் பலனளிக்காது. இதய நோயுள்ளவர்களுக்கு – குறிப்பாக NITRO GLYCERIN மாத்திரைகளை இதய நோய்க்கு உபயோகிப்பவர்களுக்கு – இந்த வயாகரா மாத்திரை இரத்த அழுத்தத்தை மிகவே குறைப்பதால் – உயிராபத்து ஏற்படலாம்.

**கே:– ஆண். வயது 20. கடந்த மூன்று மாதமாக சிறுநீர் கழித்த பின்னர் – திரும்பவும் சிறுநீர் கழிக்க வேண்டும் போன்ற உணர்வு ஏற்படுகிறது. சிறுநீர்ப்பரிசோதனை செய்து – அதில் பிழை எதுவும் இல்லை என்று முடிவு வந்தது. பரிகாரம் சொல்லவும்.**


ப:– இந்த சிறுநீர் அழற்சிக்கு பல காரணங்கள் உண்டு. அமிலத் தன்மையான உணவுகள் உண்போருக்கு, SPICY உணவுகள் எனப்படும் கறுவா, சாதிக்காய், கராம்பு ஏலம் சேர்த்து தயாரிக்கும் உணவுகள் உண்போருக்கு, உணவில் அதிகளவில் தக்காளி, பசளிக்கீரை சேர்த்து உண்போருக்கு இம்மாதிரியான அழற்சி ஏற்படும்.

இவற்றை இலகுவில் சிறுநீர்ப் பரிசோதனையில் கண்டறிய முடியாது. இதுபோல் சிறுநீரில் சிறுகற்கள் உருவாகும் போது – சிறுநீர் கழித்தவுடன் எரிவும் – சிறுநீர் இன்னும் சிறுநீர் பையில் இருப்பது போன்ற உணர்வும் ஏற்பட வாய்புண்டு.

இது தவிர சிறுநீர்ப்பையின் கழுத்துப் பகுதியில் உள்ள புரஸ்டேட் (PROSTATE) சுரப்பி அழற்சி பெறும்போது இந்நிலை தோன்றலாம். இளம் வளர் பிராயமான இந்த இருபது வயதில் கனவில் விந்து வெளியேறுவது சகஜம். விந்து ஓரளவு அமிலத் தன்மையானது. எனவே இப்படியான நிலைமையில் காலையில் எழுந்ததும் சிறுநீர் அழற்சி ஏற்படுவதுண்டு. இது தவிர அளவுக்கு மீறிய சுயஇன்ப பயிற்சிகளால் புரஸ்டேட் சுரப்புகள் அடிக்கடி – சிறுநீரோடு வெளியேறுவதாலும் இந்த அழற்சி ஏற்படலாம். எனவே நீங்கள் உங்களை இங்கு தரப்பட்ட தரவுகளை வைத்து – சுய பரிசோதனை செய்து காரணத்தைக் கண்டறிந்து, அதனை தவிர்ப்பதன் மூலம் நலம் பெறலாம்.

**கே:– ஆண். வயது 29. மனைவிக்கு வயது 27, திருமணம் செய்து ஒரு மாதம் ஆகிவிட்டது. பல தடவைகள் உடலுறவு கொண்டுள்ளோம். ஆனால், மனைவி இன்னும் கருத்தரிக்கவில்லை. ஆலோசனை கூறவும்.**

ப:– எமது நாட்டில் பால் (SEX) சம்பந்தமான அறிவு, விழிப்புணர்வு என்பவை இளவயதினரிடையேயும், கணவன் – மனைவியரிடையேயும் மிகவும் குறைவு என்று ஆய்வுகள் இங்கு நடைபெற்றபோது காணக் கூடியதாக இருந்தது. அதிலும், தெரிந்திருக்கின்றதென்று இவர்கள் நினைத்திருக்கின்ற பால் சம்பந்தப்பட்ட விடயங்களைக் கூட – இவர்கள் தப்பாகத்தான் விளங்கியிருக்கின்றார்கள் என்பதும் இந்த ஆய்வில் தெரியவந்துள்ளது.



இதே அடிப்படையில் தான் நீங்களும் – உடலுறவு, கர்ப்பம் அடைதல் பற்றி தவறான – தப்பான கருத்துக்களை கொண்டிருக்கின்றீர்கள். உடலுறவு கொள்வதால் நிச்சயம் கர்ப்பம் தரிக்கலாம்என்று எண்ணுவது தவறு. உடலுறவு கொள்ளும் வேளையில் – பெண்ணினது சூலகத்திலிருந்து வெளியேறிய முட்டை பெலோப்பியன் குழாயில் பாதி நீளத்தைக் கடந்து கருப்பையை நோக்கி வந்து கொண்டிருக்கவேண்டும். அந்த வேளையில் உடலுறவின்போது வெளிப்பட்ட விந்தணுக்களில் சில கருப்பையினூடாக – முட்டையை எதிர்நோக்கி – பெலோப்பியன் குழாயினுள் நீச்சலடித்து முன்னேற வேண்டும். இப்படி முன்னேறும் விந்தணுக்களில் – அதிர்ஷ்டசாலியான ஒரு விந்தணு மட்டும் – முட்டையோடு சேர்ந்து கருக்கட்டுகின்றது. கருக்கட்டிய முட்டை பின்னர் – பெலோப்பியன் குழாய் வழியாக கருப்பையை அடைந்து கருப்பையில் கருவாக பதியம் பண்ணப்படுகிறது. இந்த கருதான் பின்னர் சிசுவாக மாற்றமடைகிறது.

இந்த உடலியல் மாற்றங்களை பலர் புரிந்து கொள்வதில்லை. முட்டை வெளிப்படும் முன்னரே – அல்லது வெளிப்பட்ட முட்டை சரியான நேரத்தில் கருக்கட்டப்படாமல் முட்டையாகவே வெளியேறும் நேரத்தில் – பலதடவை உடலுறவு கொண்டு விட்டு – ஐயையோ – பல தடவை உடலுறவு கொண்டும் – கர்ப்பம் தரிக்கவில்லையே என்று கவலைப்படுவது வீண். இதனை – பஸ்வரும் நேரத்தில் பஸ்தரிப்பு நிலையத்தில் நிற்காமல் – கண்ட கண்ட நேரத்தில் காத்திருந்து விட்டு பஸ் இல்லை என்று அழுது புலம்புவதற்கு ஒப்பிடலாம் அல்லவா?

சரி இனி முட்டை கருக்கட்ட ஏதுவான காலஎல்லை – அதாவது கருத்தரிக்கும் காலம் – முட்டை சூலகத்திலிருந்து வெளியேறிய முதல் ஆறு நாட்களும் என்று கணக்கிடப்பட்டிருக்கின்றது. ஒவ்வொரு சூலகமும் – மாதவிலக்கு ஏற்பட 14 நாட்களுக்கு முன்னர் – முட்டையை வெளிப்படுத்துகின்றன. முட்டை 12 மணிநேரமும், விந்தணு 6 நாட்களும் உயிர்வாழக்கூடியன. எனவே, மாதவிலக்கு ஏற்பட 14 நாட்களுக்கு முன்னர் தொடர்ந்து ஆறு நாட்களுக்கு உடலுறவு கொள்வதன் மூலம் – கர்ப்பம் தரிக்கும் சந்தர்ப்பம் அதிகமாக உண்டு. இப்படி நாட்கணக்கினை பின்பற்றுவதைவிட – உடல் வெப்பத்தை அளந்தும் முட்டைவெளியேறும் சரியான நாளை கணக்கிடலாம். முட்டை வெளியேறியதும் உடல் வெப்பம் (BODY TEMPERATURE) கொஞ்சம் அதிகரிக்கும் என்ற அடிப்படையில் தினமும் படுக்கையை விட்டெழுந்ததும், மனைவி ஒரு வெப்பமானி (CLINICAL THERMOMETER) மூலம் – உடல் வெப்பத்தை அளவிடலாம். ஒரு அரை டிகிரி அல்லது ஒரு டிகிரி வெப்பம் அதிகரிக்கும் போது – முட்டை வெளியேறிவிட்டது என்று அறிந்து – அடுத்த ஒரு வாரம் உடலுறவு கொள்வதால் – கருத்தரிக்கும் சந்தர்ப்பம் அதிகமாகின்றது. எனவே தந்துள்ள அறிவுரையை பின்பற்றி – உங்கள் குறிக்கோளில் வெற்றிபெற எனது வாழ்த்துக்கள்!

இலவச மருத்துவ ஆலோசனைகளை
'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார்
டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்
நீங்கள் கேள்விகளை
அனுப்பவேண்டிய முகவரி
இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
85, ஐயந்தமல்லிமாராய்ச்சி மாவத்தை
கொழும்பு – 14

# உளவு பார்க்கும் குட்டிக்கார்

தமிழ்நாட்டில், உள்ள எம்.ஜி.ஆர் என்ஜினியரிங் கல்லூரியில் படித்து பொறியியல் துறையில் பட்டம் பெற்ற நால்வர் உளவு பார்க்கும் குட்டிக் கார் ஒன்றைத் தயாரித்து சாதனை படைத்திருக்கிறார்கள்.

இந்தக் காரின் நிறை 0.9 கிலோகிராம். ரிமோட் மூலம் இந்தகார் இயங்குகின்றது. இருட்டில் நடக்கும் பல விடயங்களை உளவு பார்த்து அறிவிக்கக்கூடியது. இதற்கு அவர்கள் ரிமோட் கன்ட்ரோல் ரெக்கனைசன்ஸ் வெஹிகிள் (Remote Controlled Reconnai ssance vehicle) என்று பெயரிட்டுள்ளனர்.

துப்பறியும்இந்தக் காரை ரிமோட் மூலம் எமது விருப்பம் போல இயக்க முடியும். கார் போகும்இடங்களை அப்படியே தொலைக்காட்சியின் திரையில் பார்க்க முடியும். அதற்காக விசேட கமரா ஒன்று இந்தக் காரிலேயே பொருத்தப்பட்டுள்ளது. அத்துடன் டி.வி.திரையில் பார்த்து கார் போக வேண்டிய இடங்களையும் ரிமோட் மூலம் தெரிவு செய்து அதற்கு உத்தரவு வழங்கமுடியும்.



கார் போற இடம் இருட்டாக இருந்தாலும் அதில் பொருத்தப்பட்டுள்ள கமராவில் படம் பிடிப்பதற்குத் தேவையான வெளிச்ச வசதியும் வழங்கப்பட்டிருக்கிறது. சுமார் 300 மீட்டர் தூரத்துக்குள்இந்தக் கார் இயங்கும்.

மனிதன் போக முடியாத குறுக்கு இடங்களுக்குள்ளே இந்தக் காரை போக வைத்துஉள்ளே உள்ள நிலை என்ன என்பது போன்ற விடயங்களை அறிந்து கொள்ளமுடியும்.

இராணுவ காலாட்படை வீரர்கள், வழியிலே மறைத்து வைக்கப்பட்டிருக்கும் வெடி குண்டுகளைக் கண்டு பிடிப்பதற்கு இந்த ரிமோட் உளவுகார் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

இவ்வாறான துப்பறியும் பணிக்கும், ஆபத்தான இடங்களில் பாதுகாப்பாக செயல்படுவதற்கும்இந்தக் குட்டி வாகனத்தைப் பயன்படுத்த முடியும்.

இந்தக் குட்டிக் காரை அளவில் இன்னும் சிறிதாக்கவும் செல்லும் வழியில் தடைகள் இருந்தால் அவற்றைத் தாண்டிச் சொல்லும் வகையில் அதை மேம்படுத்தவும் இவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

சுடர்ஒளி சிறுகதை

# அறிவு



- நவஜோதி, அகஸ்தியர் -
லண்டன்

''அறிவு, என்ன செய்து கொண்டிருக்கிறாய்?''

''ஏன் என்ன பிரச்சினை?''

அப்ப உனக்கு 'போன்' எடுக்கக்கூடாதோ?

தேவையில்லை என்று சொல்லி அடித்து 'போன்' றிசீவரை வைக்கவேணும்போல் அவனுக்கு இருந்தது. நெஞ்சுக்குள்ள அவனுக்கு இனம் தெரியாத கவலை; யோசனை; எல்லாம் தான். என்ன ஒவ்வொரு நாளும் 'போன்' செய்து இங்குள்ள செய்திகள் சொல்ல வேண்டும் அவளுக்கு. அதுதான் கோபமாக்கும்.

''யாருக்கு 'போன்' எடுத்தனீங்க?'' அவள் கேட்டாள்.

''மனுசிக்குத்தான்.'' அவன் சிரித்தான்.

''இந்தப் பாட்டுக் கேட்டனியோ...?'' பாடியும் காட்டினான்.

''இல்லை. நான் கேட்கவில்லை. எனக்குத் தெரியாது.''

''அது சரி காலநிலை என்ன? நாளைக்கு மழையோ, வெய்யிலோ?'' அவன் கேட்டான்.

''நான் பார்க்கவில்லை. எனக்கு வேற வேலை இல்லையோ உதுகளைப் பார்த்துக் கொண்டிருக்க...''

''அறிவு... அறிவு... வெளிநாட்டில் இருக்கிறவர்கள் கட்டாயம் காலநிலை பார்த்துத்தான் வெளியில் உடுப்புகளைப் போடவேண்டும். பனி என்றால் நல்லாகக் குளிருடை அணியவேண்டும். தொப்பி, கையணி, காலை மூடிய சப்பாத்து என்று உடல் பாரத்தைவிட உடைப்பாரத்தைக் கூட்டவேண்டும். மழை என்றால் அதற்குரிய 'றெயின் கோட்' அல்லது குடையோடு போகவேணும். வெய்யில் என்றால் நீந்துவதற்குப் போவது போலவும் போகலாம், உடைப்பாரத்தைக் குறைத்து எவரும் சட்டை செய்யமாட்டார்கள். உனக்குத் தெரியாதா? வெளிநாடுகளில் 'மூன்று' டபிள்யூக்களை நம்ப முடியாதென்று (Work, Weather, Woman) வேலை, காலநிலை, பொம்பிளை.''

''ஓ... அப்படியோ? அதுதான் கேட்டனீங்களோ! வெளிநாட்டில் இருக்கிற எங்கட நாட்டு ஆக்களைப் பற்றியோ அல்லது வெள்ளையர்களைப் பற்றியோ சொல்லுறீங்க?''

இப்போ கொஞ்சம் 'கோபம்' குறைந்து குளிர்ச்சி போல இருக்கு அவளுக்கு. கதை தொடர்கிறது.

''வெளிநாடுகளுக்கு சென்ற எங்கட சனமும் அவர்களின்ர கலை' கலாசாரத்தைத் தானே பின்பற்றிக்கொண்டிருக்கினம்.'' அவனும் தொடர்ந்தான்.

''எல்லாத்திலுமோ?''

''கிட்டதட்ட எல்லாவற்றிலும் தான். எங்கட சில சனத்திட்டை காசு கூடிப்போய் என்ன செய்கிறதென்று தெரியாமல் திமிர் காட்டுகினம். எமது இனம், உணர்வு, பண்பாடு என்பவற்றை எல்லாம் அழிய விடக்கூடாது. நாங்கள் நாங்களாகவே வாழவேண்டும். நமது முகங்களைத் தொலைக்கக்கூடாது. என்றெல்லாம் ஊடகங்களில் வந்து சொல்லிக்கொண்டிருக்கினம்.''

''அப்போ இங்கே கனக்க ஊடகங்கள் இருக்கோ!''

''அறிவு... அறிவு... நீ அங்கு ஒன்றும் பார்க்கிறதில்லையோ; கேட்கிறதில்லையோ!''

''பார்க்கிறனான், கேட்கிறனான், படிக்கிறனான். ஆனால், பி.பி.சி. செய்திகள் கூடுதலாகப் பார்க்கிறனான். ஈராக்கில் நடைபெறும் பிரச்சினைகளைப் பார்க்க மிகவும் கவலையாக இருக்குது. அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ்ஷின் கொடூரங்கள் தான். தன்ர ஆயுதப்பலத்தை அந்த அப்பாவிகளில காட்டி ஈராக் நாட்டையே அழிச்சுப் போட்டார். இந்த லண்டன் காரனும் சேர்ந்துதான். இவர்களுக்கு என்ன வேலை ஈராக்கில. இன்னும் ஆயுதம் தேடினமோ? ஈராக்கை ஆண்ட 'சதாம் ஹுசேனை'யும் கேவலமான முறையிலே வைத்துப் பிடிச்சுப்போட்டு; அடைச்சு வைச்சுக்கொண்டு, தொடர்ந்தும் சண்டைப் பிடித்து அழித்துக்கொண்டிருக்கிறார்கள். சதாம் ஹுசேனும் சனத்துக்குக் கொடுமைதான் செய்ததாம். அது வேற விடயம். இப்போ அரபுச் சனங்களுக்கு ரோசம் வந்திட்டுது. நல்லாக் குடுக்கிறாங்கள். வேண்டிக்கட்டினம். உங்களுக்குத்தானே உந்தச் செய்திகள்எல்லாம்அத்துபடி சரித்திரப் புத்தகம் மாதிரி தலைக்குள்ளோ அச்சடிச்சு வைத்திருப்பீங்கள்.''

''ஓம். எனக்குத் தெரியும்தான். ஆனால், உனக்கும் இவற்றில் எல்லாம் சரியான ஆர்வம் என்று எனக்குத் தெரியும்.''

''ஸ்பெயின், ஹெண்டூராஸ், டொமினிக்கன் குடியரசு என்பன படைகளை ஈராக்கில் இருந்து வாபஸ்பெற முடிவு எடுத்துள்ளதாம். அதைத் தொடர்ந்து, போலந்துப் படைகளும் விலகிக் கொள்ளப்பட வேண்டும் என போலந்து அரசுக்கு சனங்கள் அழுத்தம் கொடுக்கினமாம். பிரிட்டனும் புதிதாக ஈராக்கிற்கு படைகளை அனுப்பும் வாய்ப்புகள் இல்லையென்று சொல்லிக்கொண்டிருக்கினமாம்.''

''அப்ப, அமெரிக்கா பாடுபெரிய திண்டாட்டம் என்கிறாயோ!''

''உங்களுக்குத் தெரியுமா? சதாம் ஹுசேனுக்கு இந்தியச் சோதிடர் என்ன கூறியிருக்கிறார் என்று?''

''என்னடி அறிவே... எங்கே பார்த்தனி?''

''பேப்பரிலதான். 2005 ஆம் ஆண்டு செவ்வாய் திசை ஆரம்பமாகுதாம்.''

''பிறகு...''

''பிறகென்ன? அதற்குப் பிறகு ஈராக் நாட்டில் எவரும் எதிர்பாராத விதத்தில் ஒரு மாபெரும் மக்கள் புரட்சி ஏற்படுமாம். தீப்பிழம்புகள் மாதிரி எழுகின்ற புரட்சியால இவை அண்ணனும், தம்பியும் ஈராக்கில இருந்து விரட்டப்படுவினமாம்.''

''யாரடி அமெரிக்காவும், இங்கிலாந்துமோ?''

''ஓம். அந்த ஒட்டுண்ணிகள் தான்.''

''பேந்து..?''

''பேந்தென்ன. முன்னைவிட மிக வலுவாக ஈராக் நாட்டு அரியணையில் சதாம் ஹுசேன் மீண்டும் அமர்வாராம். ஏழு ஆண்டுகள் வரை ஈராக்கை ஆள்வாராம். உற்சாகமும், சுதந்திரமும் உயிர் பெறுமாம்.''

''உண்மையாகவா?''

''அப்ப என்ன பொய்யோ சொல்லுறன். பேப்பரில படிச்சனான். அதோட ஆயுள் காலத்தையும் சாத்திரி சொல்லியிருக்கிறார். அப்படியோ!''

''இரண்டாயிரத்து பதினான்காம் ஆண்டு வரை ஆயுளும் உண்டாம்.''

''அதுதான் சரி. பாவம் அந்த ஆளும். நீடூழி வாழ வேண்டும். அப்ப நீ சோதிடத்தை நம்புறனீயோ?''

''அங்கதானே பிரச்சினை. இரண்டாயிரத்து பதினான்காம் ஆண்டுவரை நானும் வாழ்வேனோ தெரியவில்லை. இன்னுமொரு பத்து வருடம் தானே! கட்டாயம் இருப்பேன் என்றுதான் நம்புகிறேன். அதுக்குப் பின்னர் தான் சோதிடம் உண்மையோ, பொய்யோ என்று தீர்மானிப்பேன். இப்போ என்ன ஊடகங்கள் எல்லாம் சோதிடம் பார்க்கிற திலைதான் முன்னுக்கு நிக்கினம். இங்கே ஒரு தொலைக்காட்சியைப் போட்டேன். அதை ஏன் கேட்கிறீங்க? மணித்தியாலக் கணக்கில, அதுவும் இந்தியாவிலிருந்து சாத்திரி அதுவும் பெண் சாத்திரி; கதைத்துக்'கொண்டிருக்கிறா. பெண்கள் என்றால் கொஞ்சம் கவர்ச்சிதானே! வெளிநாடுகளில பரந்து வாழ்கிற எங்கட சனங்கள் சும்மா அடிச்சி விழுந்து 'போன்' செய்து எதிர்காலத்தைப்பற்றி கேட்டுக்கொண்டிருக்கினம்.''

''என்னடி சொல்லுறாய்? இந்த இருபத்தியொராம் நூற்றாண்டில், தொழில்நுட்பங்களும் பெருகிவிட்டுது. உலகமும் மிகவும் சுருங்கிவிட்டுது. நீ இப்ப 'சாத்திரம்' பற்றிய மூட நம்பிக்கையைச் சொல்லிக் கொண்டிருக்கிறாய்.''

''நான் சொல்லவில்லை. இந்த ஊடகங்கள் பற்றிச் சொல்லிக்கொண்டிருக்கிறேன்.''

''முதலாளிகளுக்குத் தமிழை வளர்ப்பதல்ல நோக்கம்.''

''அப்ப என்னடி நோக்கம்..?''

''தமிழைக் கொலை செய்து, வியாபாரம் நடந்தால் போதும். முதலாளிக்கு லாபம் தானே! 'புதிய கலாசாரம்' என்று கொண்டு ஆங்கிலக் கலப்போடு தமிழ் பேசினால் தான் கௌரவம் என்ற தாழ்வு மனப்பான்மையில் சிக்கிக் கொண்டு ஒரு புறம். புதிய புதிய பரிமாணங்களை, தமிழ் இலக்கிய சிந்தனைகளை, தமிழரின் பாரம்பரிய நிலையை, தமிழரின் இன்றைய நிலையை எடுத்துச் சொல்லும் என்றால்... தமிழ்ச் சினிமா நட்சத்திரங்களைப் பேட்டி காண்பதும், சாத்திரமும் பாட்டுமாக இருக்கு. நேற்று ரேடியோ ஒன்றை முறுக்கினேன். அதிலேயும் சாத்திரம்தான் சொல்லிக்கொண்டிருக்கினம். சில விடயங்களுக்கு சாத்திரியார் நேரடியாகச் சந்திக்க வேண்டும் என்று நேயர்களுக்கு தனது வீட்டுத் தொலைபேசி இலக்கத்தைக் கொடுக்கிறார்.''

''என்ன சொல்லுறாய்? சனங்கள் வீட்டுக்குப் போகினமோ?''

''வீட்டுக்குப் போகினமோ? திருவிழா மாதிரி சரியான சனக்கூட்டம். சாத்திரிக்குத் தெரியும்; இப்போ வெளிநாடுகளுக்கு வந்தவர்களை வெளிநாட்டு அரசாங்கங்கள் எப்படியாவது திருப்பி சொந்த நாடுகளுக்கு அனுப்புவதில் தீவிர முயற்சிகள் மேற்கொண்டிருக்கின்றன. கணவர், மனைவி என்பது கூடக் கிடையாது. கர்ப்பிணியாக இருக்கும் மனைவியைவிட்டு, கணவரை நாட்டுக்கு அனுப்பும் மனிதாபிமானமற்ற செயல்கள் கூட லண்டனில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் எத்தனையோ பேர் பயந்து செயலிழந்து வாழ்ந்துக் கொண்டிருக்கிறார்கள். மன ஆறுதலுக்கு யாரிடமாவது ஆறுதல் வார்த்தைகள் கேட்க வேண்டுமே! சாத்திரிமாருக்கு வாய்ச்சுப் போச்சு. சாத்திரம் கேட்க வாறவர்களிடமே தகவல்களைக் கேட்டுவிட்டு, நட்சத்திரங்கள், அந்த ரேகை, இந்த பகவான் என்றுக் கூறி அவர்களிடம் பவுணிலையும், ஈரோவிலையும் வேண்டி அடுக்கிக் கொண்டிருக்க வேண்டியது தானே!''

''என்ன ஏமாத்து வேலை. ஏமாறுவதற்கு ஆட்கள் இருந்தால், ஏமாற்ற வேண்டியது தானே! சரி சொல்லு அறிவே. உனக்கு அந்தச் சாத்திரியைத் தெரியுமோ?''

''ஓம். ஒருநாள் தொலைபேசியில்தான் அழகாகக் கதைத்தார். அவருடைய கருத்துக்கு முரண்பட்ட கருத்தைச் சொல்லிவிட்டேன் என்று நினைக்கிறேன். சாதுரியமாகக் கதையை மாற்றிச் சந்தோஷமாகக் கழன்று விட்டார்.''

''உன்னை யோசிக்கச் சிரிப்புத்தான் வருகுது.''

''ஏன் சிரிப்பு வருகுது உங்களுக்கு? நேருக்கு நேர் எல்லாம் சொல்லுவதாலேயோ? சனங்களின்ர வாழ்வோடு, உணர்வுகளோடு ஒன்றிப்போக வேண்டும். இவைகளோடு சம்பந்தப்படாத சித்தாந்தம் பேசிக்கொண்டிருந்தால் எப்படி?''

''அறிவே என்ன சொல்லுகிறாய்?''

''இங்கே நடக்கிறதைத்தான் சொல்லுகிறேன். ஒரு சாத்திரி இந்த மாதிரி எங்கட சனத்துக்குச் சாத்திரம் சொல்லி இரண்டு வீடும் வாங்கிப்போட்டாராம். நீங்கள் இரவு பகலாய் உடம்பையும், உள்ளத்தையும் வருத்தி எத்தனை வீடுகள் வாங்கிப்போட்டீர்கள்? உங்கட மனைவியும், பிள்ளைகளும் இலங்கையில் கஷ்டப்படுகிறார்கள். நீங்கள் இங்கே அந்தர சீவியம். யாருக்கு விளங்கப்படுத்துகிறது என்று மனதுக்குள்ளே எல்லாம், வில்லங்கப்பட்டு எந்த நேரமும் சும்மா சிரிக்க வேண்டியதுதான். என்ன புரியாதா? உங்களைப்போல இங்கே எத்தனை சனங்கள் அந்தரமான சீவியம் சீவித்துக்கொண்டிருக்கிறார்கள். மன ஆறுதலுக்காக அந்தரிக்கிற வேளையிலே, குறிப்புகளைக் கேட்டுப்பார்க்கிறது. சாத்திரியும் மனம் குளிர நாலு வார்த்தைகள். மனது நிறையுது சனங்களுக்கு. பணம் நிறையுது சாத்திரிக்கு.''

''அறிவு. நீ சொல்லுறது சரிதான். யோசிக்க வேண்டித்தான் இருக்கு.''

''எல்லோரும் யோசிக்கத்தான் வேண்டும். ஊடகங்கள் மிகவும் சக்தி வாய்ந்த சாதனங்கள். உண்மையில், தொலைக்காட்சியை மிகவும் சக்தி வாய்ந்த சாதனமாகக் கொள்ளலாம். காட்சிப் பரிமாணங்கள் இக்கலையை செம்மையாகப் பயன்படுத்துவதன் மூலம் பெருங் கலாசாரப் புரட்சியை உருவாக்கிக் காட்டமுடியும். உன்னதக் கலையையும், உன்னதக்கல்வி அறிவையும், விஞ்ஞான மனோபாவத்தையும், மேலான பழக்கவழக்கங்களையும், ஆரோக்கிய விதிகளையும், மருத்துவ ஞானத்தையும், மனித உறவுகளை மேன்மைப்படுத்தும் பண்புகளையும் உருவாக்கிக் காட்டமுடியும். மனிதனை நேசிப்பவனே வாழ்க்கையை நேசிக்கிறான். மனித நேயம் கொண்டவனே கலைச் சாதனங்களையும் செம்மையாகப் பயன்படுத்த முடியும்.''

''அறிவே... என்ன பெரிய மேடைப் பேச்சு மாதிரி அளக்கிறாய். கருத்துக்கள் நிச்சயம் கூறவேண்டும். சொல்லு... சொல்லு... பணம் முக்கிய அடிப்படைத் தேவையாக இருந்தாலும், சமூகத்தை விழிக்க ஊடகங்கள் பயன்படவேண்டும். பல நிகழ்ச்சிகளை சுவைபடக் கூற வேண்டும்.''

''எல்லாவற்றையும் நாம் குறை கூறிவிட முடியாது. பல ஊடகங்கள் நல்ல நல்ல விடயங்களைச்செய்து வருகின்றன. பாராட்டப்படவும் வேண்டும். ஆனால், ஒரு சில ஊடகங்கள் நாள் முழுதும் சினிமாப் பாட்டுக்கள் தான். ஒரு விஷயம் தெரியுமா?''

''என்னடி?''

''ஏதாவது நல்ல அறிவு பூர்வமான நிகழ்ச்சிகள் போனால் முதலாளி உடனே நிற்பாட்டிப் போடுவார்.''

''அதெப்படியெடி...?''

''உங்களுக்குத் தெரியாதோ! வெளிநாட்டவர்களின் வேலை ஸ்தாபனங்களில் வேலையில் ஏதாவது பிழைகள் விட்டால் அந்த வேலையில் இருந்து நிற்பாட்ட உரிமை இருக்கு. ஆனால், அவகாசம் கொடுத்து, எச்சரிக்கை செய்து, அதாவது மனிதாபிமான முறையில் கடிதங்கள் கொடுத்துத்தான் ஒருவேலையில் இருந்து நிற்பாட்டுவார்கள். அதுவும் சரியான குறைவு. ஆனால், தமிழர்களின் வேலை ஸ்தாபனங்களிலோ உடனடியாக வேலை நிறுத்தம்.''

''அப்படியோ...''

''அப்படித்தான். உடனடி வேலை நிறுத்தம். நாளைக்கு வரத்தேவையில்லை.''

''என்ன லண்டனிலியோ நடக்குது?''

''வேறெங்க கொழும்புக் கதையே சொல்லுறன். லண்டனிலதான்.''

''அப்படி நடக்கிற முதலாளியோ? என்னடி அறிவே. முதலாளிக்குக் காசு இருக்கிற திமிரோ? அவ்வளவு காசு கனக்க இருக்கோ! எப்படி இவ்வளவு பெரிய முதலாளியாக இருக்கிறது?''

''அதுதான் எனக்கும் விளங்கவில்லை. இவர்கள் நேர்மையாக உழைத்துச் சேர்த்த காசுபோல எனக்குப் படவில்லை.''

''அப்போ எப்படியடி பெரிய ஊடகங்களை கட்டணங்களை வசூலிக்காமல் நடத்தமுடிகிறது. ஆச்சரியமாகத்தான் இருக்கு.''

''வெளிநாட்டில திடீரென பணக்காரர்களாக வருவதற்கு பல வழிகள் இருக்கு.''

''அறிந்திருப்பீங்கதானே!''

''அது எப்படி?''

''என்ன இந்தப் பெரிய எழுத்தாளருக்கு இது தெரியவில்லை.''

''சரி, சரி இப்ப விளங்குது.''


''ஒரு விஷயம் தெரியுமா? ஹொலண்டில இருக்கிற எனது மைத்துனருக்கு விஷேட அதிஷ்ட லாபச்சீட்டு விழுந்து விட்டதாம் என்று கேள்வி.''

''எவ்வளவு காசு?''

''அதைக் கேட்காதேயுங்கோ! இலங்கைக் காசுக்கு ஏதோ எக்கச்சக்கமான லட்சமாம்.''

''ஆ... அப்படியே! எமது நாட்டில கஷ்டப்படுகிற சனங்களுக்கு கொஞ்சம் உதவி செய்யலாம் தானே! எவ்வளவு புண்ணியம் செய்ததாகிவிடும்.''

''உங்கட மனம் அப்பிடி மனித நேசத்தில சிந்திக்குது. ஆனால், அவனோ அதற்குப் பிறகு இலங்கையிலிருந்து அவனது சொந்தத் தாய் தகப்பன் தொலைபேசி மூலம் கதைக்க எடுத்தாலும் மறைந்து விடுவானாம். அவனது மனைவிதான் கணவர் பற்றிய விளக்கங்கள் கொடுப்பாவாம்.''



(24 ஆம் பக்கம் பார்க்க)




# அறிவியல் அதிசயம் – 'ரோபோ'

வாழ்க்கை வசதிகளை அதிகப்படுத்திக் கொள்ள மனிதன் உருவாக்கிய கண்டுபிடிப்புகளில் குறிப்பிடத்தக்கது ரோபோ. மனிதனின் தேவை, பயன்பாட்டுக்கு ஏற்றபடி பல்வேறு வகைகளில் வடிவங்களில் ரோபோக்கள் தயாரிக்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. தொழிற்சாலைகள், ஆய்வுப் பணிகள்



மட்டுமன்றி வீட்டுப் பணிகளிலும் ரோபோக்கள் இப்போது ஈடுபடுத்தப்படுகின்றன.

வீட்டைக் காவல் காக்கும் பணி, சுத்தம் செய்யும் பணி, அன்றாட வேலைகளை ஒழுங்குபடுத்தி நமக்கு நினைவுபடுத்தும் பணி, பொழுதுபோக்கு அம்சங்களில் ஈடுபட்டு நம்மை மகிழ்விக்கும் பணி இவ்வாறு பலவித வேலைகளில் ரோபோக்களின் செயற்பாடுகள் நவீன காலத்து மனிதனுக்கு உதவியாக அமைகின்றன.

ரோபோக்களுக்கு செயற்கை புத்திசாலித்தனத்தை (Artificial Intelligence) அளிக்கும் முயற்சிகளும், ஆராய்ச்சிகளும் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இந்த ஆய்வுகளில் விஞ்ஞானிகள் ஓரளவு வெற்றியும் பெற்றுவிட்டனர். செயற்கையாக




சிந்திக்கும் திறனை ரோபோக்கள் முழுமையாகப் பெறும்போது மனித வாழ்க்கை முறையே மாறிவிடும் என்பது விஞ்ஞானிகளின் எதிர்பார்ப்பாக இருக்கிறது. எதிர்வரும் நூற்றாண்டுகளில் சமுதாய மாற்றங்களில் ரோபோக்கள் பெரும் பங்கை வகிக்க இருக்கின்றன.

வீடுகளில் குழந்தை பராமரிப்பு, செல்லப்பிராணிகளைக் கவனித்துக் கொள்ளல், வீடுசுத்தம் செய்தல், கார்களைத் துடைத்தல், தோட்டங்களைத் துப்புரவு செய்தல் போன்ற வேலைகளை எல்லாம் எதிர்காலத்தில் ரோபோக்கள் தான் செய்யப்போகின்றன.

காவல் துறையில் கூட ரோபோக்கள் பணியில் அமர்த்தப்படும். குறிப்பாக இரவுநேர ரோந்துப் பணிகளில் ரோபோ பொலிஸார் அதிகமாக ஈடுபடுத்தப்படுவர். போக்குவரத்தை ஒழுங்குபடுத்தும் பணிகள் போக்குவரத்து விதிமுறைகள் மீறப்படுகின்றனவா எனக் கண்காணிக்கும் பணிகள் போன்றவற்றிலும் ரோபோ பொலிஸார் (Robot Cops) ஈடுபடுத்தப்படுவர்.

தேர்தல் பணிகளிலும் ரோபோக்களின் ஆதிக்கம் மேலோங்கும். வேட்பாளர்களைப் பற்றிய முழு விவரங்களை அவை தெரிந்து வைத்திருப்பதுடன் தேர்தல் சட்டங்களை ஒரு அங்குலம் கூட மீறுவதற்கு அவை இடமளிக்கமாட்டா.

வாக்குரிமை உள்ள அனைத்து வாக்காளர் பற்றிய விபரங்களையும் அவை விரல் நுனியில் வைத்திருப்பதுடன் கள்ளவாக்குப் போடுபவர்களை விரட்டி




அடிக்கும் வல்லமையையும் அவை கொண்டிருக்கும்.

கேட்பதற்கு திரைப்படம் பார்ப்பது போல் இருந்தாலும் இவை எல்லாம் எதிர்காலத்தில் சாத்தியமாகப் போகின்றன.

கணினிகள் அறிமுகப்படுத்தப்பட்ட போது அதைப்பார்ப்பதற்கு மக்கள் கூட்டம் கூட்டமாய் அலை மோதினர். இன்று கணினியும் நாமும் ஒன்றாக இணைந்துவிட்டோம். அதுபோல ரோபோக்களும் எதிர்வரும் நூற்றாண்டுகளில் மிக உன்னதமான மாற்றங்களை ஏற்படுத்தப்போகின்றன.

ரோபோக்களின் பாவனை, வேலையில்லாத் திண்டாட்டத்தை அதிகரிக்குமே என்ற கேள்வியும் எழாமல் இல்லை. கணினிகள் பாவனைக்கு வந்தபோதும் இதே கேள்வி எழுந்தது. ஆனால் நிலைமை இப்போது வேறு மாதிரி அல்லவா இருக்கிறது. கணினித்துறையில் நம்மவர்கள் பலர் அசாத்தியத் திறமைபெற்று விளங்குகின்றார்கள். அதுபோல இயந்திர மனிதர்கள் ரோபோக்களும் பல்வேறு துறைகளில் ஈடுபட்டாலும் எதிர்கால அதிநவீன உலகம் வேலை வாய்ப்புகளை உருவாக்கிக் கொண்டே இருக்கும் என்பதில் ஐயம் இல்லை.

## புகழ் பெற்ற ரோபோக்கள்




R2D2 C-3 Po: இந்த ரகரோபோ, 'ஸ்டார் வாஸ்' (Starwars) என்ற ஆங்கிலப்படத்தில் நடித்தது. கெட்டிக்காரத்தனம், மற்றும் மனிதப் பண்புகளை அது கொண்டிருந்தது.

AIBO: 'சோனி' நிறுவனத்தின் தயாரிப்பு இந்த "ஐபோ ரோபோ!" இது நாய்க்குட்டி வடிவில் தயாரிக்கப்பட்டது. அது, குரைக்கும். வாலை ஆட்டும்.

ASIMO: 'ஹொண்டா' நிறுவனத்தின் தயாரிப்பு இது. மனிதனைப்போல கைகால்களுடன் நடக்கும் திறன் கொண்டது இந்த 'அசிமோ'.

தொழிற்சாலை ரோபோக்கள்: – தொழிற்சாலைகளின் ஒருங்கிணைப்பு பகுதிகளில் இயங்கும் ரோபோக்கள் தொழிற்சாலை ரோபோக்கள் என்று அழைக்கப்படுகின்றன. கார் தயாரிப்பு போன்ற பல்வேறு தயாரிப்பு வேலைகளில் இவை ஈடுபடுத்தப்படுகின்றன.

பட்டில் போட்ஸ்:- ரிமோட் கன்ட்ரோல் மூலம் சண்டைபோடும் இயந்திரவீரன் இவன்.

வெடிபொருட்களை செயல் இழக்கவைக்கும் ரோபோக்கள்: வெடி குண்டுகள், மற்றும் வெடிபொருட்களை கண்டுபிடித்து அவற்றைச் செயலிழக்க வைக்கும் ஆபத்தான பணிகளை இவை செய்யும்.

மார்ஸ் பாத் பைன்டர் (Mars Path Finder) :– விண்வெளி ஆராய்ச்சியிலும் ரோபோக்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. செவ்வாய்க் கிரக ஆராய்ச்சிக்கு நாசா விண்வெளி ஆராய்ச்சி நிலையம் ரோபோக்களைப் பயன்படுத்துகிறது.

HAL 2001:– 'ஸ்பேஸ் ஒடிசி' ஆங்கிலப்படத்தில் இடம் பெற்ற விண்கலத்தில் இந்த ரோபோ பயன்படுத்தப்பட்டது.

ரோபோ மோவர் (Robot Mover) புல்வெட்டும் ரோபோ. இது போன்று பல்வேறு வகையான ரோபோக்கள் மனிதர்களை சந்தோஷப்படுத்தவும் அவர்களின் பல்வேறு பணிகளை நிறைவேற்றவும் பயன்படுத்தப்படுகின்றன.



# ஐதரசன் மோட்டார் சைக்கிள்

சான் பிரான்சிஸ்கோ, கலிபோர்ணியாவில் தயாரிக்கப்பட்டு விற்பனைக்குத் தயார் நிலையில் உள்ள ஐதரசனால் (Hydrosen) இயங்கும் மோட்டார் சைக்கிள் ஒன்றையே இங்கு காண்கிறீர்கள். மணிக்கு 80 கி.மீ. வேகத்தில் செல்லும் இந்த மோட்டார் சைக்கிள் ஓடும் போது புகைக்குப் பதிலாக நீராவியையே வெளியேதள்ளும். 2006ஆம் ஆண்டு இது விற்பனைக்கு விடப்படும் என்று தயாரிப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.



# தகவல் துளிகள்

* பிசுபிக் கடலைக் காட்டிலும் அத்லாண்டிக் கடலின் உப்பச் சுவை பல மடங்கு அதிகம்!

* ஒவ்வொரு 24 மணி நேரத்திலும் எமது இதயம் சுத்திகரிக்கும் இரத்தத்தின் அளவு 2 ஆயிரம் கலன்.

* அமெரிக்காவின் லாஸ்வேகாஸ் நகரில்தான் உலகிலேயே மிக அதிகமான ஹோட்டல் அறைகள் உள்ளன!

* பிரபல 'சோனி' மின்னணு நிறுவனம் முதன் முதல் உருவாக்கிய கருவி – பிரஷர் குக்கர்!

* மெக்சிக்கோ நகரம் ஒவ்வொரு ஆண்டும் 18 அங்குலம் பூமிக்கடியில் புதையுண்டு வருகிறது!

* தற்போது 100 வயதுக்கு மேல்வாழும் மக்களில் பெண்களே அதிகம்!

*குழந்தைகள் தினசரி சுமார் 400 முறை சிரிக்கின்றனர்; பெரியவர்கள் 15 முறையே சிரிக்கின்றனர்.

* சுமார் 50 ஆண்டுகளுக்குப் பிறகு, தற்போது மகளிருக்கு வாக்காளர் உரிமை வழங்கியுள்ள நாடு குவைத்!

* மிக அதிக அளவிலான குகைக் கோயில்கள் / சிற்பங்கள் உள்ள இந்திய மாநிலம் மகாராஷ்டிரா!




# தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக மீண்டும் வாசன்

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக மீண்டும் ஜி.கே.வாசன் காங்கிரஸ் தலைமையால் நியமிக்கப்பட்டுள்ளார்.

காங்கிரஸ் கட்சியின் உட்கட்சித் தேர்தல்கள் அண்மைக்காலமாக நடைபெற்று வந்தன. கட்சித் தலைவராக சோனியா மட்டும் போட்டியிட்டதால், அவர் போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டார்.

எனினும், பல மாநிலங்களில் கட்சித் தலைவர்களும், மாநில காங்கிரஸ் கமிட்டியும் தலைமையால் நியமிக்கப்பட்டுவிட்டன. அனேகமாக எல்லா மாநிலங்களுக்குமே நியமனங்கள் முடிந்து விட்டன.

தமிழ்நாட்டில் மட்டும் பிக்கல், பிடுங்கல் காரணமாக நியமனங்கள் தாமதிக்கப்பட்டுவந்தன.

உட்கட்சிச் சண்டைக்குப் பேர் போன தமிழ்நாடு காங்கிரஸுக்குள், ஒரே ஒரு விஷயத்தில்மட்டும் ஒற்றுமை உண்டு. அது தான் பதவியிலுள்ள தலைவரை அகற்ற மட்டும் சகலரும் ஒன்றுசேர்வார்கள். ஆனால் புதிதாக உங்களுக்கு யார் தலைவராக வேண்டும் என்று கேட்டால் ஒன்று பட்டு ஒருவரைப்பிரேரிக்க அவர்களால் முடியாது. இது பலகாலமாக தமிழக காங்கிரஸ் தலைவர்களுக்கு உள்ள நோய் ஆகும்.

### வாசனுக்கு சோனியா ஆதரவு

அந்த வகையில் பதவியில் இருந்து வந்த வாசனை அகற்ற பல்வேறு குழுக்களும் முயன்று வந்தன. மத்திய இணை அமைச்சரும் முன்னாள் தமிழக காங்கிரஸ் தலைவருமான இளங்கோவன் குழு ஒரு புறம், முன்னாள் தலைவர்களான திண்டிவனம் ராமமூர்த்தி, கே.வி.தங்கபாலு, குமரி.ஆனந்தன் ஆகியோரின் குழுக்கள் இன்னொரு புறம் என்று பெரும் அடிபிடி சண்டை நடக்காத குறை தமிழக காங்கிரஸ் தலைவர் பதவிக்கு.

முதுபெரும் தலைவரான மூப்பனாரின் மகனான வாசனுக்கு சோனியா காந்தியின் பலத்த செல்வாக்கு உண்டு. எனினும் அவர் பதவியில் இருந்து தூக்கப்படுவார் என்கிற தோரணையில் அவரது எதிரிகள் பேசி வந்தனர். வாசன் அவ்வாறு நியமிக்கப்பட்டால் அவர் மத்திய அமைச்சராக நியமிக்கப்படலாம் என்ற பலமான ஊகமும் இருந்து வந்தது.




அவையெல்லாவற்றுக்கும் முற்றுப் புள்ளி வைக்கும் வகையில் சோனியா காந்தி வாசனையே மீண்டும் நியமித்துள்ளார். இது அவருக்கு எதிரான குழுக்களுக்கு பலத்த ஏமாற்றமே. எனினும், தலைமையின் முடிவு அடுத்த ஆண்டு சட்டசபைத் தேர்தல்களை முன்னிட்டதே என்று தோன்றுகிறது. இன்னும் 10 மாதகாலத்தில் தேர்தல் வரவுள்ள நிலையில் தி.மு.க கூட்டணியில் நிலைத்து நின்று பேரம் பேசி தற்போதுள்ள 30 எம்.எல். ஏக்களுக்கு அதிகமான எம்.எல்.ஏக்களை பெறும் வகையில் செயற்பட வலுவான ஒருவர் தமிழக காங்கிரஸ் தலைவராக இருக்க வேண்டுமென சோனியா தீர்மானித்துள்ளார். இந்த நேரத்தில் குட்டையைக் குழப்புவது போல் தலைமையை மாற்றுவது புத்திசாலித்தனமல்ல.

அண்மையில் ஜெயலலிதாவை புகழ்ந்து பேசிய கட்சியின் எம்.எல்.ஏ.விநாயகமூர்த்தியையும் கட்சித் தலைமை கண்டித்துள்ளது. வாசனுக்கு இது திருப்தி தரும் விடயமாகும். தி.மு.க. உள்ளிட்ட தோழமைக் கட்சிகளுடன் வாசன் நல்ல உறவைக் கொண்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

### 'ஜெ.'மீதான வழக்கு

இதற்கிடையில் முதல்வர் ஜெயலலிதாவுக்கு எதிராக பெங்களூரில் நடக்கும் இரண்டு வழக்குகளை ஒன்று சேர்க்க அந்த நீதிமன்றம் அனுமதித்ததற்கு உச்சநீதிமன்றம் இடைக்காலத்தடை விதித்துள்ளது.

வருமானத்துக்கு அதிகமாக சொத்துச் சேர்த்த வழக்கு கிட்டத்தட்ட முடியும் தறுவாயிலுள்ளது. இந்தநிலையில் லண்டனில் ஹோட்டல் வாங்கியது குறித்த வழக்கையும் இதனுடன் சேர்த்து நடத்த 'ஜெ'தரப்புக் கோரியது. அதனை நீதிமன்றம் அனுமதித்திருந்தது. இரு வழக்குகளும் ஒன்றாக விசாரிக்கப்படுமானால் புதிதாக அதற்கு குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யவேண்டுமென ஜெயலலிதா புதுக்கோரிக்கை விடவே நீதிமன்றம் தடுமாறுகிறது.

ஏனெனில் விசாரணை முடியும் நிலையிலுள்ள முதல் வழக்கை திரும்பவும் முதலில் இருந்து ஆரம்பிப்பது என்பது தீர்ப்பை தாமதப்படுத்தும் உத்தியே. தேர்தல் வரவுள்ள நிலையில் தீர்ப்பு வந்தால் ஆபத்து என்று கருதியே 'ஜெ'தரப்பு இந்தத் தந்திரத்தைக் கையாண்டது.

எனினும் இரு வழக்குகளையும் சேர்க்கக்கூடாது என்று தி.மு.க.பொதுச் செயலர் உச்சநீதிமன்றில் தொடர்ந்த வழக்கில் அவரது கோரிக்கையை அங்கீகரித்து அதாவது, இரு வழக்குகளையும் சேர்க்கக் கூடாதென உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. சட்டத்தையே புரட்டும் ஜெயலலிதாவின் முயற்சி இதனால் பிசுபிசுத்துப் போயுள்ளது.

### மகளிருக்கு இட ஒதுக்கீடு

இது இவ்வாறிருக்க மகளிருக்கு நாடாளுமன்றத்தில் இட ஒதுக்கீடு செய்யும் சட்டமூலம் லோக்சபாவில் இந்தக் கூட்டத் தொடரில் நிறைவேறாதோ என்று அச்சம் ஏற்பட்டுள்ளது.

பல ஆண் அரசியல் வாதிகள் குறிப்பாக காங்கிரஸினுள் இருப்பவர்கள் தமது ஆதிக்கம் பறிபோய்விடுமோ என்று அஞ்சுவதே இதற்குக் காரணமாகும். இதனால் லோக்சபாவின் ஆசன எண்ணிக்கையை 543 இலிருந்து 800 ஆக உயர்த்தியபின் இந்த ஒதுக்கீட்டை கொண்டுவரலாம் என காங்கிரஸ் யோசனை தெரிவித்துள்ளது.

எனினும் இதனை பி.ஜே.பி. இடது சாரி உள்ளிட்ட பலரும் எதிர்க்கின்றனர். ஆக வருடக்கணக்கில் இழுபடும் இந்த மசோதா இன்னும் இழுபடத்தான் போகிறது. பாரத சமுகத்தில் பெண்களின் நிலை ஆணாதிக்கத்துக்கு உட்பட்டதே என மகளிர் அமைப்புகள் பலவும் விசனம் தெரிவிக்கின்றன.

-எஸ்.சுரேந்திரஜித்-

# அறிவு...

(21 ஆம் பக்கத் தொடர்ச்சி)

''அடப் பாவி. ஏன் இப்படிச் செய்கிறான்? தாய், தகப்பன்தானே கஷ்டப்பட்டு வெளிநாட்டுக்கு அனுப்பி வைச்சிருப்பினம்.''

''உங்களுக்கு எங்கட சனங்களின்ர குணம் தெரியாது. இந்தக் காலத்தில பணத்திலதான் , தகப்பன், சகோதரங்கள், உறவினர்கள் தங்கியிருக்கினம்.''

''என்னடி அறிவே சொல்லுறாய். 'அர்ப்பனுக்குப் பவுசு வந்தால் அர்த்த இராத்திரியிலும் குடை பிடிப்பான்' என்ற மாதிரியெல்லோ இருக்கு. இருந்தாப்போல் பணத்தைக் கண்டால் இப்படி மனங்கள் மாறுவதோ! அதுவும் தாய் தகப்பனுக்கு இப்படிச் செய்கிறதோ!''

''வெளிநாடுகளில எத்தனை விஷயங்கள் நடக்குது தெரியுமா? சனங்கள் காசு வந்தவுடன் பெற்றோர்களை வரவழைத்துவிட்டு பாசமா காட்டிக் கொண்டிருக்கினம். பணம் தான் தேடிக்கொண்டிருக்கினம். தங்கட பிள்ளைப்பேறு –பிள்ளைகளைப்பார்க்க – வீட்டுக்காவல் – வீடு துப்புரவாக்குதல் – சமையல் இப்படி எத்தனை வேலைகள் தெரியுமா வயது வந்த பெற்றோர்களுக்கு. அவர்களின் மனங்களைக் கூடப் புரிந்து கொள்ளமாட்டார்கள். பெற்ற பிள்ளைகள் சிலர் பெற்றோர்கள் ஆபத்தாக வருத்தமாக ஆஸ்பத்திரியில் இருந்தால் கூட எட்டியும் பார்க்கமாட்டார்கள். மறைவுச் செய்திகள் கேட்டாலும் மறைந்து விடுவார்கள். ஆனால், பெருமைகள் அந்தஸ்துகள் எல்லாம் விபரித்து பத்திரிகைகளில் மாத்திரம் ஒரு பக்கத்தை விலைக்கு வாங்குவார்கள்.''

''இது என்னடி நாடகம்?''

''என்ன என்று நினைக்கிறீங்கள்? எல்லாம் வெளிநாட்டில வந்து பணம் காட்டுகிற விளையாட்டுத்தான். நீங்கள் சொல்லுமாப்போல நாடகம் தான். அதில் என்ன சந்தேகம். கணவன் – மனைவி, பெற்றோர் – பிள்ளைகள், நண்பர்கள் – நண்பிகள், எல்லோருமே உலக மேடையில் நடித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். உண்மையான சிலதுகள் வஞ்சகமில்லாமல் நெஞ்சுக்குள் அழுதுகொண்டிருக்குதுகள்.''

''அதுசரி, ஏதோ சொந்த நாடுகளுக்கு திருப்பி அனுப்பினம் என்று ஏதோ சொன்னாய்?''

''என்ன இலங்கைக்கும் திருப்பி அனுப்பினமோ?''

''இலங்கைக்கு மாத்திரமில்லையாம். ஆசிய நாடுகளில் இருந்து வந்தவர்கள். அல்பானியா, அரபு நாடுகளிலிருந்து வந்தவர்கள், ஏன் அமெரிக்காவில் இருந்து வந்தவர்களைக் கூடத் திருப்பி அனுப்பினமாம்.''

''உனக்கு இந்த விடயங்கள் என்னெண்டு தெரியும்?''

''என்னுடைய சிநேகிதி உள்நாட்டு அலுவலகத்தில் (Immigration Department), இப்படித் திருப்பி அனுப்புகிறவர்களுக்கு பிளேன் வசதிகள் சரியாக அமையும் வரைக்கும், இருப்பிடங்கள் ஒதுக்கிக் கொடுக்கும் செக்ஷனில் வேலை பார்க்கிறாள். அவளுக்கு லண்டனில் இருந்து அனுப்புகிற ஆட்களின் பட்டியலே தெரியும்.''

''அப்படியே!''

''ஓம். அந்தப் பட்டியலில் இலங்கை ஆட்களின் பெயர்களைக் கண்டால் அவளுக்குச் சரியான கவலையாக இருக்கும். என்னிடம் கதைக்கும்போது கூறிக் கவலைப்படுவாள். இவங்களுக்கு என்ன தெரியும் எமது நாட்டில் சனங்கள் படுகிற கஷ்டங்களும், பிரச்சினைகளும்.''

''கொஞ்சம் பொறு. வேறு என்ன சொன்னவள்? உன்ர சிநேகிதி.''

''அனுப்பும்போது அவர்கள் திட்டமிட்டுத்தான் செயல்படுகிறார்கள் போல இருக்காம். அனுப்புவதற்குரிய பிளேன் வசதிகள், பாஸ்ப்போட் ஆயத்தங்கள் செய்யும் மட்டும், கிட்ட உள்ள பொலிஸில் வந்து கையெழுத்து வைக்கும்படி கூறுகிறார்களாம். இப்படி மாதத்திற்கு ஒரு முறை கையெழுத்துப் போடும்படி கூறிப்பின்னர் கிழமைக்கு ஒரு தடவையாகச் சட்டத்தைச் சுருக்கிக் கொண்டு வந்துவிடுவார்களாம்.''

''அறிவே! பேந்து என்ன நடக்குமாம்?''

''கிழமைக்கு ஒரு தடவை போய்க் கையெழுத்துப் போடத் தொடங்கும்போது, மிகவும் அவதானமாக இருக்க வேண்டுமாம்.''

''ஏனடியாம் அறிவே?''

''அப்படிப் போகும்போது ஒரு நாளில் அப்படியே மடக்கிப் பிளேனில் ஏற்றி விடுவார்களாம்.''

''திடீரென்றோ? ஒரு வித ஆயத்தமும் இல்லாமலோ! என்ன மனிதாபிமானமற்ற அரக்கத்தனமான செயல்.''

''பிரிட்டிஷ்காரன் அரக்கன் தானே! ஈராக் கைதிகளை எப்படிக் கொடுமைப்படுத்தி வதைத்திருக்கிறார்கள் என்று எல்லா ஊடகங்களும் மாறி மாறி உலகத்துக்குப் பரப்பிக் கொண்டிருக்கினம். பார்க்கவில்லையோ?''

''அதைவிடு. விஷயத்தைச் சொல்லு.''

''உங்களுக்குத் தெரியுமா? கையெழுத்துப் போடப்போறவர்கள் கைத்தொலைபேசி வைத்திருந்தால் முதலில் அதனை வாங்கி விடுவார்களாம். வெளித் தொடர்புகளைத் துண்டித்து விடுவார்களாம். சட்டத்தரணியையோ, இருப்பிடங்களில் உள்ளவர்களையோ அணுகமுடியாது செய்து விடுவார்களாம்.''

''அப்போ என்னுடைய 'பைல்' நம்பரைத் தாறேன். குடுத்துப்பாரேன். அனுப்புற பட்டியலில் என்னுடைய பெயரும் இருக்கோ என்று பார்க்க.''

''என்ன பகிடியே விடுகிறீங்க?''

''பகிடி இல்லை அறிவே. உண்மையாகத் தான் சொல்லுகிறேன். நானும் இப்போ ஒவ்வொரு கிழமையும் போய்த்தான் கையெழுத்துப்போடுகிறேன்.''

அவள் அதிர்ந்தே போய்விட்டாள்.

''உங்களை அனுப்பமாட்டார்கள். நம்பிக்கையாக இருக்கோ.''

''அறிவே! என்ன சொல்லுறாய். எனக்கு மட்டும்வேறு சட்டமா என்ன?''

''உங்களை அனுப்பமாட்டாங்கள்... அனுப்பமாட்டாங்கள். என்னுடைய நண்பிக்கு நடந்த விடயம் தெரியுமா?''

''என்ன நடந்தது?''

''அவள் கொழும்பிலே வேலை செய்த போது ஏற்பட்டது சிங்கள நண்பர் ஒருவரின் நட்பு. சிங்கள – தமிழ் உறவு. கேட்கவே ஆனந்தமாக இருக்கிறது. அன்பு என்கிறதை விலை கொடுத்து வாங்கிறதில்லை தானே! லண்டனுக்கு வந்தும் அவர்கள் குடும்பத்தோடு ஆறு வருடங்கள் வரை நீடித்திருக்க வேண்டும். மதிய நேரமாக இருக்க வேண்டும். நண்பியிடம் சாப்பாட்டுப் பார்சலைக் கொடுத்துவிட்டு கையெழுத்து இடச் சென்றவனை. கனநேரமாகியும் காணவில்லையாம். கடுங் குளிரில் கால்கள் கடுக்க காத்துக் கொண்டேயிருந்தாளாம். களைத்துப்போய் கவலையோடு திரும்பிவிட்டாளாம். கனத்துக் கொண்ட தாம் இதயம். களைப்பில் கட்டிலினில் கண்ணயர்ந்துவிட்டாளாம். காலையில் தொலைபேசி அழைப்பொன்று அலறிக் கொண்டிருந்ததாம். கொழும்பில் நின்று கதைக்கின்றேன். அவன் தொடர்ந்து விபரித்தானாம். அவள் பிரேமை பிடித்தவள் போல் ஆகிவிட்டாளாம். 'ஓ' வென்று வீடு பிளக்க அழுதாளாம். இனம் – மொழி – கலாசாரம் இவைகளைத் தாண்டி அந்த அன்பு வென்றுவிட்டதை உணர்ந்தேன். அவளால் அழுது தீர்க்கத்தான் முடியும்போல, அழுது கொண்டே எனக்குக் கூறிக்கொண்டிருந்தாள். அதுவும் ஒரு கொடுமைபோல் எனக்குப்பட்டது.''

''ஏனடி அறிவே! ஏன் அவள் திருமணம் செய்யவில்லையோ?''

''அவள் திருணம் செய்து இரண்டு பெரிய பெண்கள் இருக்கிறார்கள். திருமணம் செய்து பிள்ளைகள் இருந்தால் வேறு ஒருவரோடும் அன்பாக இருக்கக்கூடாதோ!''

''நான் அப்படி அன்பாக இருக்கக்கூடாது என்று சொன்னனானே? அதுகூட நாகரிகம், புரிந்துணர்வின் உச்சக்கட்டம் தான். கடமைகளில் சரியாக நடந்து கொள்ள வேண்டும்.''

''அது சரி. நீங்கள் ஏன் என்னை அறிவு... அறிவு... என்று கூப்பிடுகிறீர்கள்? நான் என்ன மொக்கு என்று தானே!'' சிரித்துக் கொண்டே கூறினாள்.

''இல்லை. யார் சொன்னது உன்னை மொக்கு என்று. நீ புத்திசாலி என்பதால் தான் கூறினேன். ஏன் அப்படி நினைத்தாய்?''

''எனக்கு 'நீ மொக்கு, ஒன்றும் தெரியாது, உன்ர சின்ன மண்டைக்குள் என்ன விளங்கப்போகுது?, விளங்காது' என்றெல்லாம் கேட்டுத்தான் பழக்கம்.''

''அதுதான் அப்படி நினைத்தாயோ? எவருக்கும் அப்படிக் கூறுவதற்கு உரிமை இல்லை. ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் ஏதோ திறமைகள் மறைந்து கிடக்கும். அதனை மற்றவர்கள் தட்டிக் கொடுக்க வேண்டும். அது தெரியாவிட்டால் அமைதியாக இருக்கவேண்டும். மனிதனால் முடியாதது என்று என்ன இருக்கிறது! கவலைப் படாதே!''

அவளுக்குச் சரியான சந்தோஷமும், உற்சாகமுமாய் இருக்கிறது போல.

''அறிவே இப்ப உன்ர கோபங்கள் எங்கே? எல்லாம் மறந்திட்டாய் என்ன? றிசீவரை வைக்கட்டா? நித்திரை வருகுது.''

''அவள் சிரித்துக்கொண்டே 'ஓம்' வையுங்கோ. கன நேரமாகக் கதைச்சிட்டோம் போல இருக்கு.''

''அறிவு பூர்வமாகத்தானே பல விடயங்கள் பற்றிக் கதைத்தோம். எவ்வளவு சந்தோஷம் தெரியுமா? பரவாயில்லை. இப்போ சந்தோஷமாய் இருக்கிறாய் தானே!''

''ஓம். சரியான சந்தோஷம்.''

''போய் சந்தோஷமாக நித்திரைக் கொள்.''

''குட் நைற்''

# கவிதைப் புனல்

## கனவுகள்

பௌர்ணமியை போல் ஒளி
வீசும் என் தேவதை
பசுமையான முகத்துடன்
பக்கத்தில் வந்தாள்
கட்டிக் காதலுடன்
அணைத்தேன்
தித்திக்கும் இதழ்களை
சுவைத்தேன் – தீரவில்லை
என் மோகம் அகலவில்லை
எனது ஆசைகள்
என் முத்தத்தில் அவள் மூழ்கினாள்
அவள் சங்கடத்துடன் என்னை
விட்டு விலகினாள் திடீர் என்று
கதவுகள் திறந்தன மெல்ல கனவும்
கலைந்து போய்விட்டது.

**மா.மனோகரன்**
**முத்துஐயன்கட்டு**

## பரிசு

இறைவா - நிஜவாழ்க்கையில்
- என்னை
அழவைத்து - விட்டாய்!
அந்த - இனிய கனவினிலாவது
என்னை - சிரிக்க வைப்பாய்
என்று - நினைத்தேன்
ஆனால் - நீயோ அந்த
கனவில் - கூட - என்னை
ஏமாற்றி - என் இதயத்திற்கு
கண்ணீரை - மட்டுமே
பரிசாய் - கொடுத்துவிட்டு
சென்றாயே!

**எஸ்.சசி**
**ஆனைவிழுந்தான்**

## கானல் விளையாட்டு

என் அன்பே!
அன்று நான்
பார்க்கும்போது
நீ எங்கோ
பார்ப்பது போல
பாசாங்கு பண்ணியது
பிடிக்கும்

மௌனமாக இருந்து
உன் ஆழ்மனதை
சீண்டிப் பார்ப்பது
பிடிக்கும்

அல்லல் படும்போது
மனப் பாரத்தைக்
குறைக்கும்
உன் இனிமை
நினைவுகள்
பிடிக்கும்

ஆனால்....!
நீயோ
ஒரு வார்த்தை
பேசாது
வெகுதூரம்
சென்றுவிட்டாய்
இதனால்
இன்று
உன் மனதில்
நான்
இருக்கின்றேனா?
என்று
புரியவில்லையடா?

**வி.கலா**
**யாழ். பல்கலைக்கழகம்**

## சுவரொட்டி

இரகசியமாய்
தோட்டாவை
முத்தமிட்ட
முத்தலிப்பை
பரகசியமாய்
தோட்டா
முத்தமிட்டபோது
சுவரெங்கும்
சுவரொட்டிகள்!

**சுபாஷ்**
**ஹட்டன்**

## காவியமே பாடட்டும்

இன்டர்நெற் யுகத்திலே
இளைஞனாய் வலம்வந்தேன்!
இதுவன்றோ நான் செய்த தப்பு
இன்று கைதியாய் வாடுகிறேன் நம்பு!

அடையாள அட்டையை - நான்
அடிக்கொருதரம் சரிபார்த்தும்!
அட நம்ம ஆண்டவர் மேல் சத்தியம்
அன்றொருநாள் நான்
தொலைந்துவிட்டேன்!

காதகன் நான் எங்கும்
சென்றுவிடவில்லை
காணாமல் போனோர்பட்டியலில்
அடங்கிவிட்டேன்!
காரணம் நான் ஓர் தமிழ் இளைஞன்
காவியமே பாடட்டும் என் சோக
கீதம்!

**அ.அமலராஜி**
**நெடுந்தீவு.**

## வந்துவிடு

உயிரோடு
உள்ளபோது
தேடினேன்
உன்னை
கிடைக்கவில்லை – நீ
ஆனால் இன்று
வந்துவிடு நண்பியே
என்னைப்
பூமியில் புதைக்கும்
முன்

**செ.மோகன்தாஸ்**
**முறிகண்டி**

## எண்ணிப் பார்க்கிறேன்

வெள்ளை நிற
சீருடையுடன்
பள்ளிக்கூடம் செல்லும்
அந்த நாட்களை
ஒரு கணம்
எண்ணிப் பார்க்கிறேன்

ஆங்கில வாத்தியார்
பள்ளிகூடம்
வரவில்லையென்றால்
நாம் படும் சந்தோசத்தில்
நண்பர்களுடன் சேர்ந்து
பகிடிவிடுவதை
எண்ணிப்பார்க்கிறேன்

படிபடியென
வாத்தியாரு
கூறும்போதெல்லாம்
அதை பகிடியென
விளையாட்டாக நினைத்ததை
எண்ணிப்பார்க்கிறேன்

பள்ளிக்கூடம் விட்டதும்
நண்பர்களுடன் விளையாடும்
விளையாட்டுக்களை
எண்ணிப்பார்க்கிறேன்
மீண்டும்அந்தப் பருவம்
வருமா.....?

**மு.ராஜேஷ்**
**புளியங்குளம்.**

## படுகொலைகள்

மரணங்கள் மலிந்த பூமியிது
உயிர்பறிக்கும் தருணங்கள் அறிகிலோம்
வினை விதைத்தவன் தினை அறுக்க
தினை விதைத்தவன் வினை அறுக்க
தரிசு நிலங்களாய்
மனித மனங்கள்

வழிப்பறி கொள்ளையாக
படுகொலைகள் அரங்கேற
கருத்தொன்றை கூற இன்று
பெருத்த பயம் எம் மத்தியில்

இனந்தெரியா கூட்டமென்பர்
உரிமை கோர யாருமில்லை
உருக்குலைந்த சடலமென்று
பொதுச் செலவில் அடக்கம் செய்வர்

மொத்தத்தில்
வாழும் உரிமை இங்கு நசுங்கி
வாழும் மனித இனம்
விழி பிதுங்கி நிற்கிறது

**த.சி.ரஞ்சன்**
**நாவலப்பிட்டி**

## சிதைவுறும் வாழ்வோவியம்

நான் வரைந்த நிறம் தீட்டிய
என் வாழ்வுச் சித்திரங்கள்
சிதறிய சிதலங்களாய்
சின்னா பின்னமாகிக் கிடக்கின்றன
தன் பயணங்களிலெல்லாம்
கூடு துறவாத நத்தையாய்
வேதனை மூடையை
சுமந்து திரியும் ஏழைக்கைதிநான்
எல்லை தாண்டிய
பயங்கரவாதமாய்
எனக்குள் வாலிபம் போர்செய்ய
வயிற்றுப் பசிக்காய்
வரிசையில் நிற்கிறேன்

**ஜோ.கிறிஸ்டி**
**களுத்துறைச் சிறையிலிருந்து**

## வானம் வசப்படும்

இறைவா!
என் இரவுகளுக்கு
கனவுகளிலாவது
நிலவுகளை தரிசிக்கும்
பாக்கியத்தைக் கொடு.
பனங்கள் தான்
மனங்களின் நிலவுகோலென்றால்
எந்த பாசமென்பதெல்லாம் - இங்கே
போலி வேஷங்களா?
அழகான கோபுரங்களை
மதிக்கும் உலகம்
ஏழைக் குடிசைகளை நன்றாய்
மிதிக்கவும் மறப்பதில்லை.
காலங்கள்தான் கரைகின்றன
இங்கே என்
கனவுகளின் ஆழமை
யாரறிவார்?

நினைப்பது நடந்ததும்
நடந்ததை நினைத்ததும்
யாருக்கும் இங்கே
நடந்தேறவில்லையே!
நிஜங்களே நிர்மூலமானபோது
கனவுகளை எண்ணி - நான்
ஏன் கலங்க வேண்டும்.
விழிகளின் வழிகள்
கண்ணீர்ச் சாலையில் என்றால்
வாழ்க்கை கணக்கை நான்
யாரிடம் கடன்பட்டேன்!
வானம் எனக்குமொருநாள்
வசப்படாமலா போகும் அதுவரை
வழிகளைத் தேடி
விழிகள் விரியும்

**கு.மகாலக்ஷ்மி**
**மிருசுவில்.**

## காதல் சுகமானது

காதலை
காதலியிடம்
சொல்லும் வரை
காதல் சுமையானது
காதலை
காதலியிடம்
சொல்லிவிட்டால்
காதல் சுகமானதே!

**எஸ்.பி.லக்குணா**
**வட்டக்கச்சி**

## பாவம் புத்தர்

குடும்பத்தினரை
நடுத்தெருவில்
விட்டு விலகிய சித்தார்த்தனை
நடுநிசியில் பிடித்திழுத்து
நடுவீதியில்
சிலையாக
நட்டுவைத்தார் புத்தராக...
இனியும்
எழுந்தோடி விடாதபடி
இராணுவமும்,
காவற்றுறையினரும்
கம்பிவேலி போட்டு, மண்
மூடையடுக்கி
காவல் புரிகின்றனர்
இராவணனார் பூமியிலே.....

**ச.வாமதேவன்**
**வவுனியா.**

## சேமிப்பு

என்னை மறந்துவிடு என்று நீ
சொல்லுகின்ற ஒவ்வொரு நிமிடமும்
வட்டியுடன் அதிகரிக்கின்றன
உன் நினைவுகள் - ஏனெனில்
நீ தந்த காதல் எனது
உள்ளத்து வங்கியிலே
சேமிப்பு எனும் பெயரில்
இருப்பதனால்

**ம.நிஷா**
**முல்லைத்தீவு**

## சொல்லமாட்டேன்

நிலவு என்று சொல்லமாட்டேன்
தேய்ந்துவிடுவாய்
நிழல் என்று சொல்லமாட்டேன்
மறைந்து விடுவாய்
கவி என்று சொல்லமாட்டேன்
தீர்ந்து விடுவாய்
உறவு என்று சொல்லமாட்டேன்
பிரிந்து விடுவாய்
உயிர் என்று சொல்லமாட்டேன்
என்னை ஏமாற்றிவிடுவாய்

**கு.ரஞ்சித்**
**பனிப்புலம்.**

## தேடல்

அவள் தேடிக்கொண்டிருப்பது
தொலைந்துபோன
இதயத்தையல்ல
முடிந்து போன
வாழ்க்கையை

**ச.பிரதீபா மீசாலை**

## சந்தோசத்தைக் கெடுக்கும் சமிக்ஞைகள்

புரிந்துணர்வு ஒப்பந்தம்
முறிந்து போகாமலிருப்பதும்
பொதுக்கட்டமைப்புப் பணியை
முடிக்காமல் நடாத்துவதும்
பரிந்துரைத்த சமாதான
முயற்சிகளை
சரிந்து விடாமல் காப்பதும்
பொருந்திவந்த - நோர்வே
சமாதானத் தூதுவர்களது
பெருந்த முயற்சியும்
தலையாய கடமையுமே
இருண்ட யுகத்துக்கு
இட்டுச் செல்லும்
வரண்ட யுத்தம்
இனி இங்கு வர வேண்டாம்
குண்டுச் சத்தம்
நின்று போகுது
என்றிருந்த எம் மக்களுக்கு
ஒன்றிரண்டாய்
ஆங்காங்கே
அடிவயிற்றை கலக்கும்
குண்டுத் தாக்குதல்கள்
இடம்பெற்று வருவது
சண்டை வரும் சமிக்ஞையை
காட்டி
சந்தோசத்தை கெடுக்கிறதே!


**கவிக்குயிலன்**
**சேனையூர் -06**

## சிரிக்க சிந்திக்க டிப்ஸ்



*அமெரிக்காவின் பூர்வீக மக்களான செவ்விந்தியர்கள் பெருமளவில் வசிக்கும் ஒக்லஹாமா நகரில் வருடந்தோறும் ஜூன் 3 முதல் 5 வரை சிவந்த பூமி விழா இடம்பெறுகிறது. அப்போது இத்தகைய பாரம்பரிய உடைகளில் செவ்விந்தியர் தோன்றுவர். பெண்களின் பக்ஸ்கின் நடனங்களும் ஆண்களின் யுத்த நடனங்களும் பல்வேறு சடங்குகளும் அப்போது நடைபெறும்.

*படத்தில் நீங்கள் பார்க்கும் இராட்சத ஆமையும், குட்டி நீர் யானையும் நண்பர்களாய், தாயும் பிள்ளையும் போல் வாழ்ந்து வருகின்றன. அண்மையில் ஏற்பட்ட சுனாமி தாக்குதலில் தன் தாயை இழந்த நீர் யானை ஆமையிடம் அடைக்கலம் புகுந்தது. பின்னர் இவை நண்பர்களாகிவிட்டன. இவை ஆபிரிக்கா கண்டத்திலுள்ள கென்யா நாட்டில் உள்ளன.



* தினசரிப் பத்திரிகைகளில் முதன்முதலாக படங்களை போட்டுச் செய்திகள் வெளியிட்டவர் வில்லியம் தொமஸ் ஸ்டேட் என்பவர். இவர் 'பால்மேல் கஸட்' என்னும் லண்டன் பத்திரிகையில் 1888 இல் இதை அறிமுகப்படுத்தினார். இவரைப் புலனாய்வுப் பத்திரிகைத் துறையின் தந்தை என்று அழைக்கின்றனர்.

*இவர் ஒரு றப்பர் மனிதன். பெயர், கேரிடர்னர். தன் உடலில் உள்ள தசைகளை படத்தில் காட்டுவது போல் இழுத்துக்காட்டுவதில் கில்லாடி. இதைப் போன்று இவர் கழுத்து, முகம், கை, கால்களின் தோல்களை இழுத்துக் காட்டி உலகசாதனை ஏற்படுத்தி இருக்கிறார் என்றால் பார்த்துக்கொள்ளுங்களேன்.




* வாக்கிற்கு இனிமை வேண்டும்
நல்லோர் நட்பு வேண்டும்
உடல் நலம் வேண்டும்.
நிம்மதியான மனம் வேண்டும்
பசிக்கு உணவு வேண்டும்

* நான்
பட்ட மரமாய் நிற்பது
நீ
மரங்கொத்தியாய் வந்து
கொத்த வேண்டும்
என்பதற்காக அல்ல.
என் மனதில் உயிர்ப்பித்துள்ள
உன் மீதான ஆசைப் புழுக்களை
நீயே!
கொத்தித்தின்று
அழிப்பதற்காகத்தான்.

* வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்; என்று கூறுவர். படத்திலுள்ளவருக்குச் சாதனை ஏற்படுத்த ஒரு கார் டயர் போதும். பிரெஞ்சு நாட்டுக்காரரான இவரின் பெயர் மைக்கேல் லோட்டிக்கோ. கார் டயரைக் கையில் எடுக்கும் இவர் கரும்பைக் கடித்து உண்பதுபோல அதைக் கடித்துச் சாப்பிடுகிறார். இரும்பையும் விட்டு வைப்பதில்லை இந்தச் சாதனையாளர்.









## தெரிந்து கொள்ளுங்கள்

01. இலங்கையின் முதல் அரசன் யார்?

இராவணேஸ்வரன்.

02. இலங்கையின் பழைய பெயர்கள் எவை?

தப்ரபேன், இரத்தின தீபம், செரண்டிப், சிலோன்.

03. இலங்கையின் மிக உயர்ந்த மலைச்சிகரம் எது?

பீதுறுதாலகால மலை.

04. இலங்கையின் மிக நீளமான நதி எது?

மகாவலி கங்கை.

05. இலங்கையின் முதல் பெண் பிரதம மந்திரி யார்?

திருமதி ஸ்ரீ மாவோ பண்டாரநாயக்க.

**எம்.ஷாகனா,**
**தரம்3,**
**கிங்ஸ்டன் சர்வதேசக் கல்லூரி, கொழும்பு — 06**

## எமது நாடு

எமது நாடு இலங்கை. இது இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்துள்ளது. எமது நாட்டின் ஜனாதிபதி பெயர் சந்திரிக்கா குமாரதுங்க. எமது நாடு 25 மாவட்டங்களையும் 9 மாகாணங்களையும் கொண்டது. தேயிலை, இறப்பர், தென்னை போன்றவை எமது நாட்டின் ஏற்றுமதிப் பொருள்களாக உள்ளன. இயற்கை வளமிக்க எமது நாட்டை வெளிநாட்டவர்கள் அதிகம் விரும்புகின்றனர்.

**எஸ். பிரவிந்தன், தரம் 4,**
**கிங்ஸ்டன் சர்வதேசக் கல்லூரி,**
**கொழும்பு 6.**

1. கண்ணாடித் தொழிற்சாலை அமைந்துள்ள இடம் எது?

நாத்தாண்டியா.

2. இலங்கையின் பெரிய தாவரவியல் பூங்கா எது?

பேராதனைப் பூங்கா.

3. இலங்கை மக்களின் பிரதான உணவு எது?

சோறு.

4. இலங்கை எந்த சமுத்திரத்தில் அமைந்துள்ளது?

இந்த சமுத்திரத்தில்.

5. இலங்கையில் பறவைகள் சரணாலயம் எங்கு உள்ளது?

குமண.

**பிரிந்துஜா, தரம் 4**
**கிளி/ கனகாம்பிகைக் குளம்.**

# புலி மீசை



அந்த ஊரின் மலை அடிவாரத்தில் ஒரு சாது இருந்தார். அவர், பல அதிசயங்களை நிகழ்த்தக்கூடியவர்.

ஒருபெண் அவரைத்தேடி வந்தாள். மிகவும் முரடனாக இருக்கும் தன் மகனைத் திருத்துமாறு வேட்டு சாதுவின் பாதங்களில் விழுந்தாள்.

"அதற்கான மருந்து தயார். புலியின் மீசையிலிருந்து ஒரு முடி வேண்டும்'' என்றார் சாது.

''ஐயோ... என்னால அதை எப்படிக் கொண்டுவர முடியும்?'' என்றாள் அந்தப் பெண்.

'' அது இருந்தால்தான் மருந்து தயாரிக்க முடியும். எப்படியாவது கொண்டு வா'' என்று கூறிவிட்டார் சாது.

அன்று இரவு, சாதமும் கறிக்குழம்பும் எடுத்துக் கொண்டு புலி நடமாடும் காட்டுப்பகுதிக்குச் சென்றாள் அந்தப் பெண். ஆனால், புலி வெளியே வரவில்லை. அடுத்த இரவும் குகைக்குச் சென்று புலியைச் சாப்பிட அழைத்தாள். அன்றும் அது வரவில்லை.

அப்படியே தொடர்ந்து செய்தாள். ஒரு நாள் புலி வெளியே வந்து, அவளைப் பார்த்து உறுமி விட்டுப் போனது. அவளுக்கு மிகவும் பயமாக இருந்தது.

மறுநாள் இரவும் புலி வெளியே வந்தது. அவளைச் சற்று நேரம் உற்றுப் பார்த்தது. பிறகு அவள் கொண்டு வந்த உணவைச் சாப்பிட்டது.

இதேபோல் ஆறு மாதங்கள் ஓடின. இப்போது புலி அவளைப் பார்த்து உறுமுவதில்லை. ஒருநாள் புலியின் தலையைத் தடவிக் கொடுத்துக்கொண்டே, அதன் மீசையிலிருந்து ஒரு முடியைப் பிடுங்கினாள். புலி கோபப்படவில்லை! அவள் சந்தோஷமாக சாதுவிடம் வந்து நடந்ததைச் சொல்லி புலியின் மீசை முடியைக் கொடுத்தாள்.

சாது சொன்னார்: ''புலியையே ஆறு மாதத்தில் உன் அன்பால் அடக்கிவிட்டாயே... உன் மகன் என்ன புலியைவிடக் கொடியவனா? அவனையும் உன் அன்பால் திருத்த முடியாதா, என்ன?''

மேல் படத்துக்கும் அதன் கீழ்ப்படத்துக்கும் ஆறு வித்தியாசங்கள் இருக்கின்றன. கண்டுபிடியுங்களேன்!





# சுதந்திரமாக வாழ ஆசைப்படும் டீன்ஏஜ் பெண்கள்

மனித வளர்ச்சியின் மிக முக்கியமான பருவம் டீன்ஏஜ் பருவம். இந்த பருவத்தில் உணர்ச்சிகள் அதிகமாக எழும். புதுமையை நாடும். பழமை மேல் ஒரு அலட்சியம் உண்டாகும். கற்பனை உலகில் வாழத் துடிக்கும் பருவம் இது. காதல், வித்தியாசமான உணவு, நண்பர்களுடன் அரட்டை, சினிமா, டி.வி இது போன்ற விடயங்களில் அதிக நாட்டம் ஏற்படும். தன்னை ஆண்கள் பார்க்க வேண்டும் என்று மனம் துடிக்கும். உடல் பெருத்து விட்டால் ஆண்கள் பார்க்காமல் போய்விடுவார்கள் என்ற பயத்தில் சாப்பாட்டைக் குறைத்துக் கொள்வார்கள்.

இவைதான் பெண்கள் குழந்தைப் பருவத்தைத் தாண்டி டீன்ஏஜ் பருவத்தை எட்டும்போது அடையும் பொதுவான மாற்றங்கள் எனலாம். இந்த மாற்றங்கள்தான் டீன்ஏஜ்பெண்களின் எதிர்கால வாழ்வையே நிர்ணயிக்கக் கூடியவை. இந்தக் காலகட்டத்தில் அவர்களை வழி நடத்துவதற்கு யாராவது இல்லாவிட்டால், அவர்கள் திசைமாறிப் போய்விடுவார்கள்.

மற்றும் பெற்றவர்களையே எதிரியாக பார்க்கும் பருவம் என்றால் அது சும்மாவா? எரிச்சல் அடையும் மகளை பெற்றோர் தான் பொறுமையாக வழி நடத்தவேண்டும். முக்கியமாக முழு சமூகமும் இவர்கள் பின் நின்று வழிநடத்த வேண்டும். முதலில் இந்தப் பருவத்துக்கு என்னென்ன பிரச்சினைகள் கவலைகள் என்பதை இனங்கண்டு தீர்த்து விடுதல் வேண்டும். சுதந்திரமாக வாழ நினைக்கும் டீன்ஏஜ் பெண்கள் கவனமாகவும் இருத்தல் வேண்டும்.

டீன்ஏஜ் வயதை அடைந்ததும் ஒரு பெண் தாயாகத் தயாராகி விட்டதற்கு அடையாளமாக அவளுக்கு மாதவிலக்கு நிகழும். இயற்கையாக நடக்கும் இந்த மாறுதல்களைக் கண்டு அவர்கள் அஞ்ச வேண்டியது இல்லை. மன தைரியத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். மனம் தளர்ந்து படிப்பைகோட்டைவிட்டு விடக்கூடாது. அடுத்ததாக தூக்கம் முக்கியமான பிரச்சினையாகும். இவர்களால் உரிய நேரத்தில் தூங்கி எழுந்திருக்க முடியாது. இந்த சமயத்தில் ஏதேதோ சிந்தனைகள் எழும். ஆசைகள் உருவாகும். இரவு ஒரு மணிக்குத் தூக்கம் வந்து காலை 10 மணி வரை தூங்குவார்கள். ஆகவே இந்த வயதுப் பெண்கள் நேரத்துடன் நித்திரை செய்தல் வேண்டும்.

மற்றும் டீன்ஏஜ் பருவத்தில் எழும் மிகப் பெரிய பிரச்சினை உடல்தான். ஆண்கள், தொட்டால் அருவருப்புக் கூடும். அதேசமயம் தனக்குப் பிடித்துவிட்ட ஆண்களைத் தொட்டுப்பேசத் தூண்டும். இப்படி இரண்டு மாறுபட்ட உணர்வுகள் இந்த பருவத்தில்தான் எழும். மிகவும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டிய கட்டம் இது.

டீன்ஏஜ் பருவத்தில்தான் பெற்றோர் மடியில் நெருப்பை கட்டிக் கொண்டு இருப்பதாகக் கூறுவதிலிருந்தே இந்த பருவம் எவ்வளவு தீவிரமானது என்பதைப்புரிந்து கொள்ள முடியும். முடிந்த அளவு ஆண்களைத் தொட்டுப் பேசும் வழக்கத்தைத் தவிர்க்கலாம். யாராவது பாராட்டி கை கொடுத்தால்கூட நீண்ட நேரம் குலுக்கக் கூடாது.

வீட்டிலோ பள்ளியிலோ தனிமையில் இருக்கக்கூடாது. அறிமுகம் இல்லாத ஆண்கள் வீட்டிற்கு வரும்போது அவர்களை தவிர்ப்பது நல்லது. யாராவது, நீ அழகாக இருக்கிறாய்; உன் உடம்பு சிம்ரன் உடம்பு போல இருக்கு என்று வர்ணித்தால் உங்களை அறியாமலே அதில் ஒரு மயக்கம் வரும். மிக மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டியது இந்த வர்ணனையாளர்களிடம்தான். ''இது தேவையில்லாதது' என்று நீங்களே முடிவு செய்து அந்தநபரிடம் இருந்து ஒதுங்க ஆரம்பித்தாலே நீங்கள் டீன் ஏஜ் வயதில் பக்குவமடைந்து விட்டீர்கள் எனக் கருதலாம். எல்லாவற்றிற்கும் மேலாக உங்கள் உணர்வுகளுக்கு நீங்கள் முதலில் மதிப்புக் கொடுங்கள், பெரியவர்களுக்கு உரிய மரியாதை கொடுக்க வேண்டும். உங்களுக்கு எப்போது எந்தக் குழப்பம் ஏற்பட்டாலும் உடனே பெற்றோரிடம் விவரியுங்கள். அப்போது பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும். டீன்ஏஜில் நம்மை மீறி நடப்பதாக உணர்ந்தால் அதன் எல்லை என்ன? விளைவுகள் என்ன? என்பதை ஒரு நிமிடம் யோசித்து கட்டுப்படுத்த வேண்டும்.

ஆகவே டீன்ஏஜ் பருவத்தில் பெற்றோரின் பங்கு முக்கியமானது. அவர்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். உடல் ரீதியாகவும் மனரீதியாகவும் பாதிப்பு ஏற்படக்கூடும். எனவே அவர்களிடம் அன்பாக எடுத்துக் கூறி நல்வழிப்படுத்துங்கள். சுதந்திரமாக வாழ ஆசைப்படும் உங்கள் பிள்ளைகளின் வரம்பு மீறாமல் பார்த்துக் கொள்ளுங்கள்; பெற்றோர்களே!




## வாரம் ஒரு குளிர்பானம்




*தேவையானவை:—*

நன்கு பழுத்த பப்பாளிப் பழத்துண்டுகள்— 2 கப்
எலுமிச்சம் பழச்சாறு — 1 டேபிள் ஸ்பூன்.
சீனி— 2 டேபிள் ஸ்பூன்.
புதினா அல்லது துளசி இலைகள்— 10.
ஐஸ் கட்டிகள்— தேவைக்கு.

*செய்முறை:*

புதினா தவிர்ந்த மற்ற எல்லாப் பொருட்களையும் சேர்த்து மிக்ஸியில் அரையுங்கள். மிகவும் கெட்டியாக இருந்தால் ஒரு கப் தண்ணீர் சேர்க்கலாம். இறுதியில் ஐஸ் கட்டிகள், சிறிதாக நறுக்கிய புதினா இலைகள் சேர்த்து அலங்கரித்து பரிமாறலாம்.

## அழகுக்கு அழகு சேர்க்க



❖ தினமும் காலையில் கடலை மாவு, தக்காளி கூழ், ரோஸ் வாட்டர் இவைகளை கலந்து, முகத்தில் பற்று போன்று போடவேண்டும். அரை மணி நேரத்தின் பின்பு குளிர்ந்த நீர் கொண்டு முகத்தை கழுவவேண்டும். முகம் 'பிரெஷ்ஷாக' இருக்கும்.

❖ கசகசாவை வெந்நீரில் ஊற வைத்து, மறுநாள் காலையில் அரைத்து முகம், கழுத்து பகுதியில் பூசி அரை மணி கழிந்து கழுவினால் சருமம் மென்மையாகும்.

❖ சாதம் வடித்த கஞ்சியை கீழே கொட்டாமல் தலை முடியில் நன்றாக தேய்த்து சிறிது நேரம் ஊறிய பின்பு அலசவும். தலை முடி மிகவும் மிருதுவாகவும் பளபளப்பாகவும் இருக்கும்.


❖ வெயிலினால் உதடு கறுத்தவர்கள் கொத்தமல்லி சாற்றை இரவில் உதடுகளில் மீது பூசி வர நாளடைவில் நிறம் மாறும்.

❖ பாலாடையையும், முட்டைவெள்கருவையும் இரவில் கை,கால்களில் தடவி,காலையில் பயத்தம் மாவால் தேய்த்து கழுவினால், வெயிலால் பாதிப்பேற்படாது. கைகள், கால்கள், சருமம் பளிச்சென்று மாறிடும்.

சஜி - கொழும்பு.

## அன்றாட வேலைப் பளு காரணமாகத் தலைவலி ஏற்படுவது சகஜம் தலைவலி வந்தால் ....

ஒரு துண்டு சுக்கை நன்றாக அரைத்து தலையிலும், நெற்றியிலும் தடவி அழுத்தி தேய்த்தால் தலைவலி மாயமாக மறையும்.



ஆறு கிராம்பை பசும்பால் விட்டு நன்றாக விழுதாக அரைக்கவும். அதனுடன் மேலும் கொஞ்சம் பால் சேர்த்து அடுப்பில் கொதிக்க வைத்து, கையில் ஒட்டும் அளவிற்கு வந்ததும் இறக்கவும். வெதுவெதுப்பான சூட்டில் அதை நெற்றியில் பற்றுப் போட்டால் தலைவலி நீங்கி விடும்.

வேப்பம் கொட்டையை வெந்நீர் விட்டு கரகரப்பான கல்லில் உரசி, அந்த சாற்றைத் தடவினாலும் தலைவலி நீங்கும்.

பொறுக்க முடிந்த அளவான சூடான வெந்நீரில் சிறிது உப்பு சேர்த்து, ஒரு மூடி எலுமிச்சம் சாறு சேர்த்துப் பருகினால் தலைவலி பறந்து போகும்.

கோப்பி,டீ போன்ற பானங்கள் அருந்துவதற்கு பதில் கொத்தமல்லி, கோப்பித் தூள், இஞ்சி இவற்றை ஒன்றாக சேர்த்து கசாயம் செய்து, தேன் கலந்து அருந்தினால் பித்தத்தினால் ஏற்பட்ட தலைவலி நீங்கும்.

# சாதிப் பிரச்சினையால் தடைப்படும் திருமணங்கள்

ஏழை-பணக்காரர், உயர்ந்தவர்- தாழ்ந்தவர் என்ற வேறுபாடு எம் மத்தியில் காணப்படுவதைப் போன்று சாதியிலும் உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதி எனும் வேறுபாடு எம் மத்தியில் காணப்படுவது யதார்த்தமே!

சாதிப் பாகுபாடு என்பது அன்று தொட்டு இன்று வரை புரையோடும் புற்றுநோயாகவே காணப்படுகின்றமை மிகவும் வேதனைப்படக்கூடிய விடயம் அல்லவா! இந்நிலை மாற வேண்டுமாயின் எம்மவர் மத்தியில் ஓர் புரிந்துணர்வு வேண்டும். எமக்கு ஏதாவது ஓர் விசேட நிகழ்வு என்றால், அதில் முன் நிற்பது இச் சாதி தான். ஏன்? இவ்வாறான நிலை உருவாக நாம் இடம் கொடுக்க வேண்டும். சாதி என்பது மனிதர்களால் வகுக்கப்பட்ட சம்பிரதாயமே அன்றி சட்டம் அல்ல! சாதிப் பாகுபாட்டால் எத்தனையோ குடும்பங்கள் அழிந்திருக்கின்றன. எத்தனையோ பேர் அநாதரவாக விடப்பட்டுள்ளன. இவ்வாறு தீராத புற்று நோயாக புரையோடியிருக்கின்றது இச் சாதிப் பிரச்சினை.

சாதியின் அத்தியாயமே திருமணப்பேச்சில் தான் ஆரம்பமாகின்றது. சாதி விட்டு சாதி மணம் புரிந்தவர்களை தள்ளி வைக்கும் இச்சமுதாயம் அதற்கு சம்பிரதாயங்களை மீறக்கூடாது என்று நொண்டிச்சாட்டு வேறு கூறுகின்றனது. அவள் நின்றால் குற்றம், இருந்தால் குற்றம், பார்த்தால் குற்றம் இப்படி எதற்கும் குற்றம் காணுகின்றனர். இதனால் அவள் படும் வேதனைகள் அளவுக்கு மீறியவை. இந்த நிலைமை மாற வேண்டுமாயின் திருமணப்பேச்சின் போது சாதியை முன்வைக்காது பேசுதல் ஒன்றும் தவறல்ல.

சாதிப் பாகுபாட்டினால் வீடு, வாசல், சொத்து, சுகம் என்பவற்றை இழந்து அநாதரவாக நிற்கும் பெண்கள் எத்தனை? எத்தனை?

எம்மைப் படைத்த கடவுள் ஆண்,



சாதி என்பது மனிதர்களால் வகுக்கப்பட்ட சம்பிரதாயமே அன்றி சட்டம் அல்ல!

பெண் என்னும் இரு சாதிகளைத் தான் படைத்தானே தவிர, நீ உயர்ந்த சாதி, நீ தாழ்ந்த சாதி என படைக்கவில்லை.

இதற்கு எடுத்துக்காட்டாக கூறும் போது, கிருஷ்ணசாமி ரெட்டியார் என்ற நீதிபதி ஒருவர் இருந்தார். இவர் ஓர் சமய அறிஞர். இவரிடம் ஒருவர் வந்து கடவுள் எந்த சாதி என்று கேட்டாராம். அதற்கு நீதிபதி, உயிர்களின் உடலை உருவாக்குவதால் கடவுள் 'குயவர் சாதி என்றும், சதாகாலமும் நம்மை பார்த்துக்கொண்டிருப்பதால் அவர் 'பார்பர்' எனவும், நாம் செய்யும் நைவேத்தியத்தை சாப்பிடுவதால் 'பிள்ளை' எனவும், நம் உடம்பில் படைக்கலன்களான ஐம்பொறிகளை ஆள்வதால் 'படையச்சி' என்றும், அவரே நாயகன் என்பதால் 'நாயக்கர்' எனவும், பக்தர் உள்ளங்களை கொள்ளைகொள்வதால் 'கள்ளர்' என்றும், அனைவரது அகத்திலேயே குடியிருப்பதால் 'அகம்படியார்' என்றும் பதிலளித்தார். கேட்டவர் அப்படியே வாயடைத்துப் போனாராம்.

ஆம்! கடவுளுக்கே சாதி இல்லாத போது நாம் ஏன் சாதிப் பாகுபாடு கொண்டு அடுத்தவர் மனதைப் புண்படுத்த வேண்டும். சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். கற்பின் வலிமையால் அருந்ததி என்பவள் மணலையே சோறாக்கி மாமுனிவரான வசிட்டரையே திருமணம் புரிந்தாள். தாழ்த்தப்பட்ட சாதியில் உள்ள அருந்ததியையே மணம் புரிந்தவர் வசிட்ட முனிவர். நாம் அம்மி மிதித்து அருந்ததி நட்சத்திரம் பார்க்கிறோமே அந்த அருந்ததியைத்தான் இந்த மாமுனிவர் மணம் புரிந்தார்.

ஆகவே அக்காலத்திலேயே சாதி பாராது திருமணம் ஏற்றுக் கொள்ளப்பட்ட போது, இக்காலத்தில் ஏன்? சாதிப் பிரச்சினையினால் திருமணத்தை தடை செய்யப் பார்க்கிறார்கள். பெரியோர்கள் இளம் உள்ளங்களின் மனதை நோகடிக்காது, சாதி என்ற மாயையை விடுத்து மனப்பொருத்தத்தை மாத்திரம் கருத்தில்கொண்டு திருமணத்தை நடத்திவைப்பது சாலச்சிறந்தது.

எனவே இவ் நவயுகத்தில் அன்புக்கு மாத்திரம் கட்டுப்பட்டு அன்பாக இருந்து இனவெறியை ஒழிப்பது போல் சாதி வெறியை அழிப்போமாக!



நவநாகரீக உலகில் நவீன உடைகள், அழகு நங்கையரின் உடல்களை அலங்கரிக்கின்றன. ஆனால், அவ்வளவையும் காட்டிவிடுவது என்பதுதான் இன்றைய பாஷன் தத்துவம். உண்மையான அழகு உடம்பில் இருக்கும் போது ஆடைபோட்டு அதை ஏன் மூட வேண்டும் என்பதுவே இன்றைய பாஷன் வாதிகளின் வாதம். இந்த வாதங்களை எல்லாம் ஒரு புறம் வைத்துவிட்டு முடிந்தவரை மூடியிருக்கிறேன்; எனது அழகு என்ன குறைந்து விட்டதா என்று கேட்கிறாரோ இந்த மாடல் அழகி.




# தலைமுடியைக் காத்திடும்... பிரச்சினைகளைத் தீர்த்திடும்...

## BIOTINEX-E

பயோட்டினெக்ஸ்-E

விட்டமின் E+H அடங்கியது




பயோட்டினெக்ஸ்-E இல் விட்டமின் E+H சரியான அளவில் சேர்க்கப்பட்டுள்ளதால் தலைமுடியின் வேர்களுக்கும், சருமத்திற்கும் போஷாக்களித்து, இளவயதில் சருமம் சுருங்குவதையும், கேசம் உதிர்வதையும் முற்றாகத் தடுக்கிறது.

தினமும் இரண்டு கப்சூல்கள் வீதம் மூன்று மாதத்திற்கு தொடர்ந்து பாவித்து சிறந்த பலனை பெறலாம்.

எல்லா முன்னணி பாமசிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

அருமையான கூந்தல்... அழகான மேனி...

Marketed by: ARKEM, Colombo. Tel: 2470290

# வவுனியாவில்!

சுடர் ஒளி

THE SUDAR OLI

உதயன்

## கிளைப் பணிமனை

*வவுனியா நகர மையத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.*

58, கண்டிவீதி,

(பஸ்நிலையம் முன்பாக, கண்டிவீதி - முதலாம் குறுக்குத்தெருச் சந்தியில்)

வவுனியா.

தொலைபேசி: 024 222 4848, 071 422 0008

## HOTEL WESTEERN (PVT) LTD




Danial Banquet Hall (டேனியேல் பென்குவட் மண்டபம்) முற்றும் குளிரூட்டப்பட்ட 400 பேர் அமரக்கூடிய திருமண மண்டபம், தரமான உணவு வகைகளுடன் கூடிய சிறந்த உபசரிப்பு சேவை, இலங்கை சுற்றுலா சபையினால் அங்கீகரிக்கப்பட்ட விருந்தினர்களுக்கான இலவச காப்புறுதி.

சிறந்த பராமரிப்பு சேவையுடன் கூடிய குளிரூட்டப்பட்ட அறைகள், தொலைபேசி, I.D.D., தொலைக்காட்சி, மினிபார், ரெஸ்டூரண்ட், பார், விருந்துபசார மற்றும் மாநாட்டு மண்டபம், விமான நிலையத்துக்கான போக்குவரத்து, வாடகை கார் மற்றும் கடன் அட்டை வசதி போன்ற உன்னத சேவைகள்.

**No. 35, Frankfourt Place, Bambalapitiya, Colombo - 04**

T.P.: +94 11 2507161, +94 11 250 7162, +94 11 2507163, +94 11 4518485
Fax : +94 11 4518481 E-mail : info@hotelwesteern.com
Website : www. hotelwesteern.com

# EXPOAIR எக்ஸ்போ எயார்

*your friend in the skies...*

வானத்தில் உங்கள் நண்பன்...



**யாழ் – கொழும்பு**

விமான பயணத்திற்கு அழையுங்கள்:
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891/6297, 0772 349999/ 8888
கொழும்பில் - 0112372952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360290/91
Email- jaffna@expoavi.com, reservations@expoavi.com



# திருகோணமலையில்...

சுடர் ஒளி உதயன் **விளம்பர பணிமனை**

எமது பத்திரிகைகளில் உங்களது விளம்பரங்களை பிரசுரிக்க விரும்பினால் அவற்றினை திருகோணமலை 39, அருணகிரி வீதியில் அமைந்திருக்கும் எமது விளம்பர பணிமனையில் கையளிக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு:-

விளம்பர முகாமையாளர்
'உதயன்' 'சுடர் ஒளி' விளம்பரப்பிரிவு
85, ஜெயந்த மல்லி மாராச்சி மாவத்தை, கொழும்பு - 14.
011 4734401 - 3, 011 2399666 - 70

திருகோணமலையில் தொடர்புகளுக்கான தொலைபேசி இலக்கம் 026 2220783, 026 2221670


இப் பத்திரிகை கொழும்பு - 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2005, ஆகஸ்ட் 14 ஆம் திகதி வெளியிடப்பட்டது.